Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 201 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 1, சனி 15.06.2013

தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°C 28°C

இந்தியன்

பக். 06

தனித் தெலுங்கானா வலியுறுத்திப் பெரும் போராட்டம்; சட்ட சபை முற்றுகை

உலகம்

பக். 07

சிரிய கிளர்ச்சியாளருக்கு அமெரிக்க ஆயுதங்கள்

விளையாட்டு

பக். 23

உசைன் போல்ட் முதலிடம்

இறுதிப் போரில் கைதானவர் நிரபராதி

யாழ்ப்பாணம், ஜூன் 15

போரின் இறுதிக்கட்டத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஒருவருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட 3 குற்றச்சாட்டுக்களும் உண்மை விளம்பல் விசாரணையின் போது நிராகரிக்கப்பட்டமையால் அவரை நிரபராதியாக இனங்கண்டு விடுதலை செய்தது யாழ். மேல் நீதிமன்று.

இந்த வழக்கு தீர்வுக்காக யாழ். மேல் நீதிமன்றில் ஆணையாளர் எஸ். பரமராஜா

தொடர்ச்சி: பக்கம் 21

காணிகளை அடையாளம் காட்ட மக்கள் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

எங்கள் காணிகளை படையினருக்கு வழங்குவதற்காக அடையாளம் காட்ட மாட்டோம் என்று ஆனைக்கோட்டை கூழாவடி பகுதி மக்கள் நில ஆணையாளர்களிடம் தெரிவித்தனர்.

காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்காக குறித்த பகுதியில் நில அளவை செய்வதற்காக நேற்று வெள்ளிக்கிழமை காலை நில அளவை திணைக்கள அதிகாரிகள் சென்றுள்ளனர். இதன்போதே மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டி உள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் ஆனைக்கோட்டைக் கூழாவடிப் பகுதியில் இராணுவ முகாம் அமைந்துள்ள தனியார் காணி சுவீகரிக்கப்

தொடர்ச்சி: பக்கம் 21

13 இல் கைவைத்தால் துறப்பேன் பதவியை

போராட்டத்தைக் கைவிடேன்: அமைச்சர் ராஜித ஆவேசம்

''13ஆவது திருத்தச்சட்டத்தில் கைவைத்தால் சர்வதேசத்தின் மத்தியில் நாடு நாசமாகிவிடும். நாட்டின் எதிர்காலமே இல்லாது போய்விடும். 13இற்காக அன்று உயிர்த்தியாகம் செய்யவும் தயாராக இருந்த நான், இன்று எனது அமைச்சுப் பதவியையும் துறக்கத் தயாராக உள்ளேன். பதவி எனக்குப் பெரிதல்ல. ஏனெனில், 13இன் வெற்றிதான் நாட்டின் வெற்றி''

– இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன நேற்றுப் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

''தமிழர்களுக்காக கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்ட சிறப்புரிமைகளைத் தாம் அனுபவிக்கலாம். ஆனால், அதைத் தமிழர்களுக்கு கொடுக்க முடியாது. இதுதான் அரசியல் தார்மீகமா? எனக் கேள்வி எழுப்பிய அவர், எமக்கு வயதுதான் முதிர்கிறது, ஆனால் எம் மனவலிமை இன்னும் அதிகரித்துக் கொண்டே தான் இருக்கின்றது, எனவே, 13ஐக் காக்கும் போராட்டத்தை நாம் தொடருவோம் – என்றார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

13 ஆவது திருத்தத்தை பாதுகாப்பதற்கான போராட்டத்தில் 3 முறை குண்டடி பட்டிருக்கிறேன். இன்னமும் அந்தக் குண்டுத் துகள்கள் என் உடலில் இருக்கின்றன. ஒரு முறை சாவின் வாசலுக்கே சென்று மீண்டுள்ளேன். எனவே இனியும் அந்தப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றார். (ங-சி)

புதிய தளபதி தயா ரத்நாயக்க

கொழும்பு,ஜூன் 15

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க லெப்டினன்ட் ஜெனரலாகப் பதவியுயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை– இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டு ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் பாதுகாப்பு படைகளின் பிரதானியாக நியமிக்கப்படவுள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. (த)

இடம்பெயர்ந்து இன்றுடன் 24 ஆண்டுகள்

தமது பகுதியும் திறக்கப்படும் என்று எதிர்பார்ப்புடன் வலி. வடக்கு மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

''ஏ-9' பாதையை திறந்து வைக்க வரும் ஜனாதிபதி, எங்களையும் வலி.வடக்கில் சொந்த வீடுகளுக்குச் செல்வதற்கான பாதையையும் திறந்து வைப்பார் என்று நம்புகின்றோம்''– என வலி. வடக்கு மீளக்குடியேற்றக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்து இன்றுடன் 24 ஆண்டுகள் ஆகிவிட்டன. இது தொடர்பில் வலி. வடக்கு மீளக்குடியேற்றக் குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராணுவ நடவடிக்கை காரணமாக வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட மக்கள், 24 வருடங்களாக நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் சொல்லொண்ணாத் துயரங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். கிளிநொச்சியில், 'ஏ-9' வீதியைத் திறந்து வைப்பதற்காக வருகை தரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வலி.வடக்கு மக்கள் தங்கள் சொந்த நிலங்களுக்குச் செல்வதற்கான பாதையையும் திறந்து விடுவார் என்று நம்பிக் கையுடன் காத்திருக்கின்றோம் – என்றுள்ளது. (த-5)

காணி சுவீகரிப்புக்கு எதிராக

வழக்குத் தாக்கல் செய்தோரின் விவரம் திரட்டுகிறது அமைச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 15

வலி.வடக்கு காணி சுவீகரிப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தவர்களின் விவரங்கள் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் மாவட்டச் செயலகம் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலி. வடக்கில் இராணுவத்தினரால் 6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலப் பரப்பு சுவீகரிப்புச் செய்யப்படுவதை எதிர்த்து வலி.வடக்கு மக்கள் 2 ஆயிரம் பேர் வரை உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நிலையில் மேற்படி வழக்குத் தாக்கல் செய்தவர்களினதும், அவர்களின் காணி உறுதி விவரங்களையும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதற்காக வழக்குத் தாக்கல் செய்தவர்களின் பெயர் விவரங்கள் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (த-5)

காணிகளுக்கு நட்டஈடுகள் வழங்கும் அறிவித்தல் வந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 15

வலி.வடக்கில் சுவீகரிக்கப்படும் காணிகளுக்குரிய நட்ட ஈட்டைச் செலுத்தும் பிரிவு – 5, அறிவித்தல் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் யாழ். மாவட்ட செயலத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

வலி. வடக்கில் படையினரின் சட்டவிரோத காணி அபகரிப்புக்கு எதிராக மக்களால் உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் இடைக்காலத் தடையைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும், குறித்த காணி சுவீகரிப்பை மீள்பரிசீலனை செய்யுமாறும் காணி உரிமையாளர்களின் ஆட்சேபனைகளுக்கு இடமளித்து காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் உயர்நீதிமன்றம் அரசுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி இருந்தது.

இந்த நிலையில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால், மக்களின் ஆட்சேபனைகளுக்கு இடமளிக்கப்படாமலே நட்டஈடு வழங்குவதற்கான அறிவித்தல் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

(த-5)

அதிகாரப் பகிர்வு தமிழருக்கு இல்லை

நியூஸிலாந்து கவலை

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு இன்னமும் கிடைக்கப்படவில்லை. அதிகாரப் பகிர்வு தொடர்பில் திருப்தி அடையக் கூடிய தீர்வுத் திட்டங்கள் இன்னமும் முன் வைக்கப்படவில்லை என்று நியூஸிலாந்து வெளிவகார அமைச்சர் முரே மெக்யுலி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குக் கடந்த வாரம் பயணம் மேற்கொண்டிருந்த நியூஸிலாந்து வெளி

தொடர்ச்சி: பக்கம் 21

சர்வதேச கண்காணிப்பாளர்கள் குறித்து சாதகமாகப் பரிசீலனை

எதிர்க்கட்சிகளிடம் தேர்தல் ஆணையாளர்

கொழும்பு, ஜூன் 15

வடக்குத் தேர்தலின் போது சர்வதேசக் கண்காணிப்பாளர்களை நியமிப்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை தேர்தல்கள் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை. சேனாதிராசாவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் மனோ கணேசனும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் திஸ அத்தநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போதே வடமாகாண சபைத் தேர்தலில் பொது நலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்பாளர்களை வரவழைப்பது தொடர்பில் சாதகமாக பரிசீலிப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிக்கு வேலை செய்யும் இலங்கைப் பொலிஸ் துறை

ஐ.தே.க.குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 15

நாட்டின் பாதுகாப்புத் தொடர் பில் தற்போது பெரும் பிரச் சினை ஏற்பட்டுள்ளதாக ஐக் கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் ரவி கரு ணாநாயக்க தெரிவித்துள்ளார். பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் கூலிக்கு கொலை செய்யும் நிலைக்குச் சென்றுள்ளதாக வும் வெளிச்சத்துக்கு வராத பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்பது பிரச்சி னைக்குரியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்

பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கைப் பொலிஸானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தனிப்பாதுகாப்புத் துறையாக மாறியுள்ளதென அவர் சுட்டிக் காட்டினார். எனினும் பயமின் றிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவைக் கைது செய்த பொலிஸ்மா அதிபருக்கும், குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் ரவி கருணாநாயக்க குறிப்பிட் டார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச் சியைக் கண்டுள்ளதாகவும் முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு ஓடியுள்ளதாகவும் அவர் களுக்குப் பதிலாக இலங் கைக்கு கசினோகாரர்கள் அழைத்துவரப்படுவதாகவும் அவர் கூறினார். 23 மாதங் களில் அம்பாந்தோட்டை துறை முகத்துக்கு 25 கப்பல்களே வந்துள்ளதாகக் கூறிய ரவி கருணாநாயக்க, இந்த நிலை யில் துறைமுகத்தின் இரண் டாம் கட்டப் பணிகளுக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை செலவிட அரசு தீர்மானித்துள் ளதாகவும் தெரிவித்தார். (த)

அமைச்சரவைக் கூட்டத்தில் வீரவன்ஸ தாக்கப்படவில்லை

கொழும்பு,ஜூன் 15

அமைச்சரவையில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தாக்கப் பட்டதாக வெளியான செய்தி வெறும் கட்டுக் கதை என்றும், அத்தகைய சம்பவம் எதையும் தான் பார்க்கவில்லை என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல நேற்று முன்தினம் தெரி வித்துள்ளார். எனினும், அமைச்சரவைக் கூட்டத்தில் கடுமையான வாக்குவாதங் கள் இடம்பெற்றதை அவர் உறுதிப்படுத்தினார்.

மிகவும் கூடான - கூச்சல் நிறைந்த வாக்குவாதங்கள் இடம்பெற்றன. ஒரு பொதுக் கூட்டத்தைப் போல அது இருந்த தது. எமது அமைச்சரவையில் சத்தமாகப் பேசும் சிலர் இருப் பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் யாரும் விமல் வீர வன்ஸவை அடிக்கவில்லை என்று கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே இந்த அமைச் சரவைக் கூட்டத்தில், விமல் வீரவன்ஸவிடம் அமைச்சர் ரவூப் ஹக்கீம், 13ஆவது திருத்தத்துக்கு எதிராக 10 மில்லியன் கையெழுத்துப் பெறும் நீங்கள் எதற்காக அதிகாரப்பகிர்வை வலியுறுத் தும் வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் கையெழுத்துப் பெறவில்லை?என்று கேள்வி எழுப்பிய போதே கொந்தளிப் பான சூழல் அங்கு எழுந்த தாகத் தகவல்கள் வெளியா யுள்ளன.

13ஆவது திருத்தச்சட்டத்தை ஒழிப்பதற்கு முன்னர் வடக்கு, கிழக்கு மக்களின் கருத்தை அறிய வேண்டும் என்றும் அதன் பின்னரே தெற்கில் அத னைப் அறிய வேண்டும் என் றும் ஹக்கீம் குறிப்பிட்டார். இதன்போது ஹக்கீமுக்கு ஆத ரவாக டியூ.குணசேகராவும் கடு மையான வாக்குவாதம் செய்த தாகத் தகவல்கள் தெரிவிக் கின்றன. (த)

விசாரணை செய்த அதிகாரிகளை மிரட்டினார் வாஸ் குணவர்த்தன

கொழும்பு,ஜூன் 15

கொழும்பு வர்த்தகர் முகமட் சியாம் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள பிர திப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன, தான் கொலை யாளி தான் என்று கூறியதா கவும், அவரைக் கைது செய்த போது புலனாய்வு அதிகாரி களை மிரட்டியதாகவும் நீதி மன்றத்தில் அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத் தில், குற்றப் புலனாய்வுப் பிரி வினர் சமர்ப்பித்த அறிக்கை யில், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்.ஆனால் உங்களால் என்னை எப்போதும் உள்ளே (தடுப்புக்காவலில்) வைத்தி ருக்க முடியாது சானி (குற் றப்புலனாய்வுப்பிரிவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சானி அபேசேகர). நான் ஒரு கொலைகாரன். ஒரு நாள் நான் வெளியே வரும் போது என்ன நடக்கும் என்று இருந்து பாருங்கள் என்று வாஸ் குண வர்த்தன கத்தினார்.

கடந்த 10ஆம் திகதி மாலை

அவரைக் கைது செய்தபோது தான் அமர்ந்திருந்த நாற்காலி யையும் அவர் தூக்கி வீசினார். என்று எழுத்து மூலமான தமது அறிக்கையில் குற்றப்புல னாய்வுத் துறையினர் குறிப் பிட்டுள்ளனர்.

அதேவேளை, கொழும்பு வர்த் தகரைக் கொலை செய்வதற் காக பெற்ற 30 இலட்சம் ரூபா பணத்தில் 10 இலட்சம் ரூபாவை தனக்குத் தருவதாக, வாஸ் குணவர்த்தன தன்னிடம் கூறி யதாக, இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான சுட்டா என்பவர் வாக்குமூலம் அளித்துள்ளார். சுட்டா 4 இலட் சம் ரூபா பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

சென்னையிலிருந்து இலங்கைக்கு செய்மதி உபகரணங்கள் கடத்தல்

விமான நிலையத்தில் ஒருவர் கைது

கொழும்பு,ஜூன் 15

சென்னையில் இருந்து கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த விமானத்தில் கொண்டுவந்த 555,000 ரூபா பெறுமதியான செய்மதித் தொழில்நுட்ப உபகரணங்க ளைப் பறிமுதல் செய்த விமான நிலையச் சுங்கப் பிரிவினர் கொண்டுவந்த நபரையும் கைது செய்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை அதி காலை சென்னையில் இருந்து கட்டுநாயக்க விமான நிலை யத்தை வந்தடைந்த குறித்த நபர் கைது செய்யப்பட்டுள் ளதாக இலங்கைச் சுங்க ஊட கப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொலைத்தொடர் புகள் ஆணைக்குழுவின் அனு மதியின்றி சந்தேகநபர் 111 செய்மதித் தொழில்நுட்ப உப கரணங்களை இலங்கைக்குக் கொண்டுவந்தார் என அவர் குறிப்பிட்டார்.

நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய சந்தேக நபர் 10,000 ரூபா அபராதத் தில் விடுதலை செய்யப்பட்டதா கவும், செய்மதித் தொழில்நுட்ப உபகரணங்கள் அரசுடமை யாக்கப்பட்டுள்ளதாகவும் லெஸ்லி காமினி தெரிவித் தார். (த)

43 இலங்கையர் ஜாவாவில் கைது

ஜகார்த்தா,ஜூன் 15

ஜாவாவில் வைத்து 43 இலங் கையர் உட்பட 100 சட்ட விரோதக் குடிவரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜாவாவில் தென் கரைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் மேற்கு ஜாவாவில் சியன்யூரில் வைத்தே இவர்கள் கைது செய் யப்பட்டுள்ளதாக அறிக்கை யொன்றில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஐந்து மினி பஸ்கள் மற்றும் டிரக் வண்டி என்பவற்றில் பய ணித்து கொண்டிந்தபோது இவர்களைப் பொலிஸார் சந் தேகத்தின் பேரில் தடுத்துநிறுத் தித் சோதனையிட்டு விசார ணைக்கு உட்படுத்தினர். இதன் போதே இவர்கள் சட்டவிரோத குடிவரவாளர்கள் என்று தெரி விக்கப்படுகின்றது.

ஆஸ்திரேலியாவிலுள்ள கிறிஸ் மஸ் தீவுக்குச் செல்வதற்காக ஜாவாவின் தென்கரை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட இவர்கள் குடிவரவு அதிகாரிகளிடம் ஒப் படைக்கப்படவுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (த)

சென்னையில் இருந்து திரும்பிய இலங்கையரின் உடலில் தங்கம்

கொழும்பு,ஜூன் 15

இந்தியாவின் சென்னையில் இருந்து இலங்கை வந்த இலங் கையர் ஒருவரின் உடலில் 32 தங்கத் தகடுகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த குறித்த நபர் மீது சந்தேகம் ஏற்பட்டுச் சுங்கப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர்.

அதன்பின் சந்தேகநபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு எக்ஸ்ரே எடுக்கப்பட்ட போது உடம்பில் 32 தங்கத் தகடுகள் இருப்பது தெரிய வந்ததாகச் சுங்க வருமான பிரிவுப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்தார். வத்தளை பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (த)

ஜனாதிபதியின் வருகைக்காக கிளிநொச்சியில் தீவிர பாதுகாப்பு

கிளிநொச்சி,ஜூன் 15

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிளிநொச்சிக்கு இன்றைய தினம் வருவதை முன்னிட்டு நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத் தப்பட்டுள்ளது. கிளிநொச்சி நீதிமன்றத்துக்கு அருகில் 'ஏ-9' வீதித் திறப்பு மற்றும் மக்கள் வங்கி என்பன திறந்து வைக்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ கிளிநொச்சிக்கு இன்று காலை வருகை தரவுள்ளார்.

அத்துடன் மக்கள் வங்கிக்கு அருகில் பொதுமக்களுக்குமான கலந்து ரையாடலுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்காக கிளிநொச் சியில் பல பிரதேசங்களில் இருந்து மக்களைத் திரட்டுவதற்காக அரசியல் கட்சியினால் பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கிளி நொச்சிக்கு ஜனாதிபதி வருவதனை முன்னிட்டு நகரில் பாதுகாப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சிக்கு வருகைதரும் ஜனா திபதி இரணைமடுவில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னர் பயன்படுத்தப்பட்ட விமான ஓடுபாதையைத் திறந்து வைக்கவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

உலகில் மிக வயதான மூதாட்டி இலங்கையில்

கொழும்பு,ஜூன் 15

உலகின் மிகவும் வயதான மனிதராக இலங்கையைச் சேர்ந்த 116 வயது மூதாட்டியை கின்னஸ் சாத னைத் பதிவேடு அறிவித்துள் ளது.

அப்புலாந்த உக்கு என்ற இந்த மூதாட்டி கேகாலை மாவட் டத்தில் உள்ள மாவனல்ல பிர தேசத்தில் உள்ள புலத்கமுவ என்ற இடத்தில் வசித்து வரு கிறார்.

உலகின் வயதான மனிதராக அறிவிக்கப்பட்டிருந்த ஜப்பா னைச் சேர்ந்த, ஜிரோமோன் கிமுரா கடந்த 12ஆம் திகதி மரணமானதையடுத்தே, இலங்கையைச் சேர்ந்த அப்பு லானந்த உக்கு உலகின் மூத்த மனிதராக அறிவிக்கப்பட்டுள் ளார்.

இவர் 1897ஆம் ஆண்டு ஓகஸ்ட் 22 ஆம் திகதி பிறந் தவர். இவரது தேசிய அடை யாள அட்டை இலக்கம் - 977960037 ஆகும். இவ ருக்கு எட்டு பிள்ளைகளும், 80இற்கும் அதிகமான பேரப் பிள்ளைகள், பூட்டப்பிள்ளை கள் இருப்பது குறிப்பிடத்தக் கது. இவரையடுத்து உலகின் அடுத்த வயதான நபராக ஜப்பானின் மிசாகா ஒகாவா இருந்து வருகிறார், அவர் 1898இல் பிறந்தவர். (த)

நீதிபதியை அச்சுறுத்திய படைச் சிப்பாய் கைது

கொழும்பு,ஜூன் 15

மாவட்ட நீதிபதிக்குத் தொலை பேசி அழைப்புக்களை ஏற் படுத்திக் கூடாத வார்த்தைகளி னால் அச்சுறுத்திய இராணு வச் சிப்பாய் ஒருவரைப் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவரையே பொலி ஸார் கைது செய்துள்ளனர். இவர் குருநாகல் மாவட்ட நீதிபதி நிமல் ரணவீரவையே இவ்வாறு அச்சுறுத்தியுள்ளார். சந்தேகநபரான இராணுவச் சிப்பாய், நீதிபதியின் உத்தி யோகபூர்வ இல்லத்தின் நிலை யான தொலைபேசிக்கு ஐந்து தடவைகள் அழைப்புகளை ஏற்படுத்தியுள்ளார்.

இந்த ஐந்து தடவைகளும் பெண்ணொருவரின் பெய ரைக் கேட்டு அந்தப் பெண் அங்கிருக்கின்றாரா? என விசா ரித்துள்ளார். அவ்வாறான பெய ருடைய பெண் இல்லையென்று தொலைபேசியில் குறித்த சந் தேகநபர் கூடாத வார்த்தைகளி னால் ஏசி அச்சுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்துவதற்கு நடவ டிக்கை எடுத்துள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்தனர்.

கடை உடைக்கப்பட்டு தையல் மெஷின் திருட்டு

தென்மராட்சி,ஜூன் 15

கொடிகாமம் பகுதியில் உள்ள தையல் நிலையம் இனந் தெரியாதோரால் உடைக்கப் பட்டு அங்கிருந்த இரண்டு தையல் இயந்திரங்கள் திரு டப்பட்டள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவ கச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்துள் ளனர். (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் வசந்தத்தின் கீழ் வேலணையில் அபிவிருத்திகள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு உட் கட்டமைப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

வேலணை செட்டிபுலம் உவர் நீர் தடுப்பு அணை ரூபா 39 லட்சம், திருவள்ளுவர் கிராமம் மாங்கனிப்புலம் திருவள்ளுவர் வீதி 49 லட்சத்து 50 ஆயிரம், அம்பிகை நகர் சுடலை வீதி ரூபா 49 லட்சத்து 50 ஆயிரம், செட்டிபுலம் முருகன் கோயில் வீதி ரூபா 49 லட்சத்து 50 ஆயிரம், வங்களாவடி பலநோக்கு மண்டபம் ரூபா 79 லட்சத்து 20 ஆயிரம், அம்பிகைநகர் கண்ணகிபுரம் குடியேற்றத்திட்ட வீதி ரூபா 19 லட்சத்து 20 ஆயிரம், மணியகாரன் வீதி ரூபா 19 லட்சத்து 80 ஆயிரம், அண்ணமார் வீதி ரூபா 29 லட்சத்து 70 ஆயிரம், துறையூர் பொது மண்டபம் ரூபா 9 லட்சத்து 90 ஆயிரம், வங்களாவடி பூங்காவிற்கான நவீன உபகரணங்கள் ரூபா 24 லட்சத்து 75 ஆயிரம்.

நயினாதீவு வங்களாவடி உவர் நீர் தடுப்பு அணை ரூபா 40 லட்சத்து 59 ஆயிரம், வள்ளிக்காடு கனிக்குழி வீதி திருத்தம் ரூபா 89 லட்சத்து 10 ஆயிரம், வங்களாவடி கடற்கரை வீதி ரூபா 99 லட்சம், புங்குடுதீவு தொழிலாளர்புரம் வீதி ரூபா 99 லட்சம் என்ற வகையில் நிதி ஒதுக்கீடுகள்செய்யப்பட்டுள்ளன. (வ-7)

இந்து ஆலயங்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து நடைபெறவிருந்த கண்டனப் பேரணிக்குத் தடை

பொலிஸ், மாநகர சபை அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

இந்து ஆலயங்கள் மீது அண்மைக் காலமாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் நடைபெறவிருந்த கண்டனப் பேரணி யாழ். மாநகர சபை, பொலிஸார் ஆகியோர் அனு மதி வழங்க மறுத்ததை அடுத்து நிறுத்தப் பட்டது.

'விஷ்வ இந்து பரிஷத்' அமைப்பு குறித்து இந்து ஆலயங்கள் தொடர்ந்து தாக்கப்படுவதைக் கண்டித்து ஆர்ப் பாட்டத்துக்கு நேற்று அழைப்பு விடுத்திருந்தது. இந்த நிலையில் அனுமதி வழங்க மறுக்கப்பட்டதால் பேரணி நடை பெறவில்லை. இது தொடர்பில் குறித்த அமைப்புப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்:-

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களுக்கு எவ்வித பிரச் சினைகளும் இல்லை எனவும் ஆலயங்கள் எதுவும் தாக்கப் படவில்லை எனவும் பொலி ஸாரால் தெரிவிக்கப் பட்டது.

முஸ்லிம் சகோதரர்களது பள்ளிகள் தாக்கப்பட்டதற்கு எதிராக பேரணி நடத்த அனு மதிக்கப்பட்டது.

பொது பல சேனா என்ற அமைப்பு, பௌத்த குரும்மார்கள் ஆகியோர் தமது மதங்களைப் பாதுகாக்கக்கோரி பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்த அனுமதி வழங்கப்படும்போது இந்துக்களுக்கு அமைதியான முறையில் ஒரு பேரணியைக் கூட நடத்த ஜன நாயக நாடு என்று சொல்லப் படும் இந்த நாட்டில் உரிமை இல்லையா? யாழ்.மாநகர சபை இதற்கு அனுமதி மறுத்தமை இந்துக்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கையே என்று தெரிவித்தனர்.

(வ-7)

தூக்கில் தொங்கிய சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

தூக்கில் தொங்கிய நிலையில் ஆசிரியர் ஒருவர் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கல்வியங்காடு பகுதியில் புதன்கிழமை முற்பகல் வீட்டில் யாரும் இல்லாதவேளை இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினவேல் செந்தூரன் (வயது-35) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

குருநகரில் பாடசாலை ஒன்றில் பணிபுரியும் அவருக்கு ஆசிரியத் தொழிலில் வெறுப்பு ஏற்பட்டுள்ளது. ஆசிரியத் தொழிலை விட்டு சுயதொழிலில் ஈடுபடவுள்ளதாகக் கூறியிருந்தார் என்றும் இன்னும் ஒரு வருடம் பணிபுரிந்தால் 10 வருடங்கள் ஆகிவிடும். அது நன்மையளிக்கும் என்று அவரின் தாயார் கூறியிருந்தார் என்றும் மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மரண விசாரணை மேற்கொண்டார். (வ-4)

வடமராட்சி கிழக்கில் மேலும் 4 பகுதிகளுக்கு இன்று மின்விநியோகம்



வடமராட்சி, ஜூன் 15

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மேலும் நான்கு கிராமங்களுக்கு மின்விநியோகம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. மருதங்கேணி தெற்கு, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய கிராமங்களுக்கே மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மின் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார்.

இன்றைய மின்விநியோக ஆரம்ப விழாவில் வடக்கின் வசந்தம் வடமாகாண திட்டப் பணிப்பாளர் நா.குணசீலன், மின்சார அத்தியட்சகர் என்.ஞானகணேசன், பருத்தித்துறை பிரதேச மின் அத்தியட்சகர் எஸ்.இராஜேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபை எதிரணித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொள்வர். (வ-8)

இந்து ஆலயங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வலியுறுத்து

விஷ்வ இந்து பரிஷத் அமைப்பு ஜனாதிபதிக்கு மனு

யாழ்ப்பாணம், ஜூன் 15

இந்துக் கோயில்கள் சேதப்படுத்தும் சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலையிட்டு அவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை விஷ்வ பரிஷத் ஜனாதிபதிக்கு மனு அனுப்பியுள்ளது.

யாழ்.அரச அதிபர் ஊடாகக் குறித்த அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனநாயக மத பாதுகாப்பு உரிமைகள் சமமாகப் பேணப்பட வேண்டும் என்பதில் தாங்கள் அக்கறை கொண்டுள்ளீர்கள். அண்மையில் திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் இந்துக் கோயில்கள் சேதப்படுத்தப்பட்டமை தொடர்பாகவும் இந்த நிலைமை தொடர்ந்தும் இடம் பெறுவதையும் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். தொடர்ச்சியாக இடம் பெறும் இந்த நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துமாறும் சம்பவத்தில் ஈடுபடுவோரைச் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை விஷ்வ பரிஷத் தலைவர் கந்தசக்திதாசன் யாழ்.செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.கருணாகரனிடம் குறித்த மனுவை வெள்ளிக் கிழமை கையளித்தார். மனு அரச அதிபரிடம் உரிய நடவடிக்கைக்காகச் சமர்ப்பிக்கப்படும் என நிர்வாக உத்தியோகத்தர் உறுதியளித்தார். (வ-7)

> இலங்கை விஷ்வ பரிஷத் தலைவர் கந்தசக்திதாசன் யாழ்.செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.கருணாகரனிடம் குறித்த மனுவை வெள்ளிக்கிழமை கையளித்தார்.

விபத்தில் உயிரிழந்தாகக் கூறப்பட்டவர் கொலை செய்யப்பட்டார் எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

புங்குடுதீவில் விபத்தில் உயிரிழந்ததாகக் கூறப்பட்டவர் உடைக்கப்பட்ட போத்தல் அல்லது கத்தி போன்ற கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சடலத்தில் காணப்படும் காயம் விபத்தினால் ஏற்பட்ட காயமல்ல என்றும் சட்ட வைத்திய அதிகாரி தனுசன் தெரிவித்தார்.

மன்னாரைச் சேர்ந்த தம்பிப் பிள்ளை பரமேஸ்வரன் (வயது-54) கடந்த 10 ஆம் திகதி இரவு புங்குடுதீவில் அவர் ஓட்டிச் சென்ற ஓட்டோவில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். அவர் விபத்தில் உயிரிழந்திருக்கலாம் என்று மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பில் விபத்து இடம் பெற்ற இடத்துக்குச் சென்ற யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி தனுசன், திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார், ஊர்காவற்றுறைப் பொலிஸார் ஆகியோர் அங்கு விசாரணை நடத்தினர். விபத்துக்குள்ளான ஓட்டோவையும் சென்று பார்வையிட்டனர். இவற்றின் அடிப்படையிலும் சடலத்தின் கழுத்துப் பகுதியில் காணப்பட்ட காயத்தைக் கொண்டும் அவர் விபத்தினால் உயிரிழக்கவில்லை என்றும் உடைக்கப்பட்ட போத்தல் அல்லது கத்தி போன்ற கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிப்பதாகச் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

> சடலத்தின் கழுத்துப் பகுதியில் காணப்பட்ட காயத்தைக் கொண்டு அவர் விபத்தினால் உயிரிழக்கவில்லை என்றும் உடைக்கப்பட்ட போத் தல் அல்லது கத்தி போன்ற கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப் பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிப்பதாகச் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

மன்னாரைச் சேர்ந்த இவர் யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்து அவருக்கு 6 பிள்ளைகள் உள்ளனர். இந்த நிலையில் இவர் மன்னாரைச் சேர்ந்த மற்றொருவரைத் திருமணம் செய்து அங்கு வாழ்ந்து வருகிறார். யாழ்ப்பாணத்திலுள்ள தனது சகோதரியைப் பார்க்க வந்திருந்த போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று இவர் மது போதையில் இருந்தார் என்றும் மரண விசாரணையில் தெரிவிக்கப் பட்டது. (த-5)

மாணவர் கௌரவிப்பு நிகழ்வு இன்று

வடமராட்சி, ஜூன் 15

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குள் வசிக்கும் 2012 ஆம் ஆண்டு நடை பெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும், ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் 9 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தியும், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தியும் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சங்கத் தலைவர் க.நாகலிங்கம் தலைமையில் இன்று சனிக்கிழமை சங்க மண்டபத்தில் இடம்பெறும் சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் யாழ். பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் வி. கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், பருத்தித்துறை பிரதேச சபை எதிரணித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், கிராம சேவையாளர் த.சுதர்சன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள். (ஒ-8)

தொண்டர் ஆசிரியருக்கு நேர்முகத் தேர்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமாகாணக் கல்வி அமைச்சினால் வடமாகாணத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களின் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கும், நியமனம் வழங்குவதற்கும் பாடசாலைகளை உறுதிப்படுத்துவதற்குமான நேர்முகத் தேர்வுகள் எதிர் வரும் 17ஆம் திகதி முதல் நடத்தப்படவுள்ளன.

வவுனியா வடக்கு, கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு மற்றும் மடு ஆகிய வலயங்களிலும், வடமராட்சி வலயத்திலுள்ள மருதங்கேணி கோட்டத்திலும் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய 539 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததை அடுத்தே நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வுகள் இடம்பெறவுள்ளன.

அந்த அடிப்படையில் கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் 17ஆம் திகதி கிளிநொச்சி கல்வி வலயப் பணிமனையிலும், முல்லைத்தீவு, துணுக்காய், மடு மற்றும் வவுனியா வடக்கைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு 18ஆம் திகதி மாங்குளத்தில் அமைந்துள்ள துணுக்காய் கல்வி வலயப் பணிமனையிலும்-

வடமராட்சி வலயத்திலுள்ள மருதங்கேணி கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 19ஆம் திகதி கோட்டக் கல்வி அலுவலகத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிப்போர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, கல்வித் தகைமைச் சான்றிதழ் என்பவற்றின் மூலப் பிரதிகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதிகள் என்பவற்றுடன் சமுகம் தருமாறும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (த-400)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்துக்களை புண்படுத்துவதை அரசு உடன் நிறுத்த வேண்டும்

இந்து மா மன்றம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன் 15

இந்து சமயத்தவரைப் புண்படுத்தும் நடவடிக்கைகளை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்து மாமன்றம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர் வாழும் பகுதிகளில் முக்கியமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புத்தர் சிலைகளை நிறுவுவதும், இந்துக் கோயில்களின் விக்கிரகங்களைக் களவாடுதலும், சிலைகளை உடைப்பதுமாக இந்து சமயத்தை இழிவுபடுத்தும் கைங்கரியங்கள் தொடர்கின்றன. இத்துர்ப்பாக்கியமான நிலையை அகில இலங்கை இந்து மாமன்றம் அவ்வப்போது ஜனாதிபதி உட்பட மற்றும் சகலருக்கும் சுட்டிக்காட்டி அவர்களின் கவனத்துக்கும் கொண்டு வந்திருக்கின்றோம். எனினும் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மட்டக்களப்பு நகரின் நுழைவாயிலில் புத்தர் சிலை அமைக்க முயற்சி எடுக்கப்பட்டது. திருகோணமலை நகரில் திருஞான சம்பந்தர் வீதியிலுள்ள கற்பகப் பிள்ளையார் கோயில் கோபுர சிற்பங்கள் சேதப்படுத்தப்பட்டமை, யாழ்ப்பாணத்தில் பல்வேறு ஆலயங்களிலுமுள்ள ஐம் பொன்னாலான சுவாமி உருவச் சிலைகள் களவாடப்பட்டமை மற்றும் தங்கத்தினாலான இயந்திரத் தகடுகள் களவாடப்பட்டமை என்பன இவற்றில் சிலவாகும். இவை தொடர்பாநாம், எமது கண்டனத்தை உடனுக்குடன் தெரிவித்தும் இப்பாவச் செயல்களில் ஈடுபடுவோர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் தற்போது பௌத்த விகாரை அமைக்கவும், வெள்ளரசு மரம் நடவும் நடவடிக்கை மேற்கொள்வதையிட்டு இந்து மாமன்றம் தனது கண்டனத்தை ஜனாதிபதிக்கும் தெரிவிக்கின்றது. மதத் துவேஷத்தை ஏற்படுத்தும் இவ்வாறானா மதவெறிச் செயல்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். இலங்கை ஒரு பல் இன, மொழி, மதம் கொண்ட நாடு. எனவே ஒரு மதத்தின் வளர்ச்சி என்ற பெயரில் இன்னொரு மதத்தை அழிக்கும் செயலை எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தத்தமது சமயத்தவர்கள் வாழும் பிரதேசங்களில் அவற்றை வளர்ப்பதற்குப் பதிலாக பிற சமயத்தவரின் பிரதேசங்களில் ஏன் இவர்கள் இதனைத் திணிக்க வேண்டும் என்பது தான் எமது நிலைப்பாடு. உகந்தை முருகன் ஆலயம் வரலாற்றுப் பிரசித்தி பெற்றது. அங்கு ஆடிவேல் விழா சிறப்பாக நடைபெறுவதுடன் கதிர்காமத்துக்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் அங்கு தங்கிச் செல்வது வழமையாகும். இவ்வாறு பாரம்பரியம் கொண்ட இந்து ஆலயத்தின் பிரதேசத்தில் பௌத்த விகாரை அமைக்க வேண்டிய அவசியம் என்ன?

இவ்வாறான செயல் இனவிரோத்தையும் மதத் துவேஷத்தையும் ஏற்படுத்தாதா? இதனை எமது தமிழ் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்றத்தில் ஆட்சேபித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்து சமய கோட்பாட்டின்படி எமது இந்து ஆலயங்களின் பூசை வைபவங்கள் மற்றும் திருவிழா உற்சவங்கள் என்பன குறிப்பிட்ட மாதத்தில், குறிப்பிட்ட நட்சத்திரங்களில் நடைபெறும். இதனை எவரும் மாற்றக்கூடாது என்பது இந்து மதக் கொள்கையாகும். அவ்வாறு கதிர்காமத்தின் தீர்த்தோற்சவம் ஆடிமாதம் பௌர்ணமியன்றே நடைபெறவேண்டும். அதாவது இவ்வருடம் ஆடிமாதம் 7ஆம் நாள் நடைபெறவேண்டும். அது 23.07.2013 ஆகும். அவ்வாறாயின் கொடியேற்றம் 15 தினங்கள் முன்னர் நடைபெறவேண்டும். ஆகவே அது ஆனி மாதம் 24ஆம் நாள் நடைபெறவேண்டும். அதாவது 08.07.2013 ஆகும். இது இந்து சமய நியதி என்பதால் இதனை யாரும் மாற்றக்கூடாது. ஆனால் இவ்வருட உற்சவம் ஒரு மாதத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிந்து அகில இலங்கை இந்து மாமன்றம் தனது ஆழ்ந்த அதிருப்தியைத் தெரிவிக்கின்றது. எமது சமய சம்பிரதாயங்களை இவ்வாறாகத் தான்தோன்றித்தனமாக மாற்றுவது நாட்டுக்கு உகந்த செயலல்ல என்பது திருமூலரின் திருமந்திரக் கூற்றாகும். எனவே இவ்வாறான செயல்களை நிறுத்துவதற்கு சமய விவகார அமைச்சராகிய கௌரவ பிரதம அமைச்சர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேபோல் கொள்ளுப்பிட்டி தர்மலோக மாவத்தையில் அலரி மாளிகைக்கு பின்புறமாக உள்ள 80 வருடகாலப் பழமைமவாய்ந்த பூமாரி அம்மன் ஆலயம், நகர அபிவிருத்தி அதிகார சபையின் உத்தரவின்படி இடம்மாற்றப்பட்டுள்ளது. நகர அபிவிருத்திக்காக வணக்கஸ்தலங்களை இடம்மாற்றும் பொழுது ,அதனைப் பராமரிக்கும் மக்களின் வேண்டுதலையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் நகர அபிவிருத்தி அதிகார சபையினர் தான் தோன்றித்தனமாக நடப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறான சம்பவங்களால் இந்து மக்கள் பெரும் வேதனைக்கு உள்ளாகி வருகின்றனர். இவைபற்றி ஜனாதிபதி உட்படச் சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கைகளை எடுத்து சகல மதத்தினரையும் சமமாக நடத்த வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றம் மீண்டுமொரு முறை கேட்டுக்கொள்கின்றது- என்றுள்ளது.

(வ)

பி.ரி.ஐ.பக்றீரியாவால் பயனில்லை

சுகாதார அமைச்சின் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 15

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக கியூபாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள பி.ரி.ஐ. பக்றீரியாவால் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் ஏற்படாது. அது டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தத்தக்க ஆக்கபூர்வமான தீர்வு அல்ல என்பது இனங்காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பி.ரி.ஐ.பக்றீரியா பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள போதிலும் அதை இருவாரங்களுக்கு ஒருதடவை என்றவாறு மீண்டும் மீண்டும் பிரயோகிக்க வேண்டியுள்ளதால் பி.ரி.ஐ. பக்றீரியாவினால் டெங்கு நோய் கட்டுப் படுத்தப்படுத்தப்படப்போவதில்லை. 11 ஆயிரம் லீற்றர் வரையிலான பி.ரி.ஐ. பக்றீரியா கியூபாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளதோடு சில தனியார் நிறுவனங்கள் ஊடாகவும் சுகாதார அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அந்த பக்றிரீயா மூலமாக இதுவரையில் குறிப்பிடத்தக்க அளவில் டெங்கு நோய் மட்டுப்படுத்தப்பட்டதாகத் தென்படவில்லை என்பதால் இந்த முறைமை வெற்றிகரமான தொன்றல்ல. இதுவரை காலமும் கியூபாவில் இருந்து தனியார் நிறுவனங்கள் ஊடாகவும் கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சால் அதிகளவில் நிதி செலவிடப்பட்டுள்ளது- என்றார். (வ-22)

உரிமை கோரப்படாத சைக்கிள்கள் நீதிமன்றில்

யாழ்ப்பாணம்,ஜூன் 15

யாழ்ப்பாணம் பொலிஸாரால் உரிமை கோரப்படாத 2 சைக்கிள்கள் யாழ்.நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

55930282, 55931409 ஆகிய இலக்கங்களுடைய சைக்கிள்களை உரிமைகோருபவர்கள் ஆறு மாத காலத்துக்குள் தகுந்த அடையாளம் காட்டி சைக்கிள்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (வ-14)

வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் இனந்தெரியாதோரால் உடைப்பு

கொக்குவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூன் 15

அதிகாலையில் வீடு புகுந்த இனந்தெரியாதோர் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். எனினும் இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் பாடசாலையை அண்மித்து அமைந்துள்ள வீடு ஒன்றிலேயே நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் உறக்கத்தில் இருந்தபோது சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதல் மேற்கொண்ட இனந்தெரியாதோர் உடனேயே அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(வ-4)

ரியூசனுக்குச் சென்ற மாணவர்களை காத்திருந்து தாக்கியது கும்பல்

மீசாலையில் வியாழன் இரவு சம்பவம்

தென்மராட்சி,ஜூன் 15

ரியூசனுக்குச் சென்ற மாணவர்களை காத்திருந்து தாக்கியது கும்பல் ஒன்று. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு மீசாலையில் இடம்பெற்றது.

ஜி.சீ.ஈ.சாதாரணதரம் படிக்கும் 13 மாணவர்கள் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலை நடத்திய ஐந்து பேரைப் பொலிஸார் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். இந்த 5 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த 4 மாணவர்களும், மீசாலை கிழக்கைச் சேர்ந்த 2 மாணவர்களும், மீசாலை மேற்கு, மந்துவில் கிழக்கு, கோயிலாமனை ஆகிய இடங்களைச் சேர்ந்த ஒவ்வொரு மாணவருமே தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே சென்ற ரியூசனை இடத்தை நிறுத்திவிட்டு, வேறோரு இடத்துக்கு ரியூசனுக்குச் சென்றதால்தான் தங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தாக்குதல் நடத்திய கும்பல் முரண்பாடான கருத்தை பொலிஸில் தெரிவித்துள்ளது.

(ஒ-9)

ஆதாரங்களுடன் விண்ணப்பித்தால் தொழில் முயற்சியாளர்களுக்கு கடன்

இலங்கை வங்கி வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 15

தகுந்த ஆதாரங்களுடன் கடனுக்காக விண்ணப்பிக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கு உடனடிக்கடன்களை வழங்க இலங்கை வங்கி தயாராகவுள்ளது என்று இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என்.மாணிக்கசிங்கி தெரிவித்தார்.

வடமாகாணத்தில் தற்போது தொழில் முயற்சியாளர்கள் கடனுக்காக விண்ணப்பம் செய்யும்போது கடன்கனை மீளச் செலுத்தாத மற்றும் தாமதித்து மீள்செலுத்துதல் காரணமாக கடன்களை வங்கிகள் இடைநிறுத்தியுள்ளமை தொடர்பாக இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என்.மாணிக்கசிங்கியுடன் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வங்கியில் தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் உதவிகள் எதுவும் நிறுத்தப்படவில்லை. தற்போதும் அந்த நடைமுறை உள்ளது. தொழில் முயற்சியாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் கடனுக்காக விண்ணப்பிக்கும் பட்சத்தில் தகுதியான கடன்களை இலங்கை வங்கி வழங்கும். குறிப்பாக வடமாகாணத்தில் மீனவர்களுக்கான கடன் உதவிகளை அந்தந்த மீனவச் சங்கங்களின் உறுதிப்படுத்தலுடன் வங்கி வழங்கும். தகுதியுடைய தொழில் முயற்சியாளர்கள் வங்கியுடன் தொடர்பு கொண்டு கடனுக்காக விண்ணப்பம் செய்யலாம்-என்றார்.

(வ-14)

மகாதேவா சைவச் சிறார் இல்லத்தில் 23 மாணவர்கள் உயர்தரத்துக்குத் தெரிவு

தலைவர் இராசநாயகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 15

2013 கல்வியாண்டில் மகாதேவா சைவச் சிறார் இல்லத்தைச் சேர்ந்த 23 மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரக் கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறார் இல்லத்தின் தலைவர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெரிவு செய்யப்பட்டவர்களில் இருவர் கணிதப் பிரிவிலும், ஒருவர் விஞ்ஞானப் பிரிவிலும் ஏனையவர்கள் வர்த்தகம் மற்றும் கலைப்பிரிவுகளிலும் இணைந்து கற்கைகளைத் தொடரவுள்ளனர்.

இது மகாதேவா சைவச் சிறார் இல்லத்தின் மிகப்பெரிய கல்விச் சாதனையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஆண்-பெண் இரு பாலாருமாக 326 பிள்ளைகள் மகாதேவா சைவச் சிறார் இல்லத்தில் கல்வி பயின்று வருகின்றனர்.

இவ்வாறான மாணவர்களை நாம் ஊக்குவிக்கும் முகமாக பாராட்டு விழாக்களை நடத்தி வருகின்றோம்.

எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரசு நவீன கட்டடம் ஒன்றைக் கட்டித் தந்துள்ளது. யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தலைமையிலான குழுவினர் எமது மாணவர்களின் விடுதிக்கு பெருந்தொகை நிதிப் பங்களிப்புச் செய்துள்ளனர். விரைவில் இதற்கான திறப்பு விழா இடம்பெறவுள்ளது.

இதனைவிட மாணவர்களின் நலனுக்காக விவசாயம், கால்நடை, பண்ணை வளர்ப்புத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த வருடம் மகாதேவா சைவச் சிறார் இல்லத்தில் கற்றுத்தேறிய மாணவர் ஒருவர் மூன்று 'ஏ' சித்தி பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முதனிலையைப் பெற்று வர்த்தகப் பிரிவில் பல்கலைக் கழகம் செல்லவுள்ளார்.

இவ்வாறான இலக்குகளையும் நோக்கினையும் அடைவதே எமது இலக்காகும் என்றார்.

(எ-50)

தென்மராட்சி பகுதி தென்னைகளில் 'கட்டைக் குருத்து'

தென்மராட்சி,ஜூன் 15

தென்மராட்சி பிரதேசத்தில் மீள்குடியமர்வின் பின்னர் மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் நடப்பட்ட தென்னைகளில் 'கட்டைக் குருத்து' நோய் ஏற்பட்டுள்ளதாக விவசாயப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மீள்நடுகைத் திட்டத்தில் நடப்பட்டு வளர்த்த மரங்களாகக் காணப்படும் தென்னைகளிலேயே இவ்வாறான நோய் காணப்படுகிறது.

தென்னை மரங்களில் கட்டைக் குருத்து வெளிவந்தால் உடனடியாக அருகில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் பணிபுரியும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த பத்திரிகையாளருக்கு கௌரவிப்பு நிகழ்வு

மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினத்தின் அறுபது (கோபு) ஆண்டுகள்கால எழுத்துப்பணியைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இராமநாதன் வீதியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்புரைகளைமுன்னாள் ஈழநாடுப் பத்திரிகையின் துணை ஆசிரியர் எஸ். பெருமாள், யாழ். தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வி.அற்புதானந்தன், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், மற்றும் முன்னாள் ஈழநாடு பத்திரிகையின் துணை ஆசிரியர் கே.சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஐ)

அல்வாய் கிழக்கில் சக்திமிகு மின் விநியோகம்



வடமராட்சி, ஜூன் 15

நெல்லியடி, அல்வாய் கிழக்கு பிரதேசங்களில் சில பகுதிகளில் வழங்கப்பட்டு வந்த குறைந்த வலு மின்சார விநியோகத்தை சீர் செய்து நிகரான மின்சாரம் கடந்த செவ்வாய்க் கிழமை முதல்வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கென இலங்கை மின்சார சபையின் பருத்தித்துறை பிரதேச அலுவலகத்தால் நெல்லியடி காளி கோயிலடியிலும் அல்வாய் கிழக்கு இலகடியிலும் புதிதாக மின்மாற்றிகள் நிறுவப்பட்டு அவற்றின் மூலம் இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது.

இதேவேளை, பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருப் பகுதியில் குறைந்த மின் வலு கிடைப்பதால் அதனைச் சீர் செய்து நிகரான மின்விநியோகத்தை மேற்கொள்ள அந்தப் பகுதியிலும் ஒரு மின்மாற்றி நிறுவப்படவுள்ளதாக மின்சார அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-8)

தென்மராட்சியில் மலசலகூடங்கள் அமைக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 45 பயனாளிகளுக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தலா 60 ஆயிரம் ரூபா செலவில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. கரம்பகம், எழுதுமட்டுவாழ் தெற்கு, மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி-நாவற்குழி ஆகிய பிரிவுகளில் தலா எட்டுப் பேரும், வரணி வடக்குப் பிரிவில் ஐந்து பேருமாக 45 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வேலைகள் இடம்பெறுகின்றன. (வ-9)

மோ. சைக்கிள்கள் மோதியதில் மாணவிகள் காயம்

தென்மராட்சி, ஜூன் 15

பாடசாலை முடிவடைந்து வீடு சென்ற ஆறு வயது மாணவியும், சைக்கிளில் சென்ற யுவதியும் மோட்டார்சைக்கிள்களால் மோதுண்டு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை இடம் பெற்றது. சாவகச்சேரி கச்சாய் வீதியில் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய சக்தி யம்மன் வித்தியாலய தரம் ஒன்று மாணவியான சத்தியராஜ் சாணுஜா (வயது-6), ஏ-9 வீதியில் சைக்கிளில் சென்ற வேளையில் மோட்டார் சைக்கிளால் மோதுண்டனுணாவில் மேற்கைச் சேர்ந்த சூரியகுமார் சோபிகா (வயது-20) ஆகியோரே காயமடைந்தவர்களாவார். (வ-9)

கைமாறிய கடைகள் புதிய உரிமையாளர்களுக்கு

சாவகச்சேரி நகர சபை தீர்மானம்

தென்மராட்சி, ஜூன் 15

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான கடைகள் கைமாறியிருப்பின் புதிய உரிமையாளருக்கு அதனை மாற்றிக் கொடுக்க நகரசபை மாதாந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகரசபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கைமாறிய கடைகளை மாற்றம் செய்யப்படவுள்ளன.

கைமாறிய கடைகள் தொடர்பாக சபை உறுப்பினர்களையும், செயலாளரையும் கொண்ட குழு அமைக்கப்பட்டு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் உரிய தொகையை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துபவர்களுக்கு குத்தகை பெயர் மாற்றம் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை நகரசபைக்குச் சொந்தமாக கடை அறைகளுக்குரிய வாடகையைச் செலுத்தாமல் நிலுவையாக விட்டிருக்கும் வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றியும் ஆராயப்பட்டதாகவும் மேலும் தெரிவித்தார். (வ-9)

யாழ். பிரதான வீதி உணவகத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ். பிரதான வீதியில் 6 ஆம் குறுக்கு வீதிக்கு முன்பாக உள்ள உணவகம் ஒன்று புதன் இரவு உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டுள்ளது.

கடையில் இருந்த சிகரெட் பைக்கற்களும், ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-51)

ரூபா 10 மில்லியன் செலவில் சாவகச்சேரியில் மீன்சந்தை

நிர்மாணிக்கவுள்ளது நகர சபை

தென்மராட்சி, ஜூன் 15

சாவகச்சேரி நகரசபையில் பத்து மில்லியன் ரூபா செலவில் புதிய மீன் சந்தைக் கட்டடம் அமைப்பதென நேற்று நடைபெற்ற நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நகர சபையின் பொதுச் சந்தையுடன் இயங்கி வந்த மீன் சந்தைக் கட்டடத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், தற்போது அமைந்துள்ள இடத்திலிருந்து தனங்கிளப்பு வீதியில் மீன் சந்தை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மீன் சந்தை நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதேவேளை மீன்சந்தை அமைப்பதற்கான பணிகளுக்கு சபை நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்வதென நேற்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (வ-9)

தற்போது அமைந்துள்ள இடத்திலிருந்து தனங்கிளப்பு வீதியில் மீன் சந்தை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மீன் சந்தை நிர்மாணிக்கப்படவுள்ளது.

திருச்சொரூப பவனி.....

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பெருந்திருவிழாவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற திருச்சொரூப பவனி (வ)

விசேட தேவையுடையோருக்கு பிரதேச செயலகூடாக வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

அரச மற்றும் தனியார்துறைகளில் விசேட தேவை உடையவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாக இந்த நியமன வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. சமூக சேவை அமைச்சு இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு விதங்களில் பாதிக்கப்பட்டு விசேட தேவைக்குரியவர்கள் எனக் கொள்ளப்படும் அனைவரும் அந்தப் பகுதி பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவில் சமூக சேவை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விசேட தேவைக்குரியவர்களுக்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட ஆள்சேர்ப்பு விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

வேலை வாய்ப்பில் விருப்பமும் ஆர்வமும் உடையவர்கள் மேற்படி விண்ணப்பங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (வ-50)

தீவக பண்ணைப் பாதை

புனரமைப்புப் பணிகள் இனி செப்ரெம்பரில்

யாழ்ப்பாணம், ஜூன் 15

தீவகத்துக்கான பிரதான தரைப் போக்குவரத்து மார்க்கமான பண்ணைப் பாதையின் அடுத்த கட்டப் புனரமைப்பு பணிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார்.

பண்ணை வீதிப் புனரமைப்பு பணிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வீதி அகலமாக்கப்பட்டு, 'காப்பெற்' போடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

அடுத்த கட்டமாக பண்ணையிலிருந்து, ஊர்காவற்றுறை சந்தி வரையான வீதியே [illegible] புனரமைக்கப்படவுள்ளது.

இந்தப் பணிகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பமாகவுள்ளன. (ஒ-5-17)

சந்தைகளில் வெட்டிய பழங்கள் சுகாதாரச் சீர்கேடு அபாயம்

பொதுமக்கள் விசனம்



கொழும்புத்துறை, ஜூன் 15

யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகள், பிரதான வீதிகள் ஆகியவற்றில் பழவகைகளை விற்பனை செய்வோர் பழங்களை வெட்டி வைத்து விற்பனையில் ஈடுபடுவது பல வகையான சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்துவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சனநடமாட்டமும் போக்குவரத்து அதிகரிப்பும் மிகுந்த பகுதிகளில் கிளம்பும் தூசி மற்றும் இலையான் பழவகைகளில் வீழ்ந்து நோய்த்தாக்க கிருமிகளை ஏற்படுத்துவதாக மக்கள் முறையிட்டுள்ளதாக யாழ். மாநகர சபை உறுப்பினர் அ.கொர்னேசியஸ் தெரிவித்தார்.

அத்துடன் குருநகர், கொட்டடி போன்ற மீன் சந்தைகளில் பழுதடைந்த மீன்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள் இவ்வாறான சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலான செயற்பாடுகளை விழிப்புடன் அவதானித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (வ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாநிதியை சந்தித்தார் ஜெயந்தி நடராஜன்

சென்னை, ஜூன் 15

தி.மு.க. தலைவர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெயந்தி நடராஜன்.

இந்தச் சந்திப்பு சில நிமிடங்கள் நடைபெற்றன என்று கூறப்படுகிறது.

ஜெயந்தி நடராஜன் கருணாநிதியின் பிறந்த நாளையொட்டி அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காகவே இந்தச் சந்திப்பை மேற்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

பிரதமர் வேட்பாளர் மோடி அல்ல- அத்வானி

புதுடில்லி, ஜூன் 15

நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட மாட்டார் என்று நிதிஷ் குமாரை சமாதானப்படுத்தியுள்ளார் அத்வானி.

பா.ஜ.கவின் பிரசாரக் குழுத் தலைவராக மோடி நியமிக்கப்பட்டதை அடுத்து பா.ஜ.க கூட்டணிக்குள் பெரும் இழுபறி நிலை தோன்றியுள்ளது. பாரதீய ஜனதா கூட்டணியில் இருந்து நிதிஷ் குமார் தலைமையிலான ஜக்கிய ஜனதா தளம் வெளியேறவுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகின.

அதையடுத்தே நிதீஷ்குமாரைச் சமாதானப்படுத்தும் முயற்சிகளில் அத்வானி ஈடுபட்டுள்ளார்.

நரேந்திர மோடி பிரசாரக் குழுத் தலைவராகவே நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட மாட்டார் என்று நிதிஷ் குமாரிடம் எடுத்துக் கூறியுள்ளார் அத்வானி.

மோடியைப் பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதில் கட்சித் தலைவர்களிடையே ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை ஐக்கிய ஜனதா தளத்தை கலந்து ஆலோசிக்காமல் பிரதமர் வேட்பாளரை முடிவு செய்ய மாட்டோம் என்றும் உறுதியளித்துள்ளார் அத்வானி.

பெரும்பாலும் நாளை கூட்டணி முறிவு அறிவிப்பை நிதிஷ்குமார் வெளியிடுவார் என்று எதிர்பார்திருந்த நிலையிலேயே அத்வானியின் இந்த சமரச முயற்சி ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, பாரதிய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீத்தாராமன் இந்த தகவலை மறுத்தார். அது போன்ற உறுதி மொழி எதையும் பாரதீய ஜனதா அளிக்கவில்லை என்றும் அவர் கூறினார். (ற)



மிரட்டும் எண்ணெய் நிறுவனங்கள்

புதுடில்லி, ஜூன் 15

அமைச்சர்களை பெட்ரோலிய நிறுவனங்கள் மிரட்டி வருகின்றன என்று தெரிவித்துள்ளார் மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி.

நேற்று புதுடில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''பெட்ரோலிய அமைச்சர்களாக இருந்த அனைவரையுமே எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்கள் மிரட்டுகின்றன. மிரட்டல்களுக்கு எல்லாம் பணிந்து அரச பணத்தை வெளியே செல்ல விடமாட்டேன்" என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

மத்திய அமைச்சரவை விரைவில் மாற்றம்

சோனியா – மன்மோகன் ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 15

மத்திய அமைச்சரவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குடன், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா ஆலோசனை நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கட்சித் தலைவர் சோனியா காந்தியின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் மத்திய அமைச்சரவையில் வெற்றிடமாக இருக்கும் இடங்களை நிரப்புவது குறித்தே முக்கியமாக ஆலோசிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த பிரதமர் மன்மோகன் சிங், விரைவில் மத்திய அமைச்சரவையில் உள்ள வெற்றிடங்களுக்கு அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

தனித் தெலுங்கானா

வலியுறுத்திப் பெரும் போராட்டம்; சட்ட சபை முற்றுகை



ஐதராபாத், ஜூன் 15

தனித் தெலுங்கானாவை வலியுறுத்தி நேற்று ஐதராபாத்தில் நடந்த சட்டசபை முற்றுகைப் போராட்டத்தால் அங்கு அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சட்ட சபையை முற்றுகைப் போராட்டம் அறிவிக்கப்பட்டு பல இடங்களில் இருந்தும் பேரணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதையடுத்து ஆயிரக்கணக்கான பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை தெலுங்கானா ராஷ்ட்டிரிய சமிதி மற்றும் பா.ஜ.கட்சியைச் சேர்ந்த பலர் சட்டசபையை முற்றுகையிட முயன்ற வேளை கைது செய்யப்பட்டனர். இதற்கிடையில் உஸ்மானியா பல்கலை. மாணவர்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர். அதையடுத்து பல மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டசபை ஒத்திவைப்பு

நேற்றுக் காலை சட்டசபை தொடங்கியதும் தனித் தெலுங்கானா கோரி உறுப்பினர்கள் கோசம் எழுப்பியமையால் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

தற்கொலை மிரட்டல்

தெலுங்கானா ராஷ்ட்டிரிய சமிதி கட்சியின் சட்டசபை உறுப்பினர்கள் இருவர் சட்டசபை கட்டடத்தின் மாடியில் இருந்து குதிக்கப் போவதாக மிரட்டினர். தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும். கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களை விடுவிக்க வேண்டும் போன்ற வற்றை வலியுறுத்தி அவர்கள் கோசம் எழுப்பினர். பின்னர் சபைப் பாதுகாவலர்கள் அவர்கள் இருவரையும் குண்டுக்கட்டாகத் தூக்கி கீழே கொண்டுவந்தனர். சட்டசபை வளாகத்தில் மாநில அரசைக் கண்டித்து கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன. (ற)

15 நாள்களின் பின்னரே 'கப்டனின்' பதிலடியாம்

பிரேமலதா கூறுகின்றார்

சென்னை, ஜூன் 15

முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து வரும் தே.மு.தி.க. சட்டசபை உறுப்பினர்களுக்கு 15 நாள்களுக்குப் பின்னர் விஜயகாந்த் பதிலடி கொடுப்பார் என்று தெரிவித்துள்ளார் பிரேமலதா விஜயகாந்த்.

ஈரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோதே பிரேமலதா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

''தே.மு.தி.க. உறுப்பினர்கள் 7 பேர் எங்களை விட்டுச் சென்றுவிட்டதாகக் கூறுகிறார்கள். அவர்கள் 7 பேரின் வாக்குகள்தான் சென்றுவிட்டன. ஆனால் 7 கோடி மக்களின் அன்பு எங்களுக்கு உள்ளது.

இப்போது மாநிலங்களவை தேர்தலில், சட்டசபை உறுப்பினர் பதவிக்காக நாங்கள் கூட்டணி அமைக்க முனைவதாகக் கூறுகின்றனர். மாநிலங்களவை உறுப்பினர் பதவி எங்களது லட்சியம் அல்ல. மாநிலங்களவை தேர் தல் குறித்த முடிவை விரை வில் விஜயகாந்த் அறிவிப்பார்.

தற்போது தே.மு.தி.க. உறுப்பினர்கள் முதல்வரை சந்தித்து வருவது குறித்து 15 நாள்களுக்குப் பின்னர் பதிலடி கொடுப்பார்'' என்றார். (ற)

மகனை காதலித்தவரை தீ வைத்து எரித்த பெற்றோர்

லக்னோ, ஜூன் 15

உத்தரப்பிரதேச மாநிலம் கரஹ்கோல் கிராமத்தில் மகனைக்காதலித்த பெண்ணை தீ வைத்து எரித்த குடும்பத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் கரஹ்கோல் என்ற கிராமம் உள்ளது. அங்கு மஞ்சு என்ற பெண் ரஞ்சித் என்ற வாலிபரை காதலித்து வந்தார். இதற்கு ரஞ்சித்தின் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து ஊர் பஞ்சாயத்தையும் கூட்டினர். பஞ்சாயத்தில் காதலர்களை சேர்த்து வைக்குமாறு மஞ்சுவின்தாய்கோரிக்கைவைத்தார். இதனால் ஆத்திரம் அடைந்த ரஞ்சித்தின் பெற்றோர், மஞ்சுவின் தாயாரை சரமாரியாக தாக்கினர். இதைப்பார்த்தும் மஞ்சு ஓடிச்சென்றுதாயை காப்பாற்ற முயன்றார். இதனால் ஆத்திரம் அடைந்த ரஞ்சித்தின் பெற்றோர் மஞ்சு மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்தனர். மஞ்சு சம்பவ இத்திலேயே உடல் கருகி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக ரஞ்சித்தின் தாய் மற்றும் சகோதரி கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)

மும்பை பொலிஸாரின் சம்பளம் திருட்டு

ஐதராபாத், ஜூன் 15

மும்பைப் பொலிஸார் பலரின் சம்பளக் கணக்குகள் திருடப்பட்டு அதில் இருந்த பணம் எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இந்திய ஒக்சிஸ் வங்கியிலேயே மும்பை பொலிஸாரின் சம்பள கணக்குகள் உள்ளன. அதில் பலரின் சம்பள கணக்குகள் திருடப்பட்டுள்ளன. அந்த கணக்குகளில் இருந்த பணம் கிரீஸ் நாட்டில் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எத்தனை பேரின் கணக்குகள் திருட்டு செய்யப்பட்டன என்று இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

இது குறித்து பொலிஸ் குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

இந்த இணைய வழித் திருட்டுக் குறித்து அறிக்கையிடுமாறு ஒக்சிஸ் வங்கிக்கு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். (ற)

மம்தாவுக்கு தெலுங்கு தேசம் ஆதரவு

புதுடில்லி, ஜூன் 15

பா.ஜ.க. கூட்டணிக்கு எதிராக மூன்றாவது அணி அமைப்பதற்கு சமாஜ்வாடி, தெலுங்கு தேசம் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன என்று கூறப்படுகிறது.

மூன்றாவது அணி அமைப்பது குறித்து தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் சந்திரபாபு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''மூன்றாவது அணியில் தெலுங்கு தேசம் சேரும்'' என்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, உத்தரப் பிரதேச முதல்வரும், சமாஜ்வாடிக் கட்சியின் மூத்த தலைவருமான அகிலேஷ் யாதவும் ''காங்கிரஸும், பா.ஜ.கவும் ஆட்சியை நடத்துவதில் தோல்வி கண்டுள்ளன. மூன்றாவது அணி அமைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது'' என்று தெரிவித்துள்ளார்.

எனினும் கூட்டாட்சி முன்னணி என்ற பெயரில் தனி அணி உருவாக்கப்படும் என்று மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி அறிவித்திருப்பது காங்கிரஸையும், பாரதிய ஜனதாவையும் மிரட்டுவதற்காகவும், கூடுதல் சலுகை பெறுவதற்காகவுமே என்று கம்யூனிஸ்ட் கட்சிகள் தெரிவித்துள்ளன. மேற்கு வங்க எதிர்க்கட்சித் தலைவர், சூர்யகாந்த் மிஸ்ரா கருத்துத் தெரிவிக்கையில், ''லோக்சபா தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் மற்றும் பா.ஜ.கவிடம் கூடுதல் இடங்களை பெறுவதற்கும், மத்திய அரசிடம் இருந்து கூடுதல் சலுகைகளை பெறுவதற்காகவுமே கூட்டாட்சி முன்னணி என்பதைக் கையில் எடுத்துள்ளார் மம்தா'' என்று தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிரிய உள்நாட்டுப் போரில் இதுவரை ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்துள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. புள்ளிவிரவங்களின் படி பத்து வயதுக்குக் குறைந்த வயதுடையவர்களே அதிகம் உயிரிழந்துள்ளதுடன், ஜனாதிபதி அசாத்திற்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளே அதிகம் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த தலைமுறை கிளர்ச்சியாளர்கள் உருவாகக்கூடாது என்கிற நோக்கில் இந்த உயிரிழப்புகள் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்றும் ஐ.நா. சபை அச்சம் தெரிவித்துள்ளது. அதே வேளை, அரசுக்கு ஆதரவாக செயற்பட்டுவரும் படைகளின் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர் என்றும் ஐ.நா. சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ற)

அமெ. கண்காணிப்பில் சீனா

ஸ்நோடென் கூறுகின்றார்

அமெரிக்காவின் அதிநவீன உளவுத் திட்டங்களை அம்பலப்படுத்திய எர்வர்ட் ஸ்னோடென் அடுத்தடுத்து அதிர்ச்சிகரமான தகவல்களை வெளியிட்டு வருகிறார்.

ஹொங்கொங் மற்றும் சீனாவின் பிற பகுதிகளில் இணையத்தின் மூலம் அமெரிக்கா வேவு பார்த்து வருவதாக ஹொங்கொங் இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியுள்ளார்.

ஹொங்கொங்கில் உள்ள சீனப் பல்கலைக்கழகம் அமெரிக்காவின் இலக்குகளில் ஒன்று எனவும் ஸ்னோடென் கூறியுள்ளார். ஹொங்கொங்கில் இருந்து தாம் வெளியேறப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

2050 ஆம் ஆண்டில் 960 கோடி மக்கள்

ஜெனிவா, ஜூன் 15

2050ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 960 கோடியை எட்டும் என்று ஐ.நா. சபை கணித்துள்ளது.

'உலக மக்கள் தொகை ஆய்வு' என்ற தலைப்பில் ஐ.நா. சபை தயாரித்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய மக்கள்தொகை 720 கோடியாக உள்ள நிலையில், அடுத்த 12 ஆண்டுகளில் 100 கோடிக்கும் அதிகமாக மக்கள் தொகை அதிகரித்து 960 கோடியை எட்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வளரும் நாடுகளிலேயே மக்கள் தொகை அதிகரிக்கும் என்றும், இதில் அரைவாசிக்கும் அதிகமான மக்கள் தொகை ஆபிரிக்க நாடுகளில் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ந்த நாடுகளில் தற்போதுள்ள மக்கள் தொகை வளர்ச்சி அப்படியே இருக்கும். அதேசமயம் வளர்ச்சி குன்றிய 49 நாடுகளில் மக்கள் தொகை இரட்டிப்பாகும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2028ஆம் ஆண்டில் மக்கள் தொகை எண்ணிக்கையில் சீனாவை இந்தியா பின்தள்ளும் என்றும் அறிக்கை தெரிவிக்கிறது. (ற)

பொலிஸார் மீது துப்பியவருக்கு 10,000 டொலர் அபராதம்

டவுன்ரவுன், ஜூன் 15

சிங்கப்பூரில் குடித்து விட்டு, பொலிஸாரின் முகத்தில் துப்பிய பிரிட்டன் நாட்டவருக்கு 10 ஆயிரம் டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனை சேர்ந்தவர் போர்கன் டங்கன், சிங்கப்பூரில் இயங்கும் விமான நிறுவனத்தால் வெளியிடப்படும் பத்திரிகை ஒன்றில் இவர் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.

இவர் ஒருமுறை அதிகமாக மது அருந்தி விட்டு நிலை தடுமாறி வீதியில் படுத்து விட்டார். அப்போது அந்த வழியாக வந்த இரண்டு பொலிஸார், டங்கனை எழுப்பி விசாரித்தனர். அப்போது அவர் பொலிஸாரை மரியாதைக் குறைவாகப் பேசினார். அதனால் கோபமடைந்த பொலிஸார் அவரது கைகளில் விலங்கிட்டு தம்முடன் அழைத்துச் சென்றனர். அப்போது டங்கன் பொலிஸாரின் மீது துப்பினார்.

அதையடுத்து அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. டங்கனுக்கு நான்கு ஆண்டுகள் கால சிறை தண்டனை அளிக்கும்படி, அரச தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் கோரினார். எனினும், டங்கன் 10 ஆயிரம் டொலர் அபராதத்துடன் தப்பித்துக் கொண்டார். (ற)

சிரிய கிளர்ச்சியாளருக்கு அமெரிக்க ஆயுதங்கள்

வோஷிங்டன், ஜூன் 15

சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுத உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரிய அரச படைகள் இரசாயனத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே அமெரிக்கா கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது என்று முடிவெடுத்துள்ளது என்றும் மேலும் கூறப்படுகின்றது.



தற்போது சிரிய இராணுவத்தின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதுடன், கிளர்ச்சியாளர்களுக்குப் பல்வேறு இடங்களில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அத்துடன் சிரிய இராணுவத்துக்கு ஹிஸ்புல்லா அமைப்பு ஆதரவு வழங்கி வருவதுடன், கிளர்ச்சியாளர்கள் மீதான தாக்குதல்களில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றது. இவற்றைக் கருத்தில்கொண்டே அமெரிக்கா இந்த முடிவை எடுத்துள்ளது என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, சிரிய விவகாரத்தில் இணைந்து செயற்படுவதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் முடிவு செய்துள்ளன.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெரி, பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் ஆகியோர் வோஷிங்டனில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்துள்ள ஜோன் கெரி, ''சிரியாவில் அரசியல் தீர்வு காண்பதில் அமெரிக்காவும், பிரிட்டனும் ஒருங்கிணைந்து செயற்படும். இந்த அமைதி நடவடிக்கையில் ஹிஸ்புல்லா அமைப்பு மற்றும் ஈரான் அரசையும் ஈடுபடுத்துவோம்.

சிரிய விவகாரத்தில் கிளர்ச்சியாளர்களுக்கு தேவையான உதவி அனைத்தையும் செய்யத் தயாராக உள்ளோம். கள நிலவரத்தை ஆராய்ந்து அதற்கேற்ப அரசியல் தீர்வை முன்வைக்க அமெரிக்காவும், பிரிட்டனும் திட்டமிட்டுள்ளது'' என்று தெரிவித்தார்.

வில்லியம் ஹேக் கூறும்போது, ''சிரியாவில் அமைதியை கொண்டு வருவதற்கு ஒருங்கிணைந்த மற்றும் உறுதியான நடவடிக்கை தேவை என்பதை உணர்ந்துள்ளோம். இது தொடர்பாக அமெரிக்காவுடனும், ஐரோப்பியாவில் உள்ள எங்களின் நேச நாடுகளுடனும் இணைந்து செயற்படுவோம். கிளர்ச்சியாளர்கள் அமைதியான முறையில் போராட்டம் நடத்தியபோது அவர்கள் மீது தாக்குதலைத் தொடங்கியவர் சிரிய ஜனாதிபதி என்பதை மறந்துவிடக் கூடாது. எனினும் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அவரை வலியுறுத்துவோம்'' என்றார். (ற)

இனியும் பொறுக்க முடியாது

துருக்கிப் பிரதமர் எச்சரிக்கை

இஸ்தான்புல், ஜூன் 15

துருக்கியில் அரசுக்கு எதிரான போராட்டம் நடத்தப்பட்டு வரும் இஸ்தான்புல் பூங்காவில் இருந்து, போராட்டக்காரர்கள் உடனடியாகக் வெளியேற வேண்டும் என்று அந்நாட்டுப் பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதற்கு மேல் அரசு பொறுமையாக இருக்காது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பூங்காவை அகற்றுவது குறித்து பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும் என்று போராட்டக்காரர்களிடம் எர்டோகன் உறுதியளித்திருந்தார். எனினும் அதை ஏற்காத போராட்டக்காரர்கள் தொடர்ந்து இஸ்தான்புல் நகரத்தில் உள்ள கெஸி பூங்காவில் தங்கியுள்ளனர். கெஸி பூங்காவை அகற்றும் திட்டத்தைக் கைவிடுவதாக அரசு அறிவிக்கும்வரை பின்வாங்கப் போவதில்லை என்று போராட்டக்காரர்கள் கூறியுள்ளனர். (ற)

நிலநடுக்கம்

ஜகார்தா, ஜூன் 15

இந்தோனேஷியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. தலைநகர் ஜகார்த்தாவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.7 ஆகபதிவானது. தலைநகர் ஜகார்தாவின் பிஸ்கோவா தீவில் கடலுக்கு அடியில் 11 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. சேதங்கள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. (ற)

வேற்று கிரகவாசிகளை கண்டறிய டெலஸ்கோப்

நியூயோர்க், ஜூன் 15

விண்வெளியில் வேற்று கிரகவாசிகளை ஆராயும் பொருட்டு பிரமாண்டமான டெலஸ்கோப்பை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் ஹவாய் விண்வெளி ஆய்வு மைய விஞ்ஞானிகள்.

பேராசிரியர் ஜெப் தலைமையினான குழுவே இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து ஜெப் கூறும்போது,

''எங்கள் திட்டத்தின்படி தயாரிக்கப்பட உள்ள டெலஸ்கோப் 77 மீற்றர் விட்டம் கொண்டதாக இருக்கும். இதுவரையில் இந்த அளவுக்கு எந்த டெலஸ்கோப்பும் தயாரிக்கப்படவில்லை. இதற்கு 1000 கோடி டொலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சராசரியாக இப்போது வேற்று கிரகவாசிகளை கண்டறியஒலியலைகளை அனுப்பி சோதனை செய்யப்பட்டு வருகின்றது. அதாவது பூமியில் இருந்து அனுப்பப்படும் ஒலியலைகளை வேற்று கிரகவாசிகள் பெற்றால், அதற்கு பதில் சமிக்ஞை அனுப்புவார்கள் என்ற நம்பிக்கையில் இது அனுப்பப்படுகிறது. 40 ஆண்டுகளாக தேடப்பட்டு வரும் இது போன்ற ஆராய்ச்சியில் இது வரையில் ஒரு முன்னேற்றமும் இல்லை.

இந்த டெலஸ்கோப் உடல் வெப்பத்தை வைத்து வேற்று கிரகவாசிகளைக் கண்டறியும். பூமியில் இருந்து பெரும் தொலைவில் இருந்தாலும், அவர்களின் நடமாட்டத்தை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்க முடியும்.

இதற்கு கொலாசஸ் என்று பெயரிட்டுள்ளோம்'' என்று தெரிவித்தார். (ற)

பாக். இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு

இஸ்லாமாபாத், ஜூன் 15

இராணுவத்திற்கான நிதியை 15 சதவீதமாக உயர்த்தியுள்ளது பாகிஸ்தான்.

பாகிஸ்தானில் நவாஸ் செரீப் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதன் பின்னர் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பிரதமர் நவாஸ் செரீப்பின் வசம் இராணுவம் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சுக்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பர தொடர்புகளுக்கு:
021 5671111
advt@uthayan.com

பணிப்பெண் தேவை

பணிப்பெண் தேவை

தொ.பே: 078 884 7111 (38068) (3.6.2)

கார் விற்பனைக்கு

TOYOTA ALLION 2002, KB-7xxx, கறுப்பு நிறம், ஓட்டோ கியர் கொண்ட கார் விற்பனைக்குண்டு. (38322) (6.2.3)
தொ.பே: 077 717 3733

காணி விற்பனை

அளவெட்டி, தெற்கு மேற்கு பிள்ளையார் கோவிற்கு (பட்டின் கடை வீதி)8½ பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. பிரதம் கோடுக்கப்படும்.
தொ.பே: 077 379 5291 (38297) (3.6.11)

யாழ். - கிளிநொச்சி Staff சேவில் A/C Bus

வரும் திங்கள் முதல் பரமேஸ்வரா சந்தி அருகில் இருந்து யாழ். பஸ் தரிப்பு ஊடாக கிளிநொச்சிக்கு தினமும் காலை 6.30 சென்று மீண்டும் மாலை 5.30 வரும். உடன் ஆசன பதிவிற்கு.
(38312)(3.6) 0777750308

காணி விற்பனைக்கு

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் உள்ள கற்குளி ஒழுங்கையில் 12 பரப்புக் காணி (கிணற் றுடன் வீடு கட்டக் கூடிய காணி) விற்பனைக்கு உண்டு.
தொ.பே:
077 605 5545, 077 271 8249
(38328)(3.6.7.11)

மணமகள் தேவை

★80 இன் றிந்த 2 இன் செவ்வாய், 28½ பவுனும் ஆன்றிலேயாவின் றிஜு ★ வை பெற்ற மணமகனுக்கு பாத்த அழகான மணமகள் தேவை. தேவை விண்ணப்பங்கள் மட்டு.

★81 இன் றிந்த 2 இன் செவ்வாய், 9½ பவுனும் ஆன்றிலேயாவின் றிஜு ★ வை பெற்ற மணமகனுக்கு பாத்த அழகான மணமகள் தேவை.

★80 இன் றிந்த 4 இன் செவ்வாய், 21 பவுனும் ஆன்றிலேயாவின் றிஜு ★ வை பெற்ற பி.எஸ்.சி படித்த மணமகனுக்கு பாத்த அழகான மணமகள் தேவை.

★79 இன் றிந்த 12 இன் செவ்வாய், 43 பவுனும் ஆன்றிலேயா றிஜு ★ வை பெற்ற எக்வுன்டன்ட் படித்த மணமகனுக்கு பாத்த அழகான மணமகள் தேவை.

★74 இன் றிந்த செவ்வாய் வயிரவர் 9½ பவுனும் உயர்ந்த றிஜு ★ வை பெற்ற மணமகன் அந்தணர் மரபைச் சேர்ந்த மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன்
திருமணசேவை, இல.433/3, கோயில் வீதி, நல்லூர். 077 607 0862
(38295)(3.6.11)

CSC-ASIAN

COMPUTER EDUCATION

AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

அனைத்து கொம்ப்யூட்டர் டிப்ளோமா பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் 18-06-2013

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677

பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறும். (ஒ-14)

25 ஆவது திருமண வெள்ளிவிழா வாழ்த்து

15.06.1988 - 15.06.2013 25 ஆவது திருமண நிறைவு விழாவை (வெள்ளி) கொண்டாடுகின்ற
திரு.திருமதி
அன்ரன் சகாயராஜ் அருள்வதனா
தம்பதியினருக்கு எமது உளம் கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.
அன்புடன் வாழ்த்துபவர்:
அப்பா, அம்மா, அன்பு அண்ணன்
வணபிதா பி.ஜேக்கப் யோகராஜ் (அமதி) மற்றும் சகோதரர்கள்.
11 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

இலவச இணையக் கற்கை நெறி நிறுவகம்
SERVE e -Learning Institute
பதிவு எண்:1100

கற்கை நெறி :இலவச Diploma In Information Communication Technology (ICT) 4 மாதங்கள்
தகைமைகள்: க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றி பல்கலைக் கழக அனுமதியை எதிர்நோக்குவோர்.
க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து வேலை தேடுவோர் OR வேறு தொழிற்பயிற்சிகளை மேற்கொள்வோர்.
க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றியோர்.
பாடங்கள் : தகவல் தொழில்நுட்பம் (ICT), ஆங்கிலம் (English) தட்டச்சுப் பயிற்சி (Computer Typing)

விண்ணப்ப முடிவு திகதி: 25.06.2013
மேலதிக விவரங்களுக்கு:
No.66,கட்டைப் பாலி ஒழுங்கை, ஆனைக்கோட்டை.
தொ.பே இல: 021 225 6206
மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.

(38324) (3.6.11)
பதிவாளர்
SERVE-e-Learning Institute

G.F.A முன்பள்ளிக்கு ஆசிரியர் தேவை

முன்பள்ளி டிப்ளோமா கல்வி கற்ற அல்லது கற்கின்ற க.பொ.த (உயர்தரம்) படித்த நல்லூர் பிரதேசத்திற்கு உட்பட்ட கிறிஸ்தவ ஆசிரியர் விரும்பத்தக்கது.
வயது 20-30
Rev.p.Arumainayagam
தொ.பே: 077 706 5274
(38327)(3.6.11)

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை
பதவி வெற்றிடங்கள்

எமது சங்கத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி : களஞ்சிய முகாமையாளர் 208 /12

02. சம்பளத்திட்டம் : 9700 80 x 10 - 85 x 10 - 11350 இத்துடன் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பும் படிகளும் வழங்கப்படும்.

03. கல்வித்தகைமை:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் சம் பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்துக்குக் குறை யாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான 4 வருடத் துக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம்/ க.பொ.த. (சாதாரணதரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், சிங்கள்/தமிழ் பாசை என்பனவற்றினை உள்ளடக்கிய 6 பாடங்களிலான சித்தி.

02. பதவி : களஞ்சிய முகாமையாளர் 208 /13

(I) சம்பளத் அளவுத்திட்டம்: 9450 -75x10 -80x10 -11000

(II)கல்வித்தகைமை: கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுற வுப் பணியாளரின் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம் / க.பொ.த. (சாதாரணதரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம் / வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம், சிங்கள / தமிழ் பாசை என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்க ளிலான சித்தி, சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ள வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* கணினி அறிவும் திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங் கப்படும்.
* மேற்படி பதவிக்கு தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப்பிணையும், ஆதனப்பிணையும் வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்புதல்

சங்கத் தலைமையகத்தில் ரூபா 20/= செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்துடன் கல்வித்தகைமைச் சான்றிதழ், அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றி தழ்களின் நிகழற் பிரதிகள் இணைக்கப்படவேண்டும். பூர்த்தி செய்யப்பட் விண்ணப்பங்கள் 29.06.2013 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், புலோப்பளை வீதி, பளை என்னும் முக வரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப் பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்"கிளை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்:
(சி/9826) (45.6.3) பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம், பளை.

வேலம்பிராய்
கண்ணகி அம்மன் ஆலயம்
அருள்மிகு சிவகாமி அம்மன் தேவஸ்தானம்
அனாவர்த்தன, அஷ்டபந்தன, நவகுண்ட பகூடி
மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கிரியாரம்பம்
15.06.2013 சனிக்கிழமை
அதிகாலை 5.00 மணி

எண்ணெய்க்காப்பு
20.06.2013 வியாழக்கிழமை
காலை 9.00 மணிமுதல்
மாலை 4.00 மணிவரை

மஹா கும்பாபிஷேகம்
21.06.2013 வெள்ளிக்கிழமை
காலை 9.48 மணிமுதல் 10.30 மணிவரை

(C/9676)(10.6.3)

தொ.பே: 0770748748
மின்னஞ்சல்: velampiraikannakiamman@gmail.com
இணையதளம்: http://www.velampiraikannakiamman.com
கோயிலிக்கண்டி, கைதடி.

பரிபாலன சபை.

DiCA Diploma In Computerized Accounting

இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட
வேலை வாய்ப்பை உறுதிப்படுத்தும்
பெறுமதிமிக்க கற்கைநெறி
முற்றிலும் இலவசமாக!

Course Contents
MYOB Quick Books ACCPAC
SAGE Peachtree Tally

புதிய பிரிவுகள்
17.06.2013 மற்றும் 21.06.2013
ஒரு பிரிவில் 25 மாணவர்கள் மட்டுமே...!

DiE Diploma in English
Duration : 4 months Free Text Books
இலவசக் கற்கைநெறியைப் பயின்று *DiE* யை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்...!

100% DISCOUNT
ESOFT (Pvt) Ltd
கற்கைநெறி முடிவில் வேலைவாய்ப்பு

ESOFT Metro Campus -Jaffna
No.137, K.K.S Road, Jaffna | Tel : 021 750 1120
CALL : 077 309 9 308
Changing Lives, Creating Futures.
(C/9833)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உலக சுற்றாடல் தினத்தையொட்டி நடத்தப்பட்ட சுற்றாடல் வாரத்தின் இறுதிநாள் நிகழ்வு புதனன்று சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவலர்கள் கலந்துகொண்டு உரை யாற்றினர். (வ-9)

வாடகைத் தொகை குறைக்க கோரிய பிரேரணை நிராகரிப்பு

தென்மராட்சி, ஜூன் 15

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான வர்த்தக நிலை யங்களுக்கு விலை மதிப்பீட் டுத் திணைக்களத்தால் மதிப் பீடு செய்யப்பட்ட வாடகைத் தொகையைக் குறைக்க மீள் மதிப்பீடு செய்யப்படல் வேண்டு மென நகரசபை உறுப்பின ரால் கொண்டு வரப்பட்ட வாய் மொழிப் பிரேரணை நகரசபைத் தலைவரால் நிராகரிக்கப்பட்டது.

வர்த்தகர்கள் வியாபார நிலை யில் ஏற்பட்ட மாற்றத்தால் பல்வேறு சிக்கல்களுக்கு உள் ளாகி உள்ளனர். இந்த வேளை யில் நகரசபையும் மாதாந்த வாடகைக் கட்டணத்தை அதி கரித்தமை வர்த்தகர்களை மேலும் சுமைகளை அதிகரிக் கும் செயற்பாடாக உள்ளதாக கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் சபையின் வர்த்தக நிலையங்களுக்கு விலை மதிப்பீட்டுத் திணைக் கள உத்தியோகத்தர்களால் மதிப்பீடு செய்யப்பட்ட வாட கைக் கட்டணம் தொடர்பாக மறு மீள் மதிப்பீடு செய்யுமாறு கோரப்படல் வேண்டும் என நகரசபை எதிரணித் தலைவர் கூ.அலெக்ஸாண்டர் நேற்று நடைபெற்ற மாதாந்தக் கூட் டத்தில் வாய்மொழி மூலமான பிரேரணையைத் தெரிவித் தார்.

இதற்குப் பதிலளித்த நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை சபைக்குச் சொந்த மான வர்த்தக நிலையங்க ளுக்கு வாடகை மதிப்பீடு செய் யும் பணி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு உரியது. அவர்களால் பரிந்துரைக்கப் படும் வாடகையை அறவிடு வதே சபையின் பணியாகும். விலை மதிப்பீட்டுத் திணைக் களத்தால் பரிந்துரைக்கப் பட்ட வாடகையே அறிவிட சபையால் முடிவு செய்யப்பட் டது.

வாடகையை மீள்பரிசீலனை செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் சபை உத்தி யோகத்தர்களால் பார்வையி டப்பட்டு தகுதியானவை விலை மதிப்பீட்டுத் திணைக்களத் துக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாகத் தலைவரால் தெரி விக்கப்பட்டது. (வ)

தையல் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

வடமராட்சி, ஜூன் 15

வடமராட்சி கிழக்கில் நடத் தப்பட்ட இலவச தையல் பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்ற 23 பெண்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட் சியும் கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடை பெற்றது.

தும்பளை கருணை உள்ளம் அமைப்பின் ஏற்பாட்டில் தாளை யடி பங்குத்தந்தை அருட்திரு யஸ்ரின் அடிகளாரின் ஒத்து ழைப்புடன் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 23 இளம் பெண்கள் 6 மாதகால தையல் பயிற்சி யைப் பெற்றுக் கொண்டனர். பயிற்சியாளர்களின் தையல் கண்காட்சியை பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை பிரதேச செய லக உதவித் திட்டப் பணிப் பாளர் திருமதி தபேந்திரா ஜெய ராஜா திறந்து வைத்து பயிற்சி யாளர்களுக்கு சான்றிதழ் களையும் வழங்கிக் கௌரவித் தார். (வ-8)

சக்கோட்டையில் மீண்டும் கருவாடு பதனிடும் நிலையம்

கடற்றொழில் கூ.சங்க சமாசத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

சக்கோட்டை கருவாடு பதனி டும் நிலையத்தை மிக விரை வில் மீளத் திறப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருவ தாக யாழ்.மாவட்டக் கடற்றொ ழில் கூட்டுறவுச் சங்க சமாசங் களின் சம்மேளனத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர்க் காலச் சூழலின் போது யாழ்.மாவட்ட மீனவர்களின் பயன்பாட்டுக்கென ஒரேயொரு கருவாடு பதனிடும் இயந்திரம் இந்த நிலையத்தில் இருந்தது. எனினும் மீனவர்களின் பயன் பாட்டுக்கு அற்றதாக அழிவ டைந்திருந்த இந்த நிலை யத்தை மீளப்புனரமைப்புச் செய்து தருமாறு மீனவ சங் கங்கள் கோரிக்கை விடுத் ததன் பயனாக நிலையத்தை மீள புனரமைப்புச் செய்வ தற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இதனடிப்படையில் மீனவர் கள் பயன்படுத்தக் கூடியதாக மிக விரைவில் அதனை புனர மைப்புச் செய்ய சமாசம் நடவ டிக்கை மேற்கொள்ளும்.

இதனூடாக கருவாடு பதனிடும் தொழிலாளர்கள் பெரியள வில் நன்மையடைவர் என எதிர் பார்க்கப்படுகிறது. காலநிலை மாற்றங்களால் கருவாடு பத னிட முடியாமல் அவதிப்படும் தொழிலாளர்களுக்கு இது நன்மையைத் தரும்- என் றார். (வ-14)

வீதிப் புனரமைப்புக்காக குவிக்கப்படும்

கற்களுக்கு அடையாளமிடுவதால் ஊழல் மோசடியைத் தவிர்க்கலாம்

வலி.தென்மேற்கு, ஜூன் 15

வீதிகளைப் புனரமைப்பதற் காக வீதிகளில் அளந்து குவிக் கப்படும் கற்களுக்கு இலக்க மும் தீந்தையால் அடையாள மும் இடப்பட வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்துள்ள பிரதேச சபை உறுப்பினர் கும ணன் அவ்வாறு செய்வதன் மூலம் ஒப்பந்தகாரர்களால் மேற்கொள்ளப்படும் ஊழல் மோசடிகளைத் தவிர்க்க முடி யும் என்றும் சுட்டிக்காட்டியுள் ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்ட பத்தில் நடைபெற்றபோது வீதிகள் புனரமைப்பது சம்பந் தமாகவும் அங்கு இடம்பெறும் மோசடிகள் பற்றியும் உறுப்பி னர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக உறுப்பினர் குமணன் கருத்துத் தெரிவிக் கையில்:

மக்களின் வரிப்பணத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வீதி அபி விருத்தி வேலைகளில் பல தரப்பட்ட மோசடிகள் இடம் பெறுகின்றன. ஒரு வீதிக்கு குவிக் கப்பட்ட கற்கள் வேறு வீதிக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

அதேநேரம் தொழில்நுட்ப உத்தி யோகத்தரும் கடமையை உரிய வேளையில்மேற்கொள்வதில்லை. இதனால் மோசடிகள் இடம்பெற வாய்ப்பு ஏற்படுகின்றது.

எனவே வீதிகளைப் புனர மைப்பதற்காக அளந்து குவிக் கப்படும் கற்குவியல்களுக்கு இலக்கங்களும் தீந்தையால் அடையாளங்களும் இடப்பட வேண்டும் என்று கூறியுள் ளார். (வ-115)

இரண்டு கால்நடை வளர்ப்போர் சங்கங்கள் அவசியம்

வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் கூட்டுறவு ஆணையாளருக்கு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 15

வலி.தென்மேற்கில் மக்களின் எண் ணிக்கை, தேவை என்பவற்றுக்கு ஏற்ப இரண்டு கால்நடை வளர்ப்போர் சங் கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இந்தத் தேவையை நிறைவேற்றி வலி. தென்மேற்கு கால்நடை வளர்ப்போ ரின் வாழ்வாதாரத் தேவையை நிறை வேற்ற வடக்கு கூட்டுறவு ஆணையாளர் முன்வரவேண்டும்.

இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சின்னத்தம்பி மகேந் திரன் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் ஊடாக வடக்கு மாகாண கூட்டுறவு ஆணை யாளர் திருமதி மதுமதி வசந்தகுமா ருக்கு கடிதம் மூலம் வலியுறுத்தியுள் ளார்.

வலி.தென்மேற்குப் பிரிவுக்கு கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இயங்குகின்றது.

அது இந்தப் பிரிவில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவினதும் 51 ஆயிரம் மக்களினதும் தேவையைப் பூர்த்தி செய்த தாக இல்லை.

> **இந்தத் தேவையை நிறை வேற்றி வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதாரத் தேவையை நிறைவேற்ற வடக்கு கூட்டுறவு ஆணையாளர் முன்வரவேண்டும்.**

தேவை எனும் தலைப்பில் அவர் எழு தியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ள தாவது:-

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட வகையில் வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங் கம் ஒன்று இயங்குகின்றது.

எனினும் அது இந்தப் பிரிவில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளையும் இரண்டாகப் பிரித்து பண்டத்தரிப்பு பரிஸ் பிரிவுக்கு 14 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடங்கியதாக ஒரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும்- மானிப்பாய் பரிஸ் பிரிவுக்கு உட்பட்டதாக இன்னோர் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கமுமாக இரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இதன் மூலமாக கால்நடை வளர்ப்போ ரின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு பிரதேச அபிவிருத்தி, வளர்ச்சி என்பன ஏற்படு வதுடன் தனிப்பட்ட மக்களின் வாழ்வாதார முன்னேற்றமும் உயர்வடையும்- என்றுள்ளது.

இதன் பிரதி வலி.தென்மேற்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரனுக்கும் வழங்கப் பட்டதாக உறுப்பினர் சி.மகேந்திரன் மேலும் தெரிவித்தார். (வ-50)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மருத்துவ மாதுக்களுக்கு கிழக்கில் நியமனங்கள்

திருகோணமலை,ஜூன் 15

அரசின் நல்லெண்ண முயற்சியின் கீழ் கிழக்கு மாகாணத்தில் பணியாற்றுவதற்கு ஒரு தொகுதி பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி பீ.கே. ஞானகுணாளன் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் எஸ். அமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

''கிராமங்கள் அனைத்தும் சுகாதாரத் துறையில் முன்னேற்றம் காண வேண்டும்'' என்ற அரசின் முயற்சியில் 18 மாத பயிற்சியை முடித்தவர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி)

கிழக்கை கவர்ந்து இழுப்பதற்கு சர்வதேச முதலீட்டாளர் மாநாடு

கொழும்பில் நடத்த ஏற்பாடு

கொழும்பு,ஜூன் 15

போரால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் கிழக்குக்கு முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுக்கவென சர்வதேச முதலீட்டாளர் மாநாடு கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

இந்த மாநாடு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நஸிர் அஹ்மட்டின் எண்ணக் கருவுக்கு ஏற்ப எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்தப்படவுள்ளது.

கிழக்கு மாகாண விவசாய

> **கிழக்கு மாகாணத்தை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றது.**

அமைச்சு, பொருளாதார அமைச்சு, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்த மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

'கிழக்கில் முதலிடுங்கள்' என்ற தொனிப் பொருளில் சர்வதேச முதலீட்டாளர் மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளோம் என்று மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நஸிர் தெரிவித்தார்.

கிழக்கு வளங்கள் நிறைந்த மாகாணம். அங்கு எல்லாத் துறைகளிலும் முதலிட முடியும். அதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம் என்று அவர் மேலும் கூறினார். (ச)



திருகோணமலை, மஹதிவுல்வெவ கனிஷ்ட பாடசாலையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது, கிழக்கு மாகாண ஆளுநர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம அடிக்கல்லை நட்டு வைத்தார். அருகில் கிழக்கு மாகாண சபை தவிசாளர் ஆரியவதி கலப்பத்தி உட்பட பலர் காணப்படுகின்றனர். (ச)

ஆலயம் சென்ற பக்தர்களிடம் இருவேறு பஸ் கட்டணங்கள்

மட்டக்களப்பு,ஜூன் 15

கிழக்கில் வரலாற்று சிறப்புமிக்க சல்லி முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நடை பெற்று வருகிறது.

அதனை முன்னிட்டு பக்தர்களின் நன்மை கருதி திருகோணமலை நகரில் இருந்து விசேட பஸ் போக்குவரத்துச் சேவையில், இலங்கை போக்குவரத்து சபையும், தனியார் பஸ்களும் ஈடுபட்டன.

இந்தச் சேவையில் திருகோணமலை நகரில் இருந்து சல்லி கோயில்வரை பஸ்கட்டணமாக இலங்கை போக்குவரத்துச் சபை ஒருவருக்கு 30 ரூபாவும், தனியார் பஸ்கள் ஒருவருக்கு 50 ரூபாவும் அறவிட்டுள்ளன.

தனியார் பஸ்கள் போக்குவரத்து விதிகளை மீறி 20 ரூபா மேலதிகமாக அறவிட்டமை பிழையென ஆலயத்துக்குச் சென்ற பக்தர்கள் தெரிவித்தனர். (ச)

காத்தான் குடியில் கைதான பத்துப் பேருக்கும் மறியல்

காத்தான்குடி,ஜூன் 15

சட்டவிரோதமாக படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முயன்ற வேளையில் காத்தான்குடியில் கைதுசெய்யப்பட்ட 10 பேரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தின் பதில் நீதிவான் எம்.ஐ.எம்.நூர்தீன்

வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் செல்வதற்கு தயாராக விருந்த 10 இளைஞர்களை காத்தான்குடி பொலிஸார் புதன்கிழமை மாலை கைது செய்தனர்.

அவர்களுடன் அவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்குதயார்படுத்திய காத்தான் குடியைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கைதானவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே அவர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

விவசாயிகள் பிரச்சினைகளை கேட்டறிந்தார் பிரதி அமைச்சர்

வாழைச்சேனை,ஜூன் 15

வாழைச்சேனை கமநல சேவைகள் நிலையப் பிரதேசத்துக்குட்பட்ட விவசாயிகளின் குறைபாடுகளை ஆராயும் கூட்டம் வியாழக்கிழமை வாழைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில், யானைகளால் விவசாய நிலங்களுக்கு ஏற்படும் அழிவுகள், நீர்ப் பிரச்சினை, அறுவடை காலங்களில் இயற்கையால் ஏற்படும் அழிவுகள் தொடர்பான பிரச்சனைகள் முன்வைக்கப் பட்டன.

அதற்கான தீர்வைப் பெற்றுத்தருமாறு விவசாய பிரதி நிதிகளால் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் கோரிக்கை முன்வைக் கப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவில் பெற்றுத் தருவதாக பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

இந்த விசேட கூட்டத்தில், மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் என்.சிவலிங்கம், பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ்.பிரபாகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)



> **பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுத் தருவதாக பிரதி அமைச்சர் முரளிதரன் உறுதியளித்தார்.**

கல்முனை மாநகர சபைக் கூட்டத்தில் கறுப்புப் பட்டியணிந்த உறுப்பினர்கள்

அம்பாறை,ஜூன் 15

கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் (வியாழன்) நடைபெற்ற போது, கைகளில் கறுப்புப் பட்டி அணிந்தவாறு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம், மாநகர முதல்வர் முஹமட் சிராஸ் மீராசாகிப் தலைமையில் மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.பரகதுல்லாவின் வீட்டுக்கு கடந்த 10 ஆம் திகதி இனம் தெரியாதோரால் நடத்தப்பட்ட கைக் குண்டுத் தாக்குதலை கண்டித்தே உறுப்பினர்கள் கைகளில் கறுப்புப் பட்டிகளை அணிந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆளும் தரப்பான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சகலரும் கறுப்பு பட்டி அணிந்தே கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதேவேளை உறுப்பினர் பரகதுல்லாவின் வீட்டின் மீதான குண்டுத் தாக்குதலைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்றை, மாநகர சபை பிரதி முதல்வர் எம்.நிஸாம் காரியப்பர் கவனவீர்ப்புப் பிரேரணையாக கூட்டத்தில் சமர்ப்பித்திருந்தார்.

மாநகர முதல்வர், பிரதி முதல்வர் உட்பட கல்முனை மாநகர சபை உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பான வர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று பிரதி முதல்வர் முன் மொழிந்த கவனவீர்ப்புப் பிரேரணை ஏகமன தாக தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (ச-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெண் கொலை வழக்கு: இளைஞருக்கு தூக்கு

நீர்கொழும்பு மேல்நீதிமன்றில் தீர்ப்பு

கொழும்பு,ஜூன் 15

பெண் ஒருவரை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நபரை குற்றவாளியாக இனங் கண்ட நீர்கொழும்பு மேல்நீதி மன்றம் அவருக்கு தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்ப ளித்தது.

குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற் கிடமின்றி நிரூபணமாகியதை அடுத்தே நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம். ஏ.கபூர் வியாழக்கிழமை இந் தத் தண்டனை விதித்துத் தீர்ப் பளித்தார்.

மினுவாங்கொடை – கோப்பயா வத்தை பகுதியைச் சேர்ந்த கருணாமுனி தினேஷ் பெர் னாண்டோ (வயது-28) என் பவருக்கே இவ்விதம் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள் ளது.

திருமணமான குறித்த நபர், மினுவாங்கொடை, கோப் பயாவத்தையைச் சேர்ந்த குருவிட்ட ஆராச்சிகே தயாவதி என்ற பெண்ணை கத்தியால் குத்திக் கொலை செய்ததாக அவர் மீது குற்றச்சாட்டு சுமத் தப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைகளின் போது இக்கொலை சந்தே கத்துக்கிடமின்றி நிரூபண மானதையடுத்து நீதிபதி பிரதி வாதிக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (ச)

இலவசக் கல்வி இல்லாவிட்டால் உயர்கல்வி அமைச்சர் விவசாயி

அம்பலப்படுத்துகிறார் அனுரகுமார எம்.பி.

கொழும்பு,ஜூன் 15

'இலங்கையில் இலவச கல்வி நடைமுறையில் இல்லாமல் இருந்திருந்தால் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்க விவசாயியாகவே இருந்திருப்பார்' என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்ன ணியின் ஏற்பாட்டில் வியாழக் கிழமை கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ் வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:

இலவசக் கல்வி இல்லையென்

> **நாட்டில் தற் போது இலவசக் கல்வி அழிக் கப்படும் ஒன் றாக மாறி உள்ளது.**

றால் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்க ஆகியோரது கருத்து களுக்கு மதிப்பில்லாமல் போயிருக்கும்.

இலவசக்கல்வி என்பது இருப் பதால்தான் அவர்கள் இன்று அமைச்சர்களாக இருக்கின் றனர்.

இவ்வாறானவர்கள் இன்று இலவசமாகப் பெற்றுகொள் ளும் கல்விசார் பட்டங்களை 150,000 ரூபாவுக்கு விற்ப வர்களாக உள்ளனர். அத னூடாக இன்று இலவசக் கல்வி அழிக்கப்படும் ஒன்றாக மாறி யுள்ளது.

இலவசக் கல்வியை நடை முறையில் இல்லாமல் செய் யும் முயற்சிக்கு எதிராக கருத்துத் தெரிவித்த 214 பல்கலைக்கழக மாணவர்கள் இன்று பல்கலைக்கழகங்க ளிருந்து இடைநீக்கம் செய் யப்பட்டுள்ளனர்.-என்றார்.(ச)

பக்தர் கூட்டத்தில் அந்தோனியார்...

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா வியாழக்கிழமை நடைபெற்ற போது திருச்சொரூப பவனி இடம் பெறுவதையும், கலந்து கொண்ட பக்தர்கள் கூட்டத்தையும் காணலாம்.

ரூ 1 லட்சம் நஷ்டஈடு

கொழும்பு,ஜூன் 15

கடும் காற்றுடன் கூடிய மோசமான காலநிலையால் உயிரிழந்த மற்றும் காணா மல்போன மீனவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பாக மீன்பிடித் துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத் துக்கு அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது.

மோசமான காலநிலையால் உயிரிழந்த மற்றும் காணா மல்போன மீனவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாவும், மோச மான காலநிலையால் முழு மையாக சேதமடைந்த படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு நஷ்ட ஈடும் வழங்கப்பட வுள்ளது.

பகுதியளவில் சேதமடைந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களைத் திருத்தியமைப்பதற்கான செலவில் 50 வீதத்தை வழங்கவும் மீன்பிடித்துறை நடவடிக்கை எடுத்துள் ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

டெங்குக்கு சிகிச்சை அளிக்க

மருத்துவ நிபுணர்களுக்கு தாய்லாந்தில் விசேட பயிற்சி

கொழும்பு,ஜூன் 15

டெங்கு நோய்க்கு சிகிச்சை அளிக்க இலங்கையைச் சேர்ந்த பத்து மருத்துவ நிபு ணர்களுக்கு தாய்லாந்தில் விசேட பயிற்சி அளிக்கப்பட வுள்ளது.

அவர்களில் ஐவர் சிறுவர் நோயியல் சிகிச்சை நிபுணர் கள் என்று சுகாதார அமைச் சின் பேச்சாளர் டபிள்யூ. எம். டி. வன்னிநாயக்கா தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

நாட்டிலுள்ள நூறு பிரதான

வைத்தியசாலைகளில் டெங்கு நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கவென உயர் கண்காணிப்பு பிரிவுகள் ஸ்தா பிக்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு நவீன உபகரண வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

இந்தப் பிரிவுகளில் கட மையாற்றும் வைத்தியர்கள், தாதியர் உள்ளிட்ட சகல ஊழியர்களுக்கும் டெங்கு நோயாளர்களுக்குச் சிகிச்சை மற்றும் பராமரிப்பு அளிப்பது தொடர்பான பயிற்சி அளிக் கப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவுகள் நிறுவப்பட்ட பின்னர் டெங்கு நோயால் உயிரிழப்போரின் எண் ணிக்கை குறைவடைந்துள் ளது.

அதனை மேலும் குறைப்பதை நோக்காகக் கொண்டே இந்தப் பிரிவுகள் மேலும் வலுப் படுத்தப்படவுள்ளன. -என் றார். (ச)

'13' ஐ ஒழிப்பதே எமது முதல் இலக்கு

சம்பிக்கவுடன் பொது பல சேனா பேச்சு

கொழும்பு,ஜூன் 15

13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதற்காக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலா ளரும் அமைச்சருமான சம் பிக்க ரணவக்கவுடன் நாம் பேச்சு நடத்தினோம் என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரி வித்தார்.

நாட்டில் தற்போது பூதாகார மாகியுள்ள 13 ஆவது திருத் தச்சட்டத்தை அடியோடு இல்லாதொழித்து சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைப்பதே எமது முதல் வேலை.

அதைவிடுத்து வேறெந்த நடவடிக்கையிலும் நாம் இப் போது இறங்கமாட்டோம்

> **13 ஆவது திருத்தச்சட்ட விவ காரமே நாட்டில் பெரும் பிரச்சினை ஆகியுள்ளது.**

என்று அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. எனினும் தற் போதைய நிலையில் 13 ஆவது திருத்தச்சட்ட விவ காரமே நாட்டில் பெரும் பிரச் சினையாகியுள்ளது. எனவே அந்தச் சர்ச்சைக்கு நாம் முற் றுப்புள்ளிவைக்கவேண்டும்.அதற் காக எமது உச்சக்கட்ட எதிர்ப்பு நடவடிக்கையை தொடர்ந் தும் முன்னெடுப்போம்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்காக 'மாகாண சபையை இல்லா தொழிப்பதற் கான தேசிய அமைப்பு' என்ற அமைப்பை உருவாக்கி அதனூ டாக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறோம்- என்றார். (ச)

ஐந்து மாத காலத்துக்குள் 32,000 பேருக்கு பயிற்சி

வெளிநாட்டு சேவைகளுக்கான செயற்பாட்டுப் பிரிவு தகவல்

கொழும்பு, ஜூன் 15

வேலைவாய்ப்புக்கள் தொடர் பாக பயிற்சிகளை வழங்கும் நிறுவனம்.கடந்த 5 மாத காலத் துக்குள் 32,000 உழைப் பாளிகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயிற்சிகளை வழங்கியுள்ளது என்று இலங்கை வெளிநாட்டுச் சேவை களுக்கான செயற் பாட்டுப் பிரிவு தெரிவித் துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப் புக்கள் தொடர்பான பயிற்சி நெறிகள் ஊடாக கடந்த ஜன வரி மாதம் முதல் மே மாதம் வரை 32, 576 பேருக்கு பயிற்சியளிக்கப்பட் டுள்ளது என்று அந்தப் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறான பயிற்சி வழங்கப் படுவதன் மூலம் வேலை வாய்ப் புகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அந் தப் பிரிவு குறிப்பிட்டுள்து. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

உள்ளார்ந்து பொதிந்திருப்பது எதுவோ அதனை எவரறிவார்...?

நாடாளுமன்ற அரச முறைமையில், அரசுக்கு அறுதிப் பெரும் பான்மை பலம் இருந்தால், அதனைக் கையில் எடுத்துக் கொண்டு, தான் நினைத்ததை-

அதுநாட்டுக்கு, மக்களுக்கு தீமை விளைவித்தாலும் சரி, அவர்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்தாலும் சரி-

திணிக்க முடியும் என்பது மீண்டும் ஒருதடவை இலங்கையில் அடுத்த வார முற்பகுதியில் அரங்கேறப் போகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் மேற்கொள்வதற்கு அரசு எடுத்த இரண்டு தீர்மானங்கள் அதனையே அழுத்தித் தொட்டுக் காட்டுகின்றன.

★ மாகாண சபைகளின் அதிகாரங்கள் தொடர்பாக சட்டவரைபுகள் நிறைவேற்றப்படும் பொழுது, அனைத்து மாகாண சபைகளினதும் அனுமதி பெறப்பட வேண்டும் என்பது இப்போதுள்ள நடைமுறைவிதி. அதனைத் தலைகீழாக்கி மொத்தம் உள்ளவற்றில் பெரும்பான்மையான சபைகளின் அனுமதி பெற்றால் போதுமானது என்றவாறு சட்டம் திருத்தம் செய்யப்படவுள்ளது.

★★ இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகாண சபைகள் தமக்குள் இணங்கி ஒன்றிணைவது குறித்து, மாகாண சபைகள் சட்டத்தில் இப்போதுள்ள வசதியை நீக்கிவிடுவது என்றும் அரசாங்கம் (அமைச்சரவை) நேற்றுமுன்தினம் முடிவு செய்துள்ளது.

மாகாண சபைகள் அவ்வாறு இணைந்தால், ஆட்சி அமைத்தால், மத்திய அரசாங்கம் பலவீனம் அடைந்துவிடும் என்ற காரணத்தால் இணைவைத் தடுப்பதற்கு-இல்லாமல் செய்வதற்கு- அமைச்சரவை இந்த முடிவுக்கு வந்திருக்கலாம் என்று கொள்ள இடமுண்டு.

அமைச்சரவையின் அந்தத் தீர்மானம் குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்கவும் அமைச்சரவை நேற்றுமுன்தினம் முடிவு செய்தது.

இனிமேல் ஏது தடை? உத்தேச தெரிவுக் குழு, அமைச்சரவையின் முடிவை ஆமோதிக்கும், ஏற்றுக்கொள்ளும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

இந்திய அரசமைப்பின் மூன்றாவது சரத்தின் பிரகாரம், இரண்டு பிராந்தியங்கள் அல்லது மூன்று பிராந்தியங்கள் இணைந்து புதிதாக மாநிலம் ஒன்றை உருவாக்கலாம்.

அதனை அடியொற்றியே இங்கு - இலங்கையில் மாகாண சபைகள் தமக்குள் இணங்கி இணைந்துகொள்ள வகை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் கருத முடியும்.

ஏற்கனவே, இந்நாட்டில் எட்டு மாகாண சபைகள் இயங்குகின்றன. ஒன்பதாவதான வடமாகாண சபைக்கு முதல்முறையாகத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில்-

மாகாண சபைகள் தமக்குள் இணங்கி இணைவதனைத் தடுப்பதற்காகவே திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடிவு எடுக்கப்பட்டதோ என்ற சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் மேலெழுந்துள்ளன.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையிலேயே, இலங்கை அரசின் முனைப்புகள் அமைந்துள்ளதாக இந்திய அரசு வட்டாரங்கள் கவலை கொண்டுள்ளதாக வெளிவந்த தகவல்களையும் இக்கட்டத்தில் புறம் ஒதுக்கிவிட முடியாது.

குறித்த ஓர் இனத்தின் அடிப்படை அரசியல் தீர்வாகவே அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் உருவானது. அதனை நீக்குவது அந்தச் சமூகத்திடம் இருந்து அரசியல் அதிகாரங்களைப் பறித்துக்கொள்வதாக அமையும் என்று நீதியமைச்சர் குறிப்பிட்டிருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கக்கூடாது என்று நாடாளுமன்றின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், ஏற்கனவே வலியுறுத்தியுள்ளன.

மறுபுறத்தில், தெரிவுக் குழுவில் ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்களே அதிக எண்ணிக்கையில் இருப்பர் என்பது நிச்சயம். அதனால் உத்தேசத் தெரிவுக் குழுவில், அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் தாம் நினைத்த திருத்தங்களைக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையுடனேயே- உள்ளார்ந்த திட்டத்துடனேயே- தெரிவுக் குழு அமைக்கப்படுகிறது என்பது எவருக்கும் வெளிச்சமாகப் புலப்படும்.

மாகாணங்களை ஒன்றிணைக்கும் ஜனாதிபதிக்கு உரிய அதிகாரம், குறிப்பிட்ட ஒரு காலத்துக்கே செல்லுபடியாகும் என்றும், அது இடைக்கால விதியாக மட்டுமே கருதப்பட வேண்டியது என்றும் அரசமைப்பு சட்ட நிபுணர்கள் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுவதும் இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது.

மொத்தத்தில், மறுவளமாக நோக்கின், மாகாண சபைகள் மீது மத்திய அரசு, அழுத்தங்களைப் பிரயோகிக்க வகை செய்யும் திருத்தங்களை நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் திணிக்கும் ஒரு முயற்சியாகவும் இதனை நோக்கலாம் என்பதும் நிராகரிக்கக் கூடியதல்ல.

எதற்கும் அரசில் அங்கம் வகிக்கும் தீவிரப்போக்குள்ள கட்சிகளுக்கு ஒவ்வாமையாக உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை, மாகாண சபைகளிடம் இருந்து பிடுங்கி எடுப்பதற்கான உள்ளார்ந்த நோக்கமும் இருக்கலாம்.... யார் அறிவார்.....?

மறுமுறை ஒருமுறை பார்ப்போமா..?

வலி.வடக்கு மக்களின் கதறல்

இடம்பெயர்ந்து 24 ஆண்டுகள்



வலி.வடக்கு மக்களின் வாழ்க்கைக்குப் பூட்டுப் போட்டவர்கள் எதற்காக ஏ-9 வீதியைத் திறந்து வைக்கின்றார்கள் ?

■ டிலீப்

விடை கொடு எங்கள் நாடே, கடல் வாசல் தெளிக்கும் வீடே, பனை மரக்காடே பறவைகள் கூடே மறுமுறை ஒரு முறை பார்ப்போமா? உதட்டில் புன்னகை புதைத்தோம், உயிரை உடம்புக்குள் புதைத்தோம், வெறும் கூடுகள் மட்டும் ஊர்வலம் போகின்றோம்'' கவிஞர் வைரமுத்துவின் வைரமான வரிகள் இவை.

தமிழினத்துடன் உறவாடிக் கொண்டிருக்கும் அகதி வாழ்க்கையை படம் பிடித்த வரிகள். கண்ணீரை வரவழைக்கும் அந்த வைர வரிகள் வெறும் பாடலுக்கானவை மட்டுமல்ல. இன்னமும் மறுமுறை ஒரு முறை சொந்த மண்ணைப் பார்க்கத் துடிக்கும் ஏக்கத்துடன் காத்திருக்கும் ஈழத் தவனுக்கு ஆறுதல் கொடுப்பவை.

வலி. வடக்கு மக்களின் வாழ்வியலில் மறக்க முடியாத நாள் இன்று. வாழ்விடங்கள் அற்றவர்களாக அவர்களை மாற்றியமைத்த கருப்பு நாள். இலங்கையில் அகதிகள் என்ற நாமத்தை தோற்றுவித்த துயர்படிந்த நாள். 24 ஆண்டுகளாகியும் இன்னமும் முடிவுக்கு வராத துயரங்களுக்கு முகாரி பாடியநாள்.

1990 ஆம் ஆண்டு இதே போன்றதொரு நாள் தான் வலி.வடக்கு மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது. இரண்டு மணி நேரத்தில் வீடு திரும்பலாம் என்ற நினைப்புடன் புறப்பட்டவர்கள் 24 வருடங்கள் கடந்தும் தங்களின் மண்ணை மிதிக்க முடியாமல் தவிக்கின்றனர்.

1990.06.15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு இராணுவ நடவடிக்கை தொடங்கியது. உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தி கலிபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதுவே வலி.வடக்கு மக்களின் இடப்பெயர்விற்கான ஆரம்பத் தாக்குதலாக அமைந்தது.

நேரம் செல்ல செல்ல தாக்குதலின் உக்கிரம் அதிகரித்தது. தாக்குதலில் மயிலிட்டியில் 4 பேரும், பலாலியில் 3 பேருமாக ஏழு பேர் கொல்லப்பட்டனர். தொடர்ந்து வலி.வடக்கின் வளங்கொழிக்கும் கரையோரப் பகுதி மக்கள் இடம்பெயரத் தொடங்கினர்.

வழமையாக இடம்பெறும் தாக்குதல்தானே என்ற எண்ணத்தில், இரண்டு மணி நேரத்தில் வீடு திரும்பலாம் என்ற நினைப்பில் உடைமைகளைப் போட்டபடி விட்டு விட்டு உயிர்களை மட்டும் கையில் பிடித்தபடி தாய் மண்ணை விட்டு நகர்ந்தனர். ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும் போதும் சொந்த மண்ணை மிதிப்பது இன்றுதான் கடைசி என்று எண்ணியிருக்கவில்லை அவர்கள்.

சொந்த மண்ணுக்குத் திரும்பலாம் என்று ஒவ்வொரு தேர்தல்களின் போதும் ஆளுங்கட்சி அமைச்சர்களது வாக்குறுதிகள் மட்டும் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தனவே தவிர அவர்களது வாழ்விடங்கள் விடுவிக்கப்படவில்லை. ஆனாலும் என்றாவது ஒரு நாள் சொந்த மண்ணுக்கு திரும்பலாம் என்ற நினைவுகளுடன் 24 வருடங்களாகக் காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு மஹிந்த அரசின் காணி சுவீகரிப்பு அறிவித்தல்தான் பரிசாகக் கிடைத்தது.

வாழிடங்களிலிருந்து வேருடன் பெயர்க்கப்பட்ட அந்த மக்கள் தமது வாழ்வாதாரங்களையும் பறிகொடுத்திருக்கின்றனர். பாரம்பரியமாக பலாலியில் விவசாயம் செய்து வந்தவர்களும், மயிலிட்டியில் கடற்றொழில் செய்து வந்தவர்களும் இன்று வாழ வழியற்றிருக்கின்றனர்.

நாளை தமது நிலங்கள் விடுவிக்கப்படும் என்ற நப்பாசையில் காத்திருந்திருந்து காத்திருந்து அவர்களின் காலங்கள் கழிந்தது மட்டும்தான் மிச்சம். இராணுவத்தினருக்கு விவசாயம் செய்யவும், யோக்கட் தொழிற்சாலை அமைக்கவும், ஹோட்டல் அமைக்கவும் தமிழ் மக்களின் காணிகளை தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் அரசு விழுங்கிக் கொள்ள எத்தனிக்கின்றது.

6 ஆயிரத்து 381 ஏக்கர் காணி, காணி உரிமையாளர்களின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாது சுவீகரிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்ப்புக்களைப் பற்றி எந்தக் கவலையும் கொள்ளாது காணி சுவீகரிப்பில் அரசு குறியாக இருக்கின்றது.

என்றாவது ஒரு நாள் தமது சொந்த மண்ணுக்கு திரும்பி விடுவோம் என்ற நம்பிக்கையில் அந்நிய மண்ணில் தங்க அனுமதிக்கப்பட்டிருந்த வலி.வடக்கு மக்களுக்கு அவர்களது நிலம் மீளக் கிடைக்கப் போவதில்லை என்ற நிலை தோன்றியதும் அவர்கள் தங்கியிருக்கும் காணிகளின் உரிமையாளர்கள் அவர்களை வெளியேற்ற முனைகின்றனர்.

வாழ்வாதாரம் இல்லை, இருக்க வாழிடம் இல்லை, சாவுதான் அவர்களுக்கு நிம்மதியைத் தரும் என்கின்ற அளவுக்கு துயரங்களைச் சுமக்கின்றனர் வலி.வடக்கு மக்கள்.

வலி.வடக்கு மக்களின் வயிற்றில் அடிக்கும் மஹிந்த, வடக்கு - தெற்கு மக்களிடையே இணைப்பு ஏற்படுத்துவதற்காக ஏ-9 வீதியை இன்று திறந்து வைக்க வருகின்றார். 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் வடக்கில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருவதாக பெரியளவிலான பிரசாரங்களை அரசு முன்னெடுத்து வருகின்றது.

வீதி அபிவிருத்திப் பணிகளை முதன்மைப்படுத்தி மேற்கொண்டு வரும் மஹிந்த அரசு ஏ-9 வீதியை திறந்து வைப்பதன் ஊடாக தெற்கும் - வடக்கும் இணைவதாகச் சொல்கின்றது. வீதி திறப்புக்களும், மேம்பாலங்களும் இங்கு யாருக்காக அமைக்கப்படுகின்றன?

சொந்த மண்ணில் வாழ்வதற்கு மக்கள் வழி கேட்கின்றனர். அதற்கான பாதைகளை இரும்பு தடுப்புச் சுவர்களால் மூடி வைத்து விட்டு, பின்னர் எதற்காக இந்த வீதிகளைத் திறக்கிறார்கள்? வலி.வடக்கு மக்களின் வாழ்க்கைக்குப் பூட்டுப் போட்டவர்கள் எதற்காக ஏ-9 வீதிகளை திறந்து வைக்கின்றார்கள் ?

ஏ-9 வீதியை திறக்க நீங்கள் வர வேண்டும் என்று தமிழர்கள் கேட்கவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் தங்களைத் தங்கள் சொந்த மண்ணில் வாழ விடுங்கள் என்பதுதான். தமிழர்களின் கதறல்கள் அரசின் இரும்புக் காதுகளில் ஏறுமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காத்திருக்கிறது எழுவைதீவு

வசந்தத்தை எதிர்பார்த்து

குடிசைக் கைத்தொழிலாக நார்க்கடகம், அலங்காரப் பொருள்கள். பெட்டிகள், பாய்கள் என்பன வற்றைப் பெருமளவு வெளியிடங்களுக்கு அனுப்பி வந்த இடம் இன்று அந்த உற்பத்திகளை முன்னர் போல் பெரிய அளவில் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

வந்தியத்தேவர்

வடக்கின் வசந்தம் என்ற பெயரில் குடாநாட்டின் சில பகுதிகளில் வீதி புனரமைப்பு, இடிந்து போன கட்டடங்கள் திருத்தம் என சில வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ஆயினும் வசந்தம் வீசாத கிராமங்கள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. அப்படியொரு சிறிய தீவுக் கிராமம் தான் எழுவைதீவு. அங்கே வீதிகள் மோசமாக உள்ளன. குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. தொழில்களில் வீழ்ச்சி தெரிகின்றது. கிராமம் வளர்ச்சிடை வதாக இல்லை என்பதுவே ஊர் மக்களின் கவலையாக உள்ளது.

எழுவைதீவில் பிரதான வீதியுடன் இரண்டொரு சிறிய வீதிகளே உள்ளன. இதில் குடிசனமற்ற பகுதியில் உள்ள முருகன் கோயில் வீதி புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் முக்கிய வீதி இன்னமும் மோசமாகவே உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். முருகவேள் வித்தியாலயத்தில் இருந்து வடக்கே சுடலை வரை செல்லும் பிரதான வீதியின் பெரும்பகுதி மக்கள் நடமாட முடியாத நிலையில் உள்ளது. பாடசாலை செல்லும் மாணவர்கள் சைக்கிளில் விழுந்தெழும்பிச் செல்கிறார்கள். சில தினங்களுக்கு முன் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மாணவர் ஒருவர் விழுந்ததில் காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகத் தாயார் தெரிவித்தார். தீவில் உள்ள குறைபாடுகளை வெளியில் சொல்வதற்கு எல்லோருமே தயங்குகிறார்கள். பதிவு செய்த பின்னரே ஊருக்குள் செல்ல வேண்டும் என்கின்ற நடைமுறை இருப்பதால் வெளியிடங்களில் இருப்பவர்கள் அங்கே செல்வதாக இல்லை.

அங்கு குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. புனித தோமையர் தேவாலயப் பகுதியில் இரண்டு கிணறுகளும் வடக்கில் ஒரு குடிதண்ணீர் கிணறும் உள்ளன. குளிப்பதற்கென்று இரண்டொரு கிணறுகள் உள்ளன. அங்கேகால்நடைகளும் தண்ணீர் தேடி அலைகின்றன. இருக்கும் ஒரேயொரு கேணி கற்கள் மாத்திரம் காணப்படுகின்றன. வற்றிப்போன கிணறுகளில் தண்ணீர் எடுக்க மக்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. தண்ணீரை ஊற விட்டுத்தான் அள்ளுகிறார்கள்.

எழுவைதீவு மக்கள் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் கடற்கரையோரத்தில் சிறிய குழிகளைத் தோண்டி தண்ணீர் எடுத்து வடிகட்டிப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் இப்போது அப்படியல்ல. குழிகளில் தண்ணீர் இருந்தால் கால்நடைகள் அவற்றைப் பயன் படுத்தி வருகின்றன. ஊர்காவற்றுறைப் பிரதேச சபை சிறிது காலம் படகுகள் மூலம் குடிதண்ணீரை எடுத்து வந்து மக்களுக்கு வழங்கியது. தற்போது அது தடைப்பட்டுள்ளது. இரணைமடுவைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான் என்கிறார் அந்த ஊர் வாசி கபிரியேல்.

எழுவைதீவின் பிரதான தொழிலான மீன்பிடித் தொழிலும் தற்போது பாதிப்படைந்துள்ளது. தடை செய்யப்பட்ட வலைகளுடன் வரும் தமிழக மீனவர்கள் மீன்களை அள்ளிச் செல்ல நாங்கள் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். இப்போது நண்டு பிடிக்கலாம், நாங்கள் தங்கூசி வலைகளைப் பயன்படுத்த முடியாமல் இருக்கிறோம். பாதுகாப்பு அதிகாரிகள் அதிலும் கண்ணை யிருக்கிறார்கள் என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு மீனவர்.

விவசாயம் என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. மாரிகாலத்தில் ஒரு சிலர் தமது வீட்டுத்தேவைக்காக சிறு தோட்டம் செய்வதுடன் விவசாயம் நின்று விடுகிறது.

பனம்தொழில்கூடுதலாகவருவாயை வழங்கிய எழுவைதீவில் இப்போது இரண்டொரு தொழிலாளர்களே அதனால் கூலிகள் அதிகரித்துள்ளன இருக்கிறார்கள். குடிசைக் கைத்தொழிலாக நார்க்கடகம், அலங்காரப் பொருள்கள். பெட்டிகள், பாய்கள் என்பனவற்றைப் பெருமளவு வெளியிடங்களுக்கு அனுப்பி வந்த இடம் இன்று அந்த உற்பத்திகளை முன்னர் போல் பெரிய அளவில் செய்ய முடியாத நிலையில் உள்ளது. எல்லாமே வீழ்ச்சியடைந்து விட்டதாகக் கவலையுடன் தெரிவிக்கும் மக்கள் முப்பது வருடங்களுக்கு மேலாக கவனிக்கப்படாதிருக்கும் பிரதான வீதியை முழுமையாகத் திருத்தியமைத்து எமது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லக் கூடியதான வசதியை என்றாலும் ஏற்படுத்த மாட்டார்களா என்று கேட்கிறார்கள். தீவுப் பகுதிப் பிரதேச சபைகளை வென்றுவிட்டதால் அந்தப் பிரதேசம் தமது கோட்டை எனக் கனவு காணும் கட்சியினர் அந்த மக்கள் மகிந்த அரசின் நிர்வாகத்தில் படையினரின் இறுக்கமான பிடிக்குள் சிக்கிக் கிடக்கும் அவலத்தையும் நினைவில் கொள்வது அவசியம். ★

மூத்த ஊடகவியலாளர் கோபுவுக்குப் பாராட்டு

பாலமுரளி

இலங்கையின் மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர்களில் ஒருவரான எஸ்.எம். கோபாலரத்தினத்துக்கு இப்பொழுது 83 வயது நடக்கின்றது. இன்னும் எழுதிக்கொண்டிருக்கும் இவரை தமிழ் உலகம் நினைவில் கொள்ள்ளாமலில்லை. தமிழரின் கலை, இலக்கியம் , அரசியல் போராட்ட வரலாறுகள் , சுதந்திரப் போராட்ட வரலாறுகள் போன்றவற்றை எல்லாம் பத்திரிகைகள் மூலம் தமிழ் வாசகர்களுக்குத் தந்தவர் இவர்.

அவரது 60 வருட கால பத்திரிகைத் துறைப் பணியைப் பாராட்டி நாளைய தினம் 16.06.2013 வண்ணை கலைவாணர் நாடக மன்றம் விழா எடுக்கின்றது. இந்த நிகழ்வு ஞாயிறு மாலை 4 மணிக்கு இராமநாதன் வீதியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறும்.

83 ஆவது வயதில் காலடி எடுத்து வைத்துள்ள இவர், எஸ்.எம்.ஜி என்றும், கோபு என்றும் புனை பெயர்களால் அறியப்படுபவர். இன்று முதுமை நிலையைத் தழுவிய போதிலும் எழுதிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற மன உறுதியுடன் அவர் செயற்படுவது பாராட்டப்படவேண்டியதே.

இளம் வயதிலேயே 1953 இல் வீரகேசரியில் ஒப்புநோக்குநராக சேவையில் சேர்ந்த கோபு பின்னர் கே.வி.எஸ். வாஸ், கே.பி.ஹரன் போன்றவர்களின் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்ந்து ஆசிரிய பீடத்திலும் சேவையாற்றினார்.

தமிழ் எழுத்தாளர்கள் பலரின் நண்பராக இருந்த கோபு, 1960 காலப் பகுதியில் கே.பி.ஹரன் ஆகியோருடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் வெளியான ''ஈழநாடு'' பத்திரிகையில் பணியாற்றினார். காலப்போக்கில் அந்தப் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

பத்திரிகையாளன் போராளி போன்றவன் என்பதற்கு எடுத்துக்காட்டாக தனது எழுத்துப் பணியைத் தொடர்ந்த கோபு உண்மைகளை எழுதி பல சோதனைகளையும் சந்தித்தவர் என்பதை பத்திரிகை உலகு நன்கறியும்.

''ஈழநாடு'' பத்திரிகைக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த காலைக்கதிர் , ''செய்திக்கதிர்'' உட்பட ''ஈழமுரசு'' ''ஈழ நாதம்'' போன்ற வெளியீடுகளிலும் தனது பணியை மேற் கொண்ட கோபு மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த முதல் தினசரியான தினக் கதிர் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார். இவர் ஆசிரியராக இருந்த பத்திரிகைகளில் இவர் எழுதிய ஆசிரிய தலையங்கங்கள் பின்னர் நூல் வடிவிலும் வெளிவந்தன.

1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வடபகுதியில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டு இரண்டுமாத காலம் சிறையிலிருந்த கோபு சிறையிலிருந்து வெளியே வந்ததும் 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற நூலை எழுதினார். ''ஜூனியர் விகடன்'' என்ற வார வெளியீடு கோபுவின் நூலைத் தொடர்ந்து பிரசுரித்தது.

இலங்கையில் பல பகுதிகளிலும் நடைபெற்ற ஊடகவியலாளர் அமைப்புக்கள் நடத்திய பாராட்டு விழாக்கள், பட்டமளிப்பு விழாக்களிலும் பரிசுகள் பட்டங்கள் பெற்ற கோபு ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றபோது அங்குள்ள தமிழ் மக்கள் அமைப்புக்கள் மூலமும் கௌரவிக்கப்பட்டு பட்டமும் பெற்றுள்ளார்.

கோபு எழுதிய நூல்களில் ''ஈழம் முடிவில்லாத பயணத்தில் முடிவில்லா வரலாறு'' ''அந்த ஒரு உயிர்தானா உயிர்'' ''பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு'' ''ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை'' என்பவை அடங்கும்.

பத்திரிகையாளன் போராளி போன்றவன் என்பதற்கு எடுத்துக் காட்டாக தனது எழுத்துப் பணியைத் தொடர்ந்த கோபு உண்மைகளை எழுதி பல சோதனைகளையும் சந்தித்தவர் என்பதை பத்திரிகை உலகு நன்கறியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

பெரிய வெங்காய உற்பத்தியில் விரைவில் தன்னிறைவு

2015 இல் இறக்குமதி நிறுத்தப்பட்டு விடும்

கொழும்பு, ஜூன் 15

2015 ஆம் ஆண்டிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்வது நிறுத்தப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடையச் செய்யும் செயலணியை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடல் அண்மை

யில் இடம்பெற்றது. இதன் போதே பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்பொழுது முழுநாட்டுக்கும் தேவையான பெரிய வெங்காயம் மாதம் ஒன்றுக்கு இரண்டரை லட்சம் மெற்றிக்தொன் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதற்காக 6 மில்லியன் ரூபா வரையில் செலவு செய்யப்படுகின்றது.

இந்த நிதியை உள்நாட்டில் செலவு செய்து உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் தன்னிறைவு அடைந்து கொள்ளலாம். இதன்மூலம் 2015 ஆம் ஆண்டில் பெரிய வெங்காய இறக்குமதியை நிறுத்திக்கொள்ள முடியும் - என்றார். (ஐ-5)

வேலணை தென்கிழக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கான சுயதொழில் முறைக் கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் மகளிர் அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெற்றது. நிகழ்வில் வேலணை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.செல்வச்சந்திரன் பயனாளி ஒருவருக்கு காசோலை வழங்குகிறார். அருகில் கிராம அலுவலர் எஸ்.யோகேஸ்வரன். (ஒ-7)

ஒன்றுகூடல்

வரணி மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்று கூடல் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (ந-9)

செம்மணி மயானத்தில் நாளை சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

நல்லூர் செம்மணி இந்து மயானத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமையன்று காலை 7 மணி தொடக்கம் சிரமதானப் பணிகள் இடம்பெறவுள்ளன.

இந்த மயானத்தைப் பயன்படுத்தும் எல்லைக்குள் இருப்பவர்கள் இந்த சிரமதானப் பணியில் பங்கெடுக்குமாறு செம்மணி இந்து மயான அபிவிருத்திச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ-5)



உரும்பிராய் ஊரெழு கலை, கலாசார மன்றம் நடத்திய இவ்வருட கலை, கலாசார விழாவில் சிவத்தொண்டன் முகமாலையூர் நா.முருகையாவுக்கு வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். (ஒ-9)

லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு இன்று

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 34 ஆவது நிர்வாகிகள் பதவி யேற்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் லயன் ச.மனோகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக 306பி1, மாவட்ட உதவி ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ கலந்து கொள்வார்.

நடப்பு வருட நிர்வாகிகளாகத் தலைவர்- லயன் பி.தளிர்ராஜ், செயலாளர்- லயன் எஸ்.நியூட்டன், பொருளாளர்- லயன் இ.கோகுலன் உட்பட பலர் பதவி யேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-9)

★ ★ ★

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக உறுப்பினர்கள் பதவி ஏற்கும் நிகழ்வு இன்று 15 ஆம் திகதி சனிக் கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் கழகத் தலைவர் லயன் எஸ்.பத்மநாதன் தலைமையில்நடைபெறவுள்ளது.(ந-8)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 15

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் 11 ஆவது வருட நிர்வாகக் குழு பதவியேற்பும், சேவைத்திட்டங்களின் தொடக்க விழாவும் இன்று சனிக்கிழமை யாழ். பூநாறி மடத்தடி செல்வ மகால்மண்டபத்தில்நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட ஆளுநர் ரஞ்சித் பொன்னாண்டோ கலந்து கொள்வார்.

இலங்கை வங்கியின் இரண்டாம் கிளையின் முகாமையாளர் ஈ.பிரேமராஜன் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளார். (ஒ-14)

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா தமிழ்ச் சங்கம் நடத்திய போட்டி முடிவுகள்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவை யொட்டி யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய பேச்சு, கட்டுரை, கவிதைப்போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. புதன்கிழமை புனித சம்பத்திரியார் கல்லூரியில் இடம்பெற்ற நூற்றாண்டு விழாச் சபைக் கூட்டத்தில் போட்டி முடிவுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப் பட்டன.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதக்கங்கள், பரிசில்கள், சான்றுப் பத்திரங்கள் என்பன எதிர் வரும் ஜூலை மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப் பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ள தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா ஆய்வரங்கத் தொடக்க நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் மாவட்ட ரீதியாக வெற்றி பெற்ற மாணவர் விவரம் வருமாறு:-

யாழ். மாவட்டம்

கீழ்ப் பிரிவு பேச்சு

1ஆம்இடம்-வி.அஜின்டெஸ்மோ (யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி), 2ஆம் இடம்- இ.ராருஜன் (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி), 3ஆம் இடம்- கு.வினோஜன் (நெடுந்தீவு மாவலித்துறை றோ.க.த.வித்தியாலயம்), 3 ஆம் இடம்- ப.வைஸ்ணவி (வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்)

மத்திய பிரிவு

1ஆம் இடம்- க.ஜெறி (யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி), 2ஆம் இடம்- பா.சஞ்சிகாஜினி (யூனியன் கல்லூரி தெல்லிப் பழை), 3ஆம் இடம்- ஆதர்சினி- (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

மேற்பிரிவு

1ஆம் இடம்- ரா.தனரோஜனி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), 2ஆம் இடம்- வே.ஜந்துஜா (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சு வேலி), 3ஆம் இடம்- ர.கோபிகா- (யாழ். கனகரட்னம் மத்திய ம.வி.)

அதிமேற்பிரிவு

1ஆம் இடம்- ஸ்ரீ.சிவகந்தஸ்ரீ (யாழ். இந்துக் கல்லூரி), 2ஆம் இடம்- சு.றொபின்ஸ் கமில்ரன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), 3ஆம் இடம்- சா.நிரோனா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

கட்டுரை

மத்திய பிரிவு

1ஆம் இடம்- செ.கு.தேனுஜா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), 2ஆம் இடம்- க.ஸ்ரிகா- (யாழ். கனகரட்னம் மத்திய ம.வி.), 3ஆம் இடம்- அ.சுஹீதா- (புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி)

மேற்பிரிவு

1ஆம் இடம்- க.சுபர்ணா (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), 2ஆம் இடம்- ம.எஸ்ரார் கிஸ்டா-(புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி), 3ஆம் இடம்- சா.தனுசா- (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

அதிமேற் பிரிவு

1ஆம் இடம்- ஸ்ரீ.பதுசனன் (யாழ். இந்துக் கல்லூரி), 2ஆம் இடம்- பூலக்சியா- (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி), 3ஆம் இடம்- அ.புஸ்ப அன்ரனிற்றா-(நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி)

கவிதை

மேற்பிரிவு

1ஆம் இடம்- சி.சதீஸ்கா (யூனியன் கல்லூரி தெல்லிப்பழை), 2ஆம் இடம்- க.தர்சிகா-(யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்), 3ஆம் இடம்- ந.அபிராமி (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

அதிமேற் பிரிவு

1ஆம் இடம்- ஜீ.சஜீவன் (யாழ். இந்துக் கல்லூரி), 2ஆம் இடம்- கோ.சங்கீதா- (யூனியன் கல்லூரி தெல்லிப்பழை), 3ஆம் இடம்- அ.வேனிஸ் ரலினி- (நெடுந்தீவு றோ. க.மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்- ட சுகன்ஜா- (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, 3ஆம் இடம்-சூசீந்தனா- (புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி).(ந)

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்)

சாவகச்சேரி நகர சபைக்கு புதிய செயலாளர்

சாவகச்சேரி, ஜூன் 15

சாவகச்சேரி நகர சபைக்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டு நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

மாகாண ஆளுநரின் பணிப்பிற்கமைய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் காரைநகர் பிரதேச சபையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய கா.சண்முகதாஸ் சாவகச்சேரி நகர சபையின் செயலாளராக நேற்று முதல் நடை முறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

நகர சபையின் செயலாளராகக் கடமையாற்றிய சு.புத்திசிகாமணி கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி இளைப்பாறியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு கா.சண்முகதாஸ் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா

நெடுந்தீவில் பெரும் ஏற்பாடு

நெடுந்தீவு, ஜூன் 15

தவத்திரு. தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு நினைவை முன்னிட்டு எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நெடுந்தீவில் மிகப்பெரிய அளவில் நூற்றாண்டு விழா நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வின் காலை நிகழ்வுக்கு தீவக வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோன் குயின்ரஸ் தலைமை வகிப்பார்.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் முற்பகல் 10.30மணிக்குவிழா இடம்பெறும். இந்த நிகழ்வில் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு நினைவுதினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

மாலை நிகழ்வு தனிநாயகம் அடிகளார் திறந்த வெளியரங்கில் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும். அருட்கலாநிதி ஜெயசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பட்டிமன்றம், விசேட உரைகள், நெடுந்தீவு சென் நிக்கிலஸ் கலை மன்றத்தின் முத்தா மாணிக்கமா நாட்டுக்கூத்து உட்பட கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

நிகழ்வில் பிரம்மஸ்ரீ புவனேந்திரசர்மா, அருட்திரு அமல்ராஜ், முன்னாள் தென்னிந்திய திருச்சபை பேராயர் எஸ்.ஜெபநேசன், கலாநிதி ஆறுதிருமுருகன், பேராசிரியர் வேல்நம்பி, பேராசிரியர் லலீசன், புலவர் அ.வெ.அரியநாயகம், நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி, பிரதேச சபைத் தவிசாளர் தானியல்றெக்ஷியன் ஆகியோர் உரையாற்றுவார்கள். (ந-7)

செயலமர்வு

பௌதிகவளத் தரவுகளை பூரணப்படுத்தி தொகுப்பு செய்வதற்கான செயலமர்வு செவ்வாய், புதன் ஆகிய இரு தினங்களும் வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. இந்தச் செயலமர்வுக்கு யாழ்ப்பாண, வலிகாம, வடமராட்சி, தென்மராட்சி,தீவக, கிளிநொச்சி வலயங்களைச் சேர்ந்த வலய திட்டமிடல் பிரிவுப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அலுவலர்கள், அவர்களது முகாமைத்துவ உதவியாளர்கள் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-ரி)

நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி, ஜூன் 15

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் நோயாளர் நலன் புரி சங்க நிர்வாகிகள் தெரிவு அண்மையில் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அதன்போது நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.தலைவர்-யோ.ஜெயக்குமார், உப தலைவர்- த.சுரேஸ்குமார், செயலாளர்- ஜெ.இளங்கோ, உதவிச்செயலாளர்- செ.ஜெயக்குமார், பொருளாளர்- செ.செந்தூரன், 12 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மது அருந்திவிட்டு உறங்குபவர்களால் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள்

வவுனியா, ஜூன் 15

வவுனியா பஸ் நிலையத்தின் அருகில் அமைந்துள்ள மேல் மாடித் தொடரின் வாயிலில் சிலர் மது அருந்திவிட்டு உறங்குவதால் இங்கு வருகை தரு கின்ற மக்கள் அசௌகரி யங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வர்த்தகக் கட்டடத் தொகுதியில் மதுபாவனை உட்பட பல்வேறு கலாசாரத் துக்குப் புறம்பான செயற் பாடுகள் தினமும் இடம் பெற்று வருவதைக் காணமுடிகின்றது. வவுனியா நகர சபையினர் புகைத்தல், மதுபானம் அருந் தல், குப்பைகளைப் போடு தல், சிறுநீர்கழித்தல் ஆகிய வற்றுக்குத் தடை விதித்து அறிவுறுத்தல் வாசகங்களை காட்சிப்படுத்தியுள்ள போதி லும் இவை தொடர்ந்து மீறப் படுவதால் பொது மக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக பெண்கள் இங்கு செல்வதற்கு அச்சம் தெரிவிக் கின்றனர். இவ் வர்த்தகத் தொகுதியில் இயங்கும் அச்ச கம், பயணச்சீட்டு அலுவல கம், மொழி பெயர்ப்பாளர் சேவை நிலையம், விளம்பர அலுவலகம், புகைப்பட நிலை யம்,தொலைக்காட்சி நிலையம் என்பவற்றுக்கு தினமும் சென்று வரும் மக்கள் தொடர்ந்தும் தாம் அசௌகரியங்களை எதிர் கொள்வதாகத் தெரி வித்துள்ளனர். (க-402)

மூன்று முறிப்பு கிராமத்துக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துக

கிராம அமைப்புக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 15

மாந்தை கிழக்கு மூன்று முறிப்பு கிராம மக்கள் தமக்குரிய அடிப்படை வசதிகளை ஏற் படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செய லர் பிரிவின் பிரதேச அபி விருத்தி தொடர்பான ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 11 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தின் போதே மூன்று முறிப்பு கிராம அபி விருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவை தமது கிராமம் கவனிக்கப்படுவதில்லை என்றும் இதனால் குறித்த கிராமம் மிகவும் பின்தங்கிய பகுதியாக காணப்படுவதாக வும் சுட்டிக்காட்டின.

மழை காலங்களில் தமது கிராமத்தின் வீதிகள் வெள்ளத் தில் மூழ்கி காணப்படுவதாக வும் இதனால் வாரக் கணக் காக போக்குவரத்துக்கள் தடைப்படுகின்றன எனவும் இதைவிட போக்குவரத்து வசதிகள் எவையும் இந்தக் கிராமத்துக்கு இல்லை என் றும் சுட்டிக்காட்டப்பட்டது.

10 அல்லது 15 கிலோ மீற்றர் தூரம் சென்றே அவசர தேவை களை நிவர்த்தி செய்ய வேண் டும் என்றும் எனவே தமது கிராமத்துக்கான அடிப்படைத் தேவைகளையாவது ஏற்படுத் தித் தருமாறும் மேற்படி அமைப் புக்கள் கோரியுள்ளன. (ஐ-6)

முல்லைத்தீவு புதுமாத்தளன் கிராமத்தில் உதவியற்ற ஐந்து குடும்பங்களுக்கு 'புனர்வாழ்வு, புது வாழ்வு' அமைப்பினால் கோழி, ஆடு, தையல் இயந்திரம், வலை, ஆகியவை வழங்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மேற்படி அமைப்பின் தலைவர் எஸ்.சர்வேஸ்வரன் ஆகியோரினால் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஒ-435)

மன்னார் நாற்சந்தியில் குழி; விரைவில் சீர் செய்யப்படுமா?

மன்னார், ஜூன் 15

மன்னார் செஸ்தியார் பேரா லயத்துக்குச் செல்லும் பிர தான வீதியின் நாற்சந்தியில் கடந்த ஒரு வாரத்துக்கு முன் ஏற்பட்ட பெரிய குழி இது வரை சீர் செய்யப்படாததன் காரணத்தினால் குறித்த வீதி யில் தற்போது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதி நாற்சந்தி வீதி யாக காணப்படுகின்றது. பல நூற்றுக்கணக்கான கனரக வாகனங்கள் நாளாந்தம் குறித்த வீதியூடாக சென்று வருகின்றன.

இந்த வீதி மன்னார் வைத் தியசாலைக்குச் செல்லும் பிரதான வீதியாகவும் காணப் படுகின்றமையினால் தற் போது நோயளர்களை ஏற் றிக்கொண்டு செல்லும் அம் புலன்ஸ் உரிய வேகத்தில் செல்ல முடியாது இருப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் வீதியில் ஏற்பட்டுள்ள பெரிய குழியை மூடி வீதியைச் செப் பனிட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்க ளும்,பாதசாரிகளும் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-12)

நந்திக் கடலில் சட்டவிரோதமாக

மீன்பிடித்த 11 பேர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 15

நந்திக்கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பாவித்து மீன்பிடி நடவடிக் கைகளில் ஈடுபட்ட 11 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர் களின் வலைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடல் நீரேரிப் பகுதிகளில் தொடர்ச்சியாகச் சட்டவிரோத தொழில் முறைகள் மற்றும் வலைகளைப் பாவித்து மீன் பிடி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதனைத் தடுப்பதற்காக முல்லைத்தீவு மாவட்ட கடற் றொழில் நீரியல் வளத் திணைக்களம் திடீர் பரிசோ தனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நந்திக்கடல் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது டிஸ்கோ வலை யைப் பாவித்து மீன்பிடி நட வடிக்கையில் ஈடுபட்ட 11 பேர் கைது செய்யப்பட்டனர். அத் துடன் அவர்களின் வலை களும் பறிமுதல் செய்யப் பட்டன.

கைது செய்யப்பட்ட 11 பேரும் நீதிமன்றில் முற் படுத்தப்பட்டபோது அவர்கள் குற்றத்தைப் ஒப்புக் கொண் டனர்.

இதனையடுத்து ஒவ்வொரு வருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன், வலை களும் பறிமுதல் செய்யப் பட்டன. பிடிக்கப்பட்ட மீன்கள் அழிக்கப்பட்டன.

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் இந்தத் திடீர் சோதனை நடவடிக்கை கள் தொடர்ந்து முன்னெடுக் கப்படும் என்று உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்தார். (த-5)

மின் கம்பங்கள் நடும் பணி அக்கராயனில் ஆரம்பம்

அக்கராயன்,ஜூன் 15

கிளிநொச்சி அக்கராயன், ஸ்கந்தபுரம் கிராமங்களுக்கு மின் விநியோகம் செய்யும் பொருட்டு மின்கம்பங்கள் நடும் பணிகள் ஆரம்பமாகி யுள்ளன.

ஏற்கனவே அக்கராயன் மருத் துவமனை, தபாலகம், ப.நோ. கூ. சங்கம் என்பனவற்றுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள் ளது. அடுத்த கட்டமாக வர்த்தக நிலையங்கள், பாடசாலை கள், குடிமனைகள் என்பவற் றுக்கு மின்சாரத்தை வழங்கும் பொருட்டு தற்போது மின்கம் பங்கள் நடும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. (ஐ-18)

பொலிஸாரின் நடவடிக்கையைக் கண்டித்து

வவுனியா வடக்கு பிரதேச செயலக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

நெடுங்கேணி, ஜூன் 15

பொலிஸாரின் செயலைக் கண்டித்து வவுனியா வடக்குப் பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட பிரதேச செய லகத்தைச் சேர்ந்த உத்தியோ கத்தர்கள் தெரிவித்ததாவது:

நேற்றுமுன்தினம் காலை நெடுங்கேணிப் பிரதேச விளை யாட்டு விழா இடம்பெறவிருந்த போது செயலக உத்தியோ கத்தர் ஒருவர் மைதானத்தில் இருந்து தனது விடுதிக்கு தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென் றுள்ளார்.

பொலிஸார் மறித்த போது அவர் அதனை அவதானிக் காத நிலையில் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது தனது விடுதிக்குச் சென்றபோது அவரைப் பின் தொடர்ந்து சென்ற பொலிஸார் விடுதிக் குள் வைத்து அவரைத் தாக் கியதுடன் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றுள்ளனர்.

இதன் பின்னர் பொலிஸாரி டம் கலந்துரையாடுவதற்கெனச் சென்ற பிரதேச செயலாளரை பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி நீண்ட நேரம் சந் திக்காது காத்திருக்க வைத் ததுடன் உதவிப் பிரதேச செயலாளரை போக்குவரத் துப் பொலிஸார் தரக்குறை வாக நடத்தியுள்ளனர். எனவே நாம் இதனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா வடக் குப் பிரதேச செயலாளருக்கும் மாங்குளம் பொலிஸ் நிலை யத்தின் தலைமையக பொலிஸ் அதிகாரிக்கும் இடையில் இந்தச் சம்பவம் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாகவும் தெரிய வந்துள்ளது. (க-435-422)

உயர்தர மாணவர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி மாவட்டப் பாட சாலைகளில் இருந்து 2012 ம் ஆண்டில் ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சைக்குத் தோற்றி 3 பாடங்களிலும் 'ஏ' தரச் சித் தியைப்பெற்ற 17 மாணவர் கள் கடந்த 10 ம் திகதி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கணிதத்துறையில் 3'ஏ' பெற்ற மூன்று மாணவர்களும், வணி கத்துறையில் 3'ஏ' பெற்ற 14 மாணவர்களுமே, இவ் வாறு கௌரவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட சதுரங் கச் சங்கத்தின் ஏற்பாட்டில் சுவிஸ் தமிழர் சதுரங்க ஒன் றிய அனுசரணையுடன் கிளி நொச்சி வலயக்கல்வி அலு வலக வணிகக்கல்வித் துறை யினரால் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மகா வித்தி யாலய பிரதான மண்டபத்தில் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கிளிநொச்சி வலய வர்த்தக பாட உதவிக் கல்விப் பணிப் பாளர் எஸ்.சிறிக்குமரன், சுவிஸ் தமிழர் சதுரங்க ஒன் றியத் தலைவர் கந்தையா சிங்கம் மற்றும் கலாநிதி அகளங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

3 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தியைப்பெற்ற 17 மாண வர்களுக்கும் தலா 10 ஆயி ரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (ஒ-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

இன்றைய நாள்

உங்களுக்கு எப்படி?

மேஷம்: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

இடபம்: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் லாபத்தை அதிகரிப்பீர்கள்.

மிதுனம்: எண்ணம்போல் செயற்பட வேண்டுமென எண்ணுவீர்கள். சொத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

கடகம்: வீண் பதற்றம் ஏற்படும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

சிங்கம்: சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உங்களைப் பற்றி தவறாக சிலர் பேசினாலும் அதற்காக வருத் தப்படாதீர்கள். யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிட வேண்டாம்.

கன்னி: எளிதாக முடிய வேண்டிய விடயங்களைக் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் மறைமுகப் பிரச்சினைகள் வரக்கூடும்.

நாளை

ஆனி-02 ஞாயிற்றுக்கிழமை 16.06.2013
திதி: ஸப்தமி கா.06.46 வரை
நட்சத்திரம்: பூரம் மு.ப. 09.58 வரை
சுபநேரம்: 08.53 - 10.23 வரை
இராகுகாலம்: 04.23 - 05.53 வரை

துலாம்: எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

விருச்சிகம்: சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

தனுசு: வேலைச்சுமை இருக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

மகரம்: நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப்பாக முடியும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

கும்பம்: தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பழைய நினைவுகள் நெஞ்சில் நிழலாடும். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

மீனம்: எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். அரச அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அனபுத் தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

சுடோக்கு

எண் விளையாட்டு

7				8		3		
5						1	8	
	8		1		7	4	2	6
			8	2	5	6		
2				9				5
		5	6	4	3			
3	7	9	5		4		1	
	2	4						3
		8		7				4

நேற்றைய சுடோக்கின் விடை

8	3	6	9	5	7	2	4	1
2	5	7	4	1	8	3	6	9
4	9	1	6	2	3	8	5	7
6	2	5	7	3	9	1	8	4
1	4	9	8	6	2	5	7	3
3	7	8	1	4	5	6	9	2
9	6	4	2	8	1	7	3	5
5	8	2	3	7	4	9	1	6
7	1	3	5	9	6	4	2	8

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

மொறட்டுவ பல்கலைக்கழக பட்டப்படிப்பு(BIT)

9th Intake

உலகத்தரம் வாய்ந்த மொறட்டுவ பல்கலைக்கழக பட்டப்படிப்பு

மொறட்டுவ பல்கலைக்கழக பட்டதாரியாகும் அரியவாய்ப்பு...!

ESOFT
Shaping Lives, Creating Futures.

இடமிருந்து மட்டுமே...! NOW IN JAFFNA

விசேட அம்சங்கள்

- நுழைவுத் தேர்வு இல்லை
- 6 செமிஸ்ரர்களைக் கொண்ட பட்டப்படிப்பு
- ஒவ்வொரு வருட இறுதியில் பல்கலைக்கழக சான்றிதழ்
- கற்கைநெறி முடிவில் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து உடனடி வேலை வாய்ப்பு
- பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர்கள்
- உயர்தரமிக்க கல்விச் சூழலில் அமைந்துள்ள ஆய்வக, நூலக வசதிகள்

தகுதியானவர்கள்

உயர்தரத்தில் எந்த துறையிலாவது ஒரே தடவையில் சித்திபெற்றோர் மற்றும் சாதாரண தரத்தில் கணித பாடத்தில் "C" தரச் சித்தி பெற்றோர்.

அல்லது

HNDIT - SLIATE

பூர்த்தி செய்த மாணவர்களும் நேரடியாக இறுதியாண்டிற்குள் நுழைய முடியும்.
(16 பாடநெறிகள் விலக்களிக்கப்படும்)

விண்ணப்ப இறுதி நாள்
1st சுற்று 30. 06. 2013

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள ESOFT கிளையை நாடுங்கள்...!

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினூடாக ஒருங்கிணைந்து (BIT)ற்கான வெளிவாரிப் பட்டத்தினை வழங்குவதில் ESOFT பெருமையடைகிறது.
யாழ்நகரில் ESOFTமட்டுமே இப்பாடத்தினை வழங்குகிறது....!

ESOFT
Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS -JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel: 021 750 1120
(D/9814)
CALL : 077 309 9 308

மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட, இங்கிலாந்தில் (Msc.in I.T) படித்து, இங்கிலாந்திலேயே நிரந்தர உயர் வேலையிலிருக்கும் இந்துமத, குணமான, செவ்வாய் தோஷமற்ற, ஜெனிநட்சத்திரமுடைய 32 வயதுடைய, 5அடி, 8 அங்குல உயர மணமகனுக்கு அவரது பெற்றோர் அழகிய, குணமான, நன்கு படித்த, இந்துமத பொருத்தமான மணமகளை தேடுகின்றார்கள். வெளிநாடுகளில் வாழ்வோரும் விண்ணப்பிக்கலாம். விரும்புவோர் கீழ் கண்டமின் அஞ்சல் முகவரிக்கு தொடர்புகொள்ளவும். (38233)(6.3.45)

kanthi70@optusnet.com.au
mobile: 0061 4023 87809

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், அவிட்ட நட்சத்திரம், லக்கினத்தில் செவ்வாயும், 122 கிரக பாவமும் உடைய அரச சேவையில் நிகழ்ச்சித் திட்ட (Programme Assistant) உதவியாளராகப் பணி புரியும் 33 வயது பட்டதாரி (M.Com) மணமகனுக்கு, அரச, வங்கி அல்லது ஆசிரியையாகப் பணி புரியும் 30 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. வலிகாமத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு: 021 321 9192 (38285) (3.6.11)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் நாராயணபிள்ளை அருணகிரிநாதன்

தோற்றம் 09.01.1945

மறைவு 15.05.2013

கடந்த 15.05.2013 அன்று சிவபதமடைந்த எங்கள் குடுத்பத்தலைவர் நாராயணபிள்ளை அருணகிரிநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (14.06.2013) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.06.2013) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

குடும்பத்தினர்.

(38022 (45.6.3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வீதி மூடப்படுகிறது

யாழ்.பருத்தித்துறை வீதி அகலிப்பு பணிகளுக்காக கல்வியங்காடு சந்திக்கு முன் பகுதி 4 கிலோ மீற்றரில் இருந்து 4.3 கிலோ மீற்றர் வரை நாளை ஞாயிற்றுக்கிழமையில் இருந்து எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளது. பார ஊர்திகளும், வாகனங்களும் கல்வியங்காட்டு சந்தை வீதியையும், ஆடியபாதம் வீதியையும் மாற்று வழியாக பாவிக்கு மாறு யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறி யியலாளர் வி.சுதாகர் அறிவித்துள்ளார். (எ)

கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் உப அதிபர்
திருமதி இராசகுமாரி கனககூரியன்
அவர்களின் அன்பு மாமனார்
தியாகேசு கனகசபாபதி
அவர்களின் மறைவையொட்டி பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மு/ முத்துஐயன் கட்டு இடது கரை
அ.த.க பாடசாலை. (38296)(3.6.11)

ஆசிரியர்
நலன்புரி கழகம்

கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் **செ.புஸ்பாகரன்**
அவர்களின் தந்தை
சின்னத்தம்பி செல்லத்துரை
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். (சி/[illegible])

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர்
நலன்புரி சங்கம். திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

அமரர்
சிவநேசன் மதுசாளினி

அரிதாய் பூத்து நின்ற
அரும் பூ சாய்ந்து
ஆண்டுகள் மூன்று
முன்னாகக்குற்றி முழுதாய்
விழிநீர் நனைக்கும்
நினைவுகள் இன்றும்
சிலையாய் இருக்கும்
உன் நினைவுகளோடு

நாடித்துடிப்பிளந்த
நலிவுள்ளத்தோடு
இனி நாமும் நாடியுன்பாதம்
என்றுமே எமை நீங்காது
எம்முடன் இசைபடிந்த இதய வீணை

புதையல் ஆகி வித்தாகி விழுதாகி
முழுதாய் எம்முற்றத்தில் நிற்பாள் என
எம் மூச்சு நினைக்கும் நாள்....
நாம் மறக்கவில்லை நீ இறக்கவில்லை
நீ எம் மடியில் தவழும் காலம்
இன்னும் தொலைவில் இல்லை.

பிறப்பு
2004★09★08

இறப்பு
2010★06★15

கொற்றாவத்தை, தச்சன்தோட்டம்,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.
T.P.0778935050 (37610)(2.7.3)

என்றும் உன் நினைவோடு
குடும்பத்தினர்.

அமெரிக்காவின் நடவடிக்கை இலங்கையையும் பாதிக்கும்

எச்சரிக்கிறார் கோத்தா



கொழும்பு,ஜூன் 15
அமெரிக்காவின் ஆசியா மீதான நாட்டமானது இலங்கையையும் பாதிக்கும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரி வித்தார்.
கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: அமெரிக்கா ஆசிய பிராந்திய வலய நாடுகளின் மீது அண்மைக்காலமாக கூடுதல் நாட்டம் காட்டி வருகிறது.
இந்தியாவுடனும், மாலைதீவுடனும் அமெரிக்கா கூடுதல் உறவுகளைப் பேணி வருகிறது.
சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடனான உறவுகளை இலங்கை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானது. அரேபிய புரட்சியைப் போன்று இலங்கையில் ஏற்பட வாய்ப்பு இல்லை. இலங்கையில் ஜனநாயக ஆட்சி நிலவி வருகிறது. அரசியல் தலைமை மீது மக்கள் மரியாதை கொண்டுள்ளனர்.
நாட்டில் குழப்பங்களை விளைவிப்போர் தொடர்ந்து கண்காணிக்கப்படுவர் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.-என்றார். (ச)

தெரிவு செய்யப்பட்ட இடங்களில் 25 ஆடைத் தொழிற்சாலைகள்

பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 15
இந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் 25 ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகள் நிறுவப்படவுள்ளன.
இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.
இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டதன் பின்னர் முதலாவது ஆண்டில் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாயையும், 5 ஆண்டுகளின் பின்னர் ஆண்டொன்றில் 3 மில்லியன் அமெரிக்க டொலர் வருவா யையும் பெறுவதற்கு இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் கூறினார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கையில் தைத்த ஆடைகளுக்கு கிராக்கி நிலவுகிறது. அதற்கு ஏற்ப விநியோகங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால் சிறு மற்றும் மத்திய அளவிலான தைத்த ஆடை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்களை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு தயாராக உள்ளது.
சிறு மற்றும் மத்தியதரதைத்த ஆடை உற்பத்தியாளர்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு ஏற்ப, தெற்கு, ஊவா, கிழக்கு, வடக்கு ஆகிய மாகாணங்களில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் தைத்த ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளை நிறுவி, அவற்றை சிறுதொழில் முயற்சியாளர்களுக்குக் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ச-22)

கல்வி உரிமை இல்லாத 40 ஆயிரம் பிள்ளைகள்

கொழும்பு,ஜூன் 15
1,20,000 பிள்ளைகளில் 40,000 பிள்ளைகள் வரை கல்வி உரிமை இல்லாத பரிதாப நிலைக்கு உள்ளாகியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
இந்த விடயம் 2011 ஆம் ஆண்டில் நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. (ச)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி சின்னத்துரை மீனாட்சி

கடந்த 16.05.2013 வியாழக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவி **திருமதி சின்னத்துரை மீனாட்சி** அவர்களின் 31 ஆம் நாள் அஞ்சலி நிகழ்வு இன்று (15.06.2013) சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் நயினாதீவு தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
5 ஆம் வட்டாரம், நயினாதீவு.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் துரையப்பா சுப்பிரமணியம்

தோற்றம்: 10.11.1947
மறைவு: 13.05.2013

கடந்த 13.05.2013 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புச் சகோதரனின் மறைவுச் செய்திகேட்டு ஓடிவந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து, அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (15.06.2013) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"லிங்க அகம்"
காரைக்கால், இணுவில் கிழக்கு.

சகோதரர்கள். (38139) (45.5.3)

33 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
நல்லதம்பி வேலாயுதம்

தோற்றம் 04.02.1942
மறைவு 14.05.2013

குடும்பம் என்ற விருட்சத்தின் ஆணிவேராய்
கொண்ட மனையாளுக்கு நற் கணவராய்
பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு நல்ல அப்பாவாய்
மருமக்களுக்கு நல் மாமாவாய்
பேரப்பிள்ளைகளுக்கு தாத்தாவாய்
வாழ்ந்த எம் குடும்பத் தலைவனே
நாள்கள் பல சென்றாலும்
ஆறாது உம் நினைவுகள்

அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (15.06.2013) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்டவர்கள், உதவி புரிந்தவர்கள் மற்றும் நேரிலும் தொலைபேசி மூலமும் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

[illegible] மத்தி,
அளவெட்டி. (38329) (45.3.6)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VACANCIES
UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

FACULTY OF MEDICINE

Senior Professor/Professor in Anatomy/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Medicine/ Paediatrics / Surgery/ Obstetrics & Gynaecology

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Anatomy/ Biochemistry/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Microbiology/ Forensic Medicine/ Pharmacology/ Psychiatry/ Paediatrics/ Obstetrics & Gynaecology/ Psychology

Note:

1. Applications will be entertained from candidates with **MBBS** degree as their first degree for the above posts.
2. Applications from candidates with **BDS/BVSc** degree can also be considered for the posts in **Physiology** under category 4 of the scheme of recruitment, if there is no applicant under other three categories.

PARA MEDICAL DEGREE PROGRAMME

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Pharmacy/ Medical Laboratory Sciences

SALARY AND OTHER BENEFITS

Post	Salary scale
Senior Professor	Rs.67100 – 11x1425 – 82775/-p.m
Professor	Rs.56505 – 13x1310 – 73535/-p.m
Senior Lecturer Gr.I	Rs.45545 – 7x1050 – 52895/-p.m
Senior Lecturer Gr.II	Rs.39755 – 11x790 – 48445/-p.m
Lecturer (Probationary)	Rs.27775 – 10x645 – 34225/-p.m

Note:

In addition to the above salary, the following allowances will also be paid:

i) Academic allowance –

Senior Professor	- 73% of the basic salary
from 01.07.2013	- 85% of the basic salary
Professor	- 75.5% of the basic salary
from 01.07.2013	- 85% of the basic salary
Senior Lecturer Gr.I/Gr.II	- 72% of the basic salary
from 01.07.2013	- 80% of the basic salary
Lecturer (Probationary)	- 49.875 % of the basic salary
from 01.07.2013	- 60% of the basic salary

ii) Special allowance - 15% of the basic salary
From 01.07.2013 - 17.25% of the basic salary
From 01.10.2013 - 20% of the basic salary

iii) Cost of living allowance of Rs.6,600/-p.m.

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

Statutory benefits:

1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
2) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
3) Gratuity payments
4) Employees' Trust Fund benefits.
5) Free Medical Services.

Closing date:

Post of Senior Professor/Professor	**- 30.08.2013**
Other posts	**- 26.07.2013**

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.

(C/9827)(2.6.3)

பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்.

கூறுவிலை கோரல்

எமது சபையின் பாவனைக்கு கீழ்வரும் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளமையால் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து அவற்றிற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. தங்களின் கூறுவிலைகளை **25-06-2013** இற்கு முன் தபால் மூலம் அல்லது அலுவலகத்திலுள்ள கூறுவிலைப் பெட்டி மூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அனுப்ப வேண்டிய முகவரி **"பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம், கண்டி வீதி, யாம்ப்பாணம்".**

இல No	பொருள் Equipment	அளவு Specifications	எண்ணிக்கை Quantity
1.	Boiling vessel with lid – Stainless steel **	100 lit, 14 Gage	04
2.	Gas Cylinder	40 Kg	06
3.	Gas burner – Industrial	5 line	06
4.	Boiling Pan – தாச்சி	24"	04
5.	Boiling Pan – தாச்சி	18"	04
6.	Boiling Pan – தாச்சி	10"	04
7.	Sealer (Bottle, cork)		03
8.	Sealer (Bottle, Thread)		02
9.	Sealer - Polythene	18"	02
10.	Sealer - Polythene	12"	02
11.	Sealer - Polythene	6"	02
12.	Electric Oven	Large	01
13.	Defreezer	Medium	02
14.	Vessel – Stainless steel **	3' X 2' X2' – 14 Gage	04
15.	Gas Cylinder	12 Kg	01
16.	Gas burner (Cooker)	Kitchen	01
17.	Iron Cupboard	6' X 3' X 1½'	04
18.	Office Table	4' X 2'	02
19.	Office Chair		02
20.	Plastic Chair		25
21.	Computer, Table, Chair		01
22.	White Board	2½' X 4'	01
23.	Blender - Industrial		02
24.	Blender – Kitchen (Grinder)		01
25.	Refrocto meter	Brix	04
26.	Power Generator	Single base, 5 KW	01
27.	Glass Bottle	190 ml	10,000
28.	Bottle cover	50 X 1	200
29.	Timber Table	4' X 6'	02
30.	Pan – Stainless steel (தாச்சி)	10"	02
31.	Pan – Stainless steel (தாச்சி)	8"	02
32.	Pan – Stainless steel (தாச்சி)	6"	02
33.	Hand held PH meter		04
34.	Thermo meter - Industrial	0° C - 200° C	10
35.	Buckets - Stainless steel	20 lit	10
36.	Buckets - Stainless steel	10 lit	10
37.	Boiling Vessel - Stainless steel **	18 Gage	06
38.	Sugar Candy box - Stainless steel **	18 Gage, 20 lit	20
39.	Settling tank - Stainless steel **	18 Gage	04
40.	Container with lid - Stainless steel	10 lit	20
41.	Hydrometer	0 - 30	04
42.	Hydrometer	30 - 90	04
43.	Plastic Can (Storage)	5 lit	500
44.	Plastic Can (Storage)	10 lit	500

குறிப்பு:** அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மாதிரிகளை பார்வையிடலாம்.

பசுபதி சீவரத்தினம்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்.

(D/9830)(2.6.3)

நாய்க்குட்டி விற்பனைக்கு

50 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் குட்டிகளும், 9 மாதம் நிரம்பிய பெண்நாயும் (தடுப்பூசி ஏற்றப் பட்டது) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 226 3846,
077 615 6807
விழுந்தாலடி, கரணவாய்

(37608) (3.6.11)

கடைகள் விற்பனைக்கு/ வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட கடைத்தொகுதியில் கடைகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 899 5431, 075 043 1277

(38296) (3.6.11)

நாய்க்குட்டி விற்பனைக்கு

டோமன் அல்சேசன், பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 023 7334, 077 485 2324

(38280)(3.6.11)

காணி விற்பனைக்கு

தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் யாழ்.காரைநகர் வீதி,சண்டிலிப்பாயில் 32 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

(38226)(3.6.6)

தொடர்பு:075 731 6139

காணி விற்பனைக்கு உண்டு

சண்டிலிப்பாய் மேற்கு, இந்துக் கல்லூரிக்கு முன்பக்கமாக உள்ள ஒழுங்கையில் 100 m தூரத்தில் 5½ பரப்புடைய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 893 4678

(38247)(3.6.11)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் B.M.C.ஒழுங்கை (மணிக்கூட்டுவீதி)யில் நெற்பரப்பு 21 பரப்பிலிருந்தும் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

(38333)(3.6.11)

தொடர்பு: 077 529 6290

வீடு வளவு விற்பனைக்கு

மாகியப்பிட்டி,சண்டிலிப்பாயில் 5 பரப்பில் கிணற்றுடன் கூடிய வீடு,வளவு உடன் விற்பனைக்குண்டு. (சகல வசதிகளுடன் கூடிய வீடு)

(38258)(3.6.6)

தொடர்பு:
075 8372838, 077 477 1483

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

சிற்றம்பலம் இந்திராதேவி

(இளைப்பாறிய ஆசிரியை, புத்தளம் இந்து தமிழ் வித்தியாலயம், புத்தளம் சென். மேரிஸ் மகாவித்தியாலயம்)

வடமராட்சி கிழக்கு, வத்திராயன் தெற்கை பிறப்பிடமாகவும் மருதங்கேணி தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராதேவி (இளைப்பாறிய ஆசிரியை, புத்தளம் இந்து தமிழ் வித்தியாலயம், புத்தளம் சென்மேரிஸ் மகாவித்தியாலயம்) நேற்று முன்தினம் (13.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் (இளைப்பாறிய சாரதி, மாவட்ட செயலகம், புத்தளம்) மற்றும் கமலாசனி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் சறோஜினிதேவி, திருஞானசம்பந்தன் (ஜேர்மனி), கருணாகரன் (டென்மார்க்), சபேசன் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் சாருமதி (ஜேர்மனி), ஜெயசீலி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதங்கேணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P-0770584284 (சி/9842) தகவல்: குடும்பத்தினர்.

இளையவன் கணபதி சதாசிவன்

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியரும் சமாதான நீதிவானும்)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், கலையரசு வீதி, நவாலி தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவன் கணபதி சதாசிவன் நேற்றுமுன்தினம் (13.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவன் கணபதி-லக்ஷ்மி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானாபரணம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சற்குணலக்ஷ்மியின் அன்புச் சகோதரனும், ஞானமலரின் பாசமிகு கணவரும், லக்ஷ்மிதரன், லக்ஷ்மிகாந்தன், லக்ஷ்மிபிரியதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமகள், அஞ்சவா ஆகியோரின் அன்பு மாமனும், அபிஷன், ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், இராசமலர் மற்றும் ரூத் ஜெயமலர், றூபிதேவமல், றதி இன்பமலர் (டென்மார்க்), றாஜன் ஜீவரட்ணம் (ஜேர்மனி), றூபன் கனகரட்ணம் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.06.2013) சனிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி அமெரிக்கன் சிலோன் மிஷன் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலையரசு வீதி, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
ச.லக்ஸ்மிதரன் (மகன்)

(38339)(16.14.9.7)

தேசிய கலை இலக்கியப் பேரவையின்

புதுவசந்தம் அறிமுகவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 15

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட புதுவசந்தம் -2013 மலரின் அறிமுகவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பிரதான வீதி, சங்கானை இலங்கை வங்கிக்கிளையின் மேல் மாடி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்னார் பிரதேச தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் சதனுஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்புக் கருத்துரையை ''புதிய பண்பாடு-புதிய வாழ்வு'' எனும் தலைப்பில் சட்டத்தரணி சோ.தேவராஜாவும், நூல் அறிமுகவுரையை தேசிய கலை இலக்கியப் பேரவையின் இலக்கியச் செயலாளர் மு.மயூரனும் நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து விசேட கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இதே அறிமுக விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். கோட்டைக் கடற்கரைப் பகுதி திறந்தவெளி அரங்கில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் த.பிரகாஸ் தலைமையில் நடைபெறும். (ந-14)

மரண அறிவித்தல்

விஸ்வநாதன் சிவசுப்பிரமணியம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதன் சிவசுப்பிரமணியம் 06.06.2013 அன்று ஜேர் மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், செல்வராணி (கொழும்பு), நாகராணி (ஜேர்மனி), நிர்மலாராணி (இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குலசிங்கம் (இளைப்பாறிய இலங்கை வங்கி ஊழியர்), நித்தியானந்தன் (ஜேர்மனி), சண்மு கநாதன் (இணுவில்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மலர்விழி, ஜெயா தரன் (ஜேர்மனி), ரஜீவி, நவநீதன் (லண்டன்), தாட்சாயிணி விஜிகுமார் (லண்டன்), லாவண்யா, பிரதீபா, திலீப்குமார், சஹானா, கோகுலன், கம்சலா அஜீபன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2013) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னத்தம்பி புலவர் வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
சகோதரர்கள்,
மைத்துனர்.

(38251) (45.6.3)

மரண அறிவித்தல்

திருமதி கற்பகம் தம்பையா

அல்வாய் தெற்கு, சின்ன ஆலடியைப் பிறப்பிடமாகவும், கரணவாய் வடக்கு கொற்றாவத்தையைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கற்பகம் தம்பையா நேற்றுமுன்தினம் (13.06.2013) வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (14.06.2013) வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஊறனி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P- 0212262453, 0772856100 (37611)(16.14.9.7) தகவல்: குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

சரவணமுத்து பரம்சோதி

(உரிமையாளர் வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்)



காரைநகர் மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பரம்சோதி கடந்த 13.06.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தேவகுஞ்சரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி - செந்தில்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் செந்தூரன், சிவதர்ஷினி, சாளினி ஆகியோரின் பாசமிகு தகப்பனும் காண்டீபனின் அன்பு மாமனும் காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் தனலக்சுமி தம்பதியரின் சம்பந்தியும் கருணாநிதி, சிவசோதி, கற்பகநாதன், கணேசன், பாக்கியவதி, தவமணி, கோகிலாவதி, சிவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருணகிரிநாதன், இராசகுமாரி, கமலக்கண்ணன், சாந்தகுமாரி, யோகேஸ்வரி, பரமேஸ்வரி, சறோஜினிதேவி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சிவானந்தன், சிவபாலன், இராஜேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் சுரேந்திரன், சொர்ணதேவி, சிவயோகன், நகுலி ஆகியோரின் சகலனும் ஹரிஷின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/9841)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'13' இல் கைவைக்காதீர்

தென்மாகாணசபை ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் வலியுறுத்து

கொழும்பு,ஜூன் 15

13ஆவது திருத்தச்சட்டத்தில் கைவைக்காது வடக்குத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று தென் மாகாணசபையின் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

தேர்தலூடாக வடக்குக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து மாகாணசபை முறைமையை வெற்றியடையச் செய்ய அனைத்து மாகாணசபை உறுப்பினர்களும் அதில் தலையிடவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புலிகளால் ஆயுதமேந்திப் பிரிக்க முடியாத நாட்டை, பொலிஸ் அதிகாரத்தைப் பெற்று 'பொல்லு'களால் துண்டாட மாகாணப் பொலிஸாருக்கு முடியுமா என்று தென் மாகாணசபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் அஜித் பிரசன்ன கேள்வி எழுப்பினர்.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

''மாகாணசபை முறைமையை எதிர்த்து ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகியவை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

எனினும் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று 13 பிளஸ் தீர்வு, தமிழர் இனப்பிரச்சினைக்கு வழங்கப்படும் என்று ஜனாதிபதி இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்துக்கு உறுதியளித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் அவர்களின் எதிர்ப்புகளின் அடிப்படையில் வடக்குத் தேர்தல் நடத்தப்படாது போகுமானால் அது வெளிநாட்டவருக்கு இழைக்கும் அநீதி அல்ல, நம் நாட்டு மக்களுக்கு இழைக்கும் அநீதியாகும்.

எனவே, 13ஆவது திருத்தச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டோ அல்லது காணி, பொலிஸ் அதிகாரங்களை அதிலிருந்து நீக்கியோ வடக்குத் தேர்தலை அரசு நடத்தக்கூடாது.

தென்மாகாணசபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் இடதுசாரிக்கட்சிகள் என்ற வகையில் அனைத்து மாகாணசபை உறுப்பினர்களும் அதனை வற்புறுத்த வேண்டும்.

இதனூடாக வடக்குத் தேர்தலை நடத்தி அங்குள்ள மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து மாகாணசபை முறைமையை வெற்றியடையச் செய்வோம் என்றார். (ச)

டெங்கை ஒழிக்க புகை விசிறல்



கொழும்பு,ஜூன் 15

கொழும்பு மாநகரசபை மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவை ஒன்றிணைந்து கொழும்பில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன் னெடுத்து வருகின்றன.

அதற்கமைய கொழும்பு மாநகரசபை மற்றும் கொழும்பு கண் வைத்தியசாலை வளாகங்களில் சுகாதாரப் பிரிவினர் புகையடித்து டெங்கு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

41 இலங்கையரை நாடு கடத்தியதுஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியாவில் இருந்து மேலும் 41 இலங்கை அகதிகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை ஆஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் ப்ரென்டன் ஓ கோனர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் இருந்து 1247 பேர் இதுவரை நாடுகடத்தப் பட்டுள்ளனர். அவர்களில் 1035 பேர் பல வந்தமாக நாடுகடத்தப்பட்ட வர்களாவர்.

இவ்வாறான நாடுகடத்தப்படும் திட்டம், ஆள்கடத்தல் காரர்களுக்கும், சட்ட விரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முயற்சிப்பவர் களுக்கும் கடுமையான செய்தியை அனுப்புவதாக அமைந்துள்ளது என்று ஆஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். (ச)

இந்திய சமையற்கலை வல்லுநர்களால் விசேடமாக தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வேண்டிய அளவு (Buffet) புஃபே முறையில் ஜூன் 15,16 ஆம் திகதி சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மாலை மணி தொடக்கம் இரவு 10 மணிவரை

விசேட விலைக்கழிவு 200 ரூபா மட்டுமே...!

முற்றிலும் குளிரூட்டப்பட்ட அல்லது இயற்கை சூழலான பூங்காவில் (Garden)

உண்டு மகிழ நாடவேண்டிய இடம்...

பிள்ளையார் இன்

மாவிட்டபுரம் வீதி, பாற்பண்ணை.

உணவு வகைகள், பூரி, பாழி உட்பட பல வகையான தோசை வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 0778959716, 021 2222829

போகம்பரை சிறைச்சாலையை வேறு இடத்துக்கு மாற்றுவது தொடர்பில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து வியாழக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஆராயப்பட்டது. இந்தக் கூட்டத்தில் மத்திய மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவை, முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் சிறைச்சாலை உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

எண்பது வயதில்...

ஆனந்த சங்கரி!

தமிழ் மக்களின் நலனுக்காக உடலும் உள்ளமும் சோராது குரல் கொடுக்கும் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களின் 80ஆவது பிறந்த தினத்தில் எல்லா நலன்களும் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

நாச்சிமார் கோயிலடி, இல.1077, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 3631

(38344)

தமிழர் விடுதலைக் கூட்டணி

மாணிக்கக்கற்கள் கொள்ளை



மாணிக்கல் வியாபாரி ஒருவரிமிருந்து சுமார் ஒன்றரைக்கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக்கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிட்டப்பட்ட சம்பவம் லக்கலையில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் என்று கூறிக்கொண்டு அவருடைய வீட்டுக்குச் சென்ற கொள்ளைக் கோஷ்டியினரே அவற்றைக் கொள்ளை யடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தகரின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளைக் கோஷ்டியினர் வர்த்தகரின் கைகளுக்கு கைவிலங்கு இட்ட பின்னர் வீட்டிலிருந்தவர்களை அறை யொன்றில் வைத்துப் பூட்டிவிட்டே இந்தப் பொருள்களைக் கொள்ளை யடித்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

சாறி ஸ்கிறீன் பிறின்டிங் (Saree Screen Printing)

ஆடைத் தொழில் துறையில் உள்ளோருக்கும், ஆடைத்தொழில் துறையை ஆரம்பிக்கவுள்ள இளம் தொழில் முயற்சியாளர்களுக்கும் ஓர் அருமையான வாய்ப்பு. வீட்டிலிருந்தவாறே நிறைந்த வருமானத்துடன் கூடியதான சுயதொழில் ஒன்றினை குறைந்த முதலீட்டில் ஆரம்பிக்க...

சாறிகள் மற்றும் புடவைகளில் மிகக்குறுகிய நேரத்தில் பல்வேறு கண்கவர் டிசைன்களில் ஸ்கிறீன் பிறின்டிங் செய்வது தொடர்பான செயன்முறை பயிற்சிப் பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

காலம்- 2013 யூலை மாதம் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில்
இடம்- யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்
நேரம்- காலை 08.30 - மாலை 04.30 வரை
கட்டணம்- 2000/-

சர்வதேச தகமைவாய்ந்த வல்லுனர்களால் செயன்முறை விளக்கம் வழங்கப்படவுள்ள இப்பயிற்சிப் பட்டறையில் அனுமதிகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் பங்குபற்ற ஆர்வமுள்ளோர் எதிர்வரும் 25.06.2013க்கு முன்னர் இல.124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாண வர்த்தக தொழிற்துறை மன்றத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு - 0212226609

குறிப்பு- சிறந்த உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்

தனிப்பட்ட கணித வகுப்பு

தரம் 6-11 கணிதம் பிரபல ஆசிரியரால் யாழ் நகரப் பகுதியிலுள்ள உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு:077 199 9286

(38335)(16.6.7.11)

விற்பனைக்கு

61- XXXX என்ற தொடர் இலக்க முடைய ஹையஸ் Sel Model Van விற்பனைக்கு உண்டு. டுவல் A/C, பிளவட் கியர், 5 கதவு, கட்டை மொடல், அலோவீல்

தொடர்பு- 0771199001

(38336)(16.6.7.9)

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 7இல் செவ்வாயும், 22½ கிரகபாவமும் உடைய கனடாவில் சுயமாக தொழில் நிலையம் நடாத்தும் 29 வயதுடைய மணமகனுக்கு அழகான, குணமுடைய மணமகள் தேவை. தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு- 0772263560

(38314)(16.6.7.9)

சிங்களம் /தமிழ்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

(21.06.2013 வெள்ளி) சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில்

ஸ்ரீமாஸ்டர்

இல.72, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். T.P- 0777033729

வீடு வாடகைக்கு உண்டு

இல.3, பழைய தபாற்கந்தோர் வீதி "சிறி" இல்லம் சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு- 0750415775

கே.கே.எஸ். றோட், கொக்குவில்.

கணினி திருத்தம்

(COMPUTER REPAIR)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம். அழையுங்கள்: 0779086737

GUNAA BEST PC
#52, HOSPITAL ROAD, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்வாதிகளின் சுயலாபத்துக்காக உருவாக்கப்பட்டதே இனப்பிரச்சினை

விரிவுரையாளர் ரொஹான் குணரட்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை. இல்லாத இனப்பிரச்சினையை உருவாக்கிய வர்கள் அரசியல் வாதிகள்தான். தமது சுயலாபத்துக்காக அவர்கள் உருவாக்கியதே இனப் பிரச்சினை. இவ்வாறு சிங்கப்பூர் சர்வதேச கற்கைகள் பாடசாலையின் விரிவுரையாளர் ரொஹான் குணரட்ன தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவும், யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய 'மீள் இணக்கத்தில் உயர்கல்வியின் பங்கு' எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் வியாழக்கிழமை யாழ். கீரீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இதன்போது, 'போருக்குப் பின்னரான சகிப்புத் தன்மையும் மற்றும் சகவாழ்வை ஊக்குவித்தலும்' எனும் தலைப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம்களிடையே நான் வேற்றுமையைக் காணவில்லை. ஆனால், அரசியல்வாதிகளிடமே வேற்றுமை காணப்படுகின்றது.

அந்தவகையில், 1972 ஆம் ஆண்டில் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் நேர்காணல் தேர்வு ஒன்றை நடத்தியபோது, நாட்டில் இனப்பிரச்சினை நிலவுவதற்கான காரணத்தை நான் அவரிடம் கேட்டேன்.

1956ஆம் ஆண்டில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டமையே இனப்பிரச்சினை ஏற்படக் காரணம் என்று அவர் தமது தரப்புத் தவறை ஒப்புக் கொண்டார்.

கடந்த 30 வருடகால போரின் பின்னர் இன்று சமாதான சூழல் காணப்படுகின்றது. யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகள் 11 ஆயிரத்து 600 பேரில் சிலரைத் தவிர ஏனையோர் சமுதாயத்துடன் இணைக்கப்படுவதை விரும்புகின்றார்கள். அவர்களை சமூதாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொதுபலசேனா என்பது சமயம் சார்ந்த அமைப்பு அல்ல. அது அரசியலை அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பாகும். அது தனது அரசியல் இலாபத்திற்காக சமயத்தை துஷ்பிரயோகம் செய்கின்றது. -என்றார். (ச-ரி)

ஆள்கடத்தலை கட்டுப்படுத்த இலங்கையில் புதிய சட்டம்

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு உத்தேசித்துள்ளது.

குடிவரவு சட்டங்களில் திருத்தம் ஏற்படுத்துவதன் மூலம் சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க முடியும் என்று நம்பிக்கைவெளியிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் ஆஸ்திரேலிய இலங்கை அதிகாரிகள் உயர்மட்டப் பேச்சு நடத்தியுள்ளனர்.

சட்டங்களை கடுமையாக்குவதன் மூலம் சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளை வரையறுக்க அரசு தீர்மானித்துள்ளது.

அதுதொடர்பில் ஆஸ்திரேலியாவின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

மீனவர்கள் தங்களை பதிவது கட்டாயம்

கொழும்பு, ஜூன் 15

கடலுக்குச் செல்லும் மீனவர்களை பதிவு செய்து கொள்ளும் முறைமை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மீனவர்கள் பதிவு செய்யப்படும்போது படகுகளில் உயிர்க்காப்பு அங்கிகள் கட்டாயப்படுத்தப்படுவதுடன் அனைத்துப் படகுகளையும் இயல்பாகவே காப்புறுதித் திட்டத்துக்குள் உள்வாங்கும் வகையில் புதிய செயற்றிட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்று அமைச்சர் கூறினார்.

இலங்கையில் அண்மையில் மீனவர்கள் உயிரிழந்த சம்பவத்துக்கு அனுதாபம் தெரிவித்த அவர், இந்தக் கொடூரமான சம்பவத்தை அடிப்படையாக வைத்து இந்த திட்டங்கள் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததா வது:

இதற்கு முன்னர் பல தடவைகள் அனைத்து மீனவர்களையும் காப்புறுதி செய்யுமாறு நாம் வற்புறுத்திய போதும், அதில் கணிசமானவர்கள் மாத்திரமே அக்கறை செலுத்தியிருந்தனர். வருடத்துக்கு 750 ரூபா வீதமே காப்புறுதித் தொகை அறவிடப்படுகிறது.

அந்தவகையில் மாதாந்தம் 60 ரூபா வீதமே செலுத்தப்பட வேண்டும். இவ்வாறான காப்புறுதி திட்டத்தில் மீனவர்கள் தங்களை உள்வாங்கிக் கொள்வதன் மூலம் அவர்களுக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும் பல சலுகைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

எனவே, மீனவர்களை காப்புறுதி திட்டத்துக்குள் உள்வாங்கும் வகையில் பதிவு முறைமை கட்டாயமாக்கப்படும். -என்றார். (ச)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

அதிகாரப் பகிர்வு தமிழருக்கு இல்லை

விவகார அமைச்சர், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்த நிலையில் நியூஸிலாந்து திரும்பியுள்ள வெளிவிவகார அமைச்சர் அங்குள்ள நாளிதழுக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம் பெறவுள்ள பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டில் சர்வதேச சமூகம் பங்கெடுப்பதன் ஊடாக இலங்கையின் நிலை மைகளை நேரில் பார்வையிட முடியும்.

மனித உரிமைகள் நிலைமைகள் மற்றும் ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நேரடியாகப் பார்வையிட முடியும்.

வடக்கில் இன்னமும் அதிகாரப் பகிர்வு வழங்கப்படவில்லை. அதிகாரப் பகிர்வு தொடர் பில் திருப்தி அடையக்கூடிய தீர்வுத் திட்டங்கள் இன்னமும் முன்வைக்கப்படவில்லை. இருப்பினும் செப்ரெம்பர் மாதம் அரசு வட மாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளது - என்றார். (த-5)

இறுதிப் போரில் கைதானவர் நிரபராதி

முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

1999 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளான பால்ராஜ், வேந்தன், செல்லன் உள்ளிட்டவர்கள் புதிதாக இணையும் அங்கத்தவர்களுக்கு போர்ப் பயிற்சி, ஆயுதப் பயிற்சி கொடுக்கிறார்கள் என்று தெரிந்தும் அது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கத் தவறியமை, விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றமை, 1992 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசெம்பருக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆனையிறவு படைத்தளம் மீது தாக்குதல் நடத்தச்சென்றமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டன.

2009 மே மாதம் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

வாதரவத்தை, புத்தூர் கிழக்கைச் சேர்ந்த கணேசமூர்த்தி கமலமோகன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் கமலமோகனிடம் இருந்து பெறப்பட்டதாகக் கூறி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றையும் சமர்ப்பித்திருந்தார்.

இந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றுக்கு கடந்த டிசெம்பரில் பாரப்படுத்தப்பட்டது.

இது தொடர்பான உண்மை விளம்பல் விசாரணையின் போது கமலமோகனுடையது என்று தெரிவிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மேல் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது.

அவருக்கு எதிராக வேறு எந்த ஆதாரங்களும் இல்லாமையால் அவர் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டார். (த-4)

காணிகளை அடையாளம் காட்ட மக்கள் மறுப்பு

படுவதற்கான அறிவித்தல் ஒட்டப்பட்டது.

ஒரு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணி 5 பேருக்கு சொந்தமானது.

இந்த நிலையில் காணி சுவீகரிப்பு நடைமுறைகளை முன்னெடுப்பதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் நேற்றுக்காலை அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது அங்கு திரண்ட காணி உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் காணிகளை நில அளவை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து குறித்த காணிகளை நில அளவை செய்யாமல் நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பி உள்ளனர். (த-5)

இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை எழுதும்

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சலுகைகள் வழங்கத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 15

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ள ஜி.சீ .ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்கு சலுகைகள் வழங்க இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யு. எம். என்.ஜே. புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

இந்தச் சலுகைக்காக விண்ணப்பிப்பவர்கள் தமது பெயர், பாடசாலை அல்லது தனிப்பட்ட பரீட்சார்த்தியா என்ற விவரம், பாடசாலை அல்லது தனிப்பட்ட முகவரி, பிறந்த திகதி, தாய் அல்லது தந்தை மற்றும் பாதுகாவலர் பெயர், தொலை பேசி இலக்கம்- குறைபாட்டுத் தன்மை (மருத்துவ அறிக்கை இணைக் கப்படல் வேண்டும்) சிகிச்சை பெறும் வைத்தியர் அல்லது நிறுவனத்தின் பெயர், முகவரியும் தேவைப்படும் உதவி தொடர்பான விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைத் தயாரித்து எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பெலவத்த, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ-400)

> விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சலுகைகள் வழங்க இலங்கைப் பரீட்சைத் திணைக் களம் தீர்மானித்துள்ளது.

மரண அறிவித்தல்

திருமதி கந்தையா கதிராசிப்பிள்ளை

மாசேரி வரணியைப் பிறப்பிடமாகவும் வரணி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கதிராசிப் பிள்ளை நேற்று 14.06.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை கந்தையா (இளைப்பாறிய ஆசிரியரும் கும்புட்டான் புலம், கற்பக விநாயகர் ஆலய அறங்காவலர்) அன்பு மனைவியும் இராசலட்சுமி, இந்திராதேவி, குமாரசாமி (இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர், கட்டட ஒப்பந்தகாரர்), பாலசிங்கம், காலஞ்சென்ற சிதம்பரபிப்ளை மற்றும் நடராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற ஜெயவீரசிங்கம் (சமாதான நீதிவானும் முகாமையாளர் எரிபொருள் நிரப்பு நிலையம், மாங்குளம்) மற்றும் கணேசலிங்கம் (இளைப் பாறிய பொது முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம்), இந்திரகுமாரி, மீனாம்பிகை (விவாக பிறப்பு, இறப்பு பதிவாளர், தென்மராட்சி), சிவகாமிப்பிள்ளை (கொழும்பு), சிவகுமாரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் கிருபாலினி (லண்டன்), ததீசன் (லண்டன்), வாகீசன் (கனடா), கேதீசன் (லண்டன்), யாழினி (கனடா), நளாயினி, நிரோசினி B.A.(சிங்கப்பூர்), நிஷானி B.A. (கொழும்பு), நிருபா (பேராதனை பல்கலைக்கழகம்), நிருஜா (பேராதனை பல்கலைக்கழகம்), பிரியங்கா (திட்டமிடல் பிரிவு, பிரதேச செயலகம், கண்டாவளை), சத்தியேந்திரா (பிரான்ஸ்), துஷ்யங்கா, மதுரங்கா, சுஜீபன் (காப்புறுதி கூட்டுத்தாபனம், கொழும்பு), மதுசன் (லண்டன்), சியாமினி, அனோஜன் (கொழும்பு), சிந்துஜா (கனடா), லாவண்யா (கனடா), அபிதா (கனடா), இராஜிதன் (லண்டன்), சண்முகபிரியா (லண்டன்), காயத்திரி (கனடா), குணாளினி (லண்டன்), பாஸ்கரன் (கனடா), ஜெயபாலன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), டாக்டர்.சத்தியராஜ் (தேசிய வைத்தியசாலை, கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராகவி (லண்டன்), அஜந் (லண்டன்), சாகித்தியன் (லண்டன்), நிருத்திகா (லண்டன்), ஆதித்தியன் (லண்டன்), பிரணவி (லண்டன்), பானுஜன் (கனடா), வினுஜன் (கனடா), சிந்தூரி, யானு (சிங்கப்பூர்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2013) சனிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கப்பத்தை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாசேரி, வரணி.
0212050844

(சி/9844)

அன்னாரின் குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

செல்வி தாரணி கணேசநாதன்

நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த தியாகராசா - அன்ன லட்சுமி தம்பதியரின் பேர்த்தியும் கணேசநாதன் -கமலாதேவி தம்பதியரின் புதல்வியுமான தாரணி டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் தனஞ்சயன், காலஞ்சென்ற கிரிசான் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மட்டுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகம்மா தம்பதியரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2013) சனிக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.
கொ. கமிலைநாதன்
தொ.பே. 0045 862 31471

(35059)(45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண மட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி

விபுலானந்தா ஆண்கள், விக்ரோறியா மகளிர் சம்பியன்

வவுனியா விக்ரோறியாக் கல்லூரி

வவுனியா, ஜூன் 15

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட மாகாண மட்டக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் ஆடவர் பிரிவில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரியும், மகளிர் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மாகாணச் சம்பியன்களாகத் தெரிவாகின.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆடவருக்கான இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த விபுலானந்தாக் கல்லூரியும், அல் ஹாமியா முஸ்லிம் வித்தியாலய அணியும் மோதின. 10 பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அல் ஹாமியா வித்தியாலய அணி 10 பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பாக ரஸாமின 17 ஓட்டங்களையும் ஷதீஸ் 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் விபுலானந்தா சார்பில் மகிந்தன் 4 இலக்குகளையும், பானுஜன், திவாகர், பருசூதனன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

52 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய விபுலானந்தாக் கல்லூரி அணி, 9 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 5 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அவ்வணி சார்பாக சிவாகரன் 15 ஓட்டங்களையும், ரஞ்சிதன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அல் ஹமீயா வித்தியாலயம் சார்பில் ஆக்ஷன், சிம்சான் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

இந்தப் பிரிவில் மூன்றாம் இடத்தை தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை அணி பெற்றுக் கொண்டது.

ஓமந்தையை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலம் 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பாக பிரியவர்னா 18 ஓட்டங்களையும், பிரதீபா 15 ஓட்டங்களையும், தயாழினி 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

61 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய விக்ரோறியாக் கல்லூரி அணி 9 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பிரியங்கா 29 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

மூன்றாம் இடத்தை வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

(ற-400-433-23)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

19 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவு

ஹாட்லிக் கல்லூரி சம்பியன்

வலி.வடக்கு, ஜூன் 15

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாகாணக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

அதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 27 புள்ளிகளைப் பெற்று சம்பியனாகத் தெரிவாகியது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 25 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், 20 புள்ளிகளைப் பெற்று நெல்லியடி மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ற-86)



ஆவரங்கால் இந்து இளைஞர் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

அச்சுவேலி, ஜூன் 15

வலி.கிழக்கு பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி சம்பியனாகத் தெரிவாகியது.

கடந்த செவ்வாய்க்கிழமை புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியும், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியும் மோதின.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் 3:0 என்ற செற் கணக்கில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி, சம்பியனாகத் தெரிவாகியது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம்.

(ற-11)

மென்பந்து தொடருக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மூளாய் விக்ரோறியாக் கழகம் தர்மேசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை ஒன்றை நடத்தவுள்ளது.

அணிக்கு 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட சுற்றுத் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளர். (ற)

இன்றைய ஆட்டம்

யாழப்பாணம், ஜூன் 15

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பாலகிருஸ்ணன் வெற்றிக் கிண்ண '20/20' கிரிக்கெட் சுற்றுப்போட்டி தொடர் இன்று சனிக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமகின்றது.

இன்று காலை 8 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ற-23)

அரையிறுதியில் ஊரெழு றோயல்

யாழ்ப்பாணம், ஜூன் 15

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிங் ஒவ் ஜப்னா உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தெரிவாகியது.

இந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் மோதியது.

அதில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

(ற-23)

வலைப்பந்தாட்ட விதிகள் குறித்து கலந்துரையாடல்

வலி.வடக்கு, ஜூன் 15

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கமும், யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும் இணைந்து நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு வலைப்பந்தாட்ட புதிய விதிமுறைகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், வலைப்பந்தாட்ட கழக உறுப்பினர்கள், நடுவர்கள், ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கச் செயலர் கேட்டுள்ளார். (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசாந்துக்குத் திருமணம்

சூதாட்ட சர்ச்சையில் சிக்கி சிறைக்கு சென்று திரும்பியுள்ள ஸ்ரீசாந்த்துக்கு விரைவில் திருமணம் நடக்க உள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.பி.எல் சூதாட்ட விவகாரத்தில் சிக்கி சிறைக்கு சென்று பிணையில் திரும்பியுள்ளார் பிரபல கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த். இந்த நிலையில் இவர் ஜெய்ப்பூரைச் சேர்ந்த அரச குடும்பத்து பெண்ணை மணக்க உள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. பெரும்பாலும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஓணம் பண்டிகையின் போது திருமணம் நடைபெறும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்துடன் குருவாயூரில் திருமணம் நடைபெறுவதை ஸ்ரீசாந்த் விரும்புவதாகவும், எனவே அங்கேயே திருமணம் நடக்கலாம் என்றும் தெரிகிறது.

இது குறித்து ஸ்ரீசாந்த்தின் சகோதரி விதிதா கூறுகையில், ''நாங்கள் இன்னும் பெண்ணைப் பார்க்கவில்லை. அதுகுறித்து பரிசீலித்து வருகிறோம்'' என்று தெரிவித்தார். (ற)



மிகச் சிறந்த இன்னிங்ஸ் - சங்கா

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணிக்கெதிரான நேற்றைய போட்டி கிரிக்கெட் வாழ்நாளில் தனது சிறந்த இன்னிங்ஸ்களில் ஒன்று என்று இலங்கை அணி வீரர் குமார் சங்ககார தெரிவித்துள்ளார்.

அந்த ஆட்டத்தில் 134 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்ற குமார் சங்ககார, போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாக போட்டியின் பின்னர் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், அந்த ஆட்டத்தில் மஹேல ஜெயவர்த்தன மற்றும் நுவன் குலசேகர ஆகியோர் வெளிப்படுத்திய திறமை குறித்தும் அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து நிர்ணயித்த 293 ஓட்டங்கள் என்ற வெற்றி யிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48ஆவது பந்துப் பரிமாற்றத்தில் வெற்றி யிலக்கை அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

உலக் கிண்ண உதைபந்து 20 பில்லியன் டொலர் ஒதுக்கீடு

2018ஆம் ஆண்டுக்கான உலக கிண்ண உதைபந்தாட்டத் தொடர் ரஷ்யாவில் முதன் முறையாக நடைபெறவுள்ளது.

உலகம் முழுவதிலும் உள்ள 32 அணிகள் பங்கேற்று விளையாடும் இப்போட்டிக்காக 12 மைதானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஜூன் 8ஆம் திகதி தொடங்கி ஒரு மாதம் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்த போட்டிகளை சிறப்பாக நடத்த ஆர்வமாக உள்ள ரஷ்ய அரசு, அதற்கான நிதியை தாராளமாக வழங்க முன்வந்துள்ளது.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிகளை நடத்துவதற்கு 20 பில்லியன் டொலரைச் செலவு செய்ய தீர்மானித்துள்ளதாக ரஷ்ய பிரதமர் திமித்ரி மெத்வதேவ் தெரிவித்துள்ளார்.

இது 2010ஆம் ஆண்டு புதின் பிரதமராக இருந்த போது செலவு செய்ய முன் வந்த தொகையைவிட இரு மடங்காகும்.

இது தொடர்பாக மெத்வ தேவ் கூறுகையில்,

''உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிக்காக வரும் பட்ஜெட்டில் 13 பில்லியன் டொலர் ஒதுக்கப்படும்'' என்றார்.

இதேபோல், 2014ம் ஆண்டு ரஷ்யாவின் சோச்சி நகரில் நடைபெற உள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்காக அரசு 51 பில்லியன் டொலர் செலவு செய்ய உள்ளது குறிப்பிடத்தக்கது. (ற)

உசைன் போல்ட் முதலிடம்



ஒஸ்லோவில் நடைபெற்ற டயமன் லீக் 200 மீற்றர் ஓட்டத்தில் உசைன் போல்ட் வெற்றியீட்டியுள்ளார்.

19.79 செக்கன்களில் போட்டித் தூரத்தை உசைய்ன் போல்ட் பூர்த்தி செய்ததுடன், இவ்வாண்டின் 200 மீற்றர் ஓட்டத்திற்கான சிறந்த காலப் பெறுதியாகவும் அது பதிவானது.

நோர்வேயின் ஜெசிமா சைடி இரண்டாம் இடத்தையும், பிரித்தானியாவின் ஜேம்ஸ் எலிங்டன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

ஒலிம்பிக் சம்பியனான உசைன் போல்ட் கடந்த வாரம் ரோமில் நடைபெற்ற டயமன் லீக் 100 மீற்றர் ஓட்டத்தில் ஜெஸ்டின் கட்லினிடம் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

பாகிஸ்தான் உடனான போட்டி முக்கிமானது - டோனி

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் இன்று இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இந்த போட்டி குறித்து ஊடகத்தினருக்கு பேட்டியளித்த இந்திய அணியின் அணித் தலைவர் மஹேந்திர சிங் டோனி,

''பாகிஸ்தானுக்கெதிரான எந்த ஒரு போட்டியும் எங்களுக்கு மிகவும் முக்கியமானது.

பாகிஸ்தானை எதிர்கொள்வதில் எங்களுக்கு நெருக்கடி ஏதும் இல்லை'' என்று தெரிவித்தார்.

தற்போதைய சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்திய அணி முந்தைய இரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்க, மேற்கிந்திய தீவுகள் அணிகளை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

பகிரங்க மன்னிப்பு கேட்டார் வோணர்

இங்கிலாந்து வீரர் ஜோ றூட் இனைத் தாக்கியமைக்காக ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளார்.

அத்தோடு தனது நடத்தை திறம்பட அமைந்திருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இங்கிலாந்து வீரரைத் தாக்கிய பின்னர் டேவிட் வோர்னர் பங்குகொண்ட முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பாக இது அமைந்திருந்தது. ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை அவருக்குப் போட்டித் தடையும், அபராதமும் வழங்கிய பின்னரே இந்த ஊடக வியலாளர் சந்திப்பு இடம் பெற்றிருந்தது.

இதன்போது கருத்துத் தெரிவித்த டேவிட் வோர்னர், மைதானத்திலும், மைதானத்திற்கு வெளியேயும் நடந்து கொள்ளும் விதத்தில் இன்னும் சிறப்பான [illegible] வேண்டும் என்பதை உணர்வதாகக் குறிப்பிட்டார்.

இங்கிலாந்து வீரரைத் தாக்கியமைக்காகப் பகிரங்க மன்னிப்புக் கோருவதாகத் தெரிவித்த டேவிட் வோணர், தனது நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்பதாகவும் தெரிவித்தார்.

மிகுந்த கவலையடைந்திருப்பதாகக் குறிப்பிட்ட டேவிட் வோணர், தனது சக அணி வீரர்களையும், அணியின் பயிற்றுவிப்பாளர்களையும், தன்னையும், தனது குடும்பத்தினரையும், தனது நடவடிக்கை மூலம் கைவிட்டு விட்டதாகத் தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையால் ஆட்டம் சமநிலையில் அரையிறுதியில் தென்னாபிரிக்கா





மழையின் குறுக்கீட்டால் டக்வேர்த் லூயிஸ் முறையில் ஆட்டம் சமநிலையில் முடிவுக்கு வந்தாலும் ஓட்டச்சராசரி அடிபடையில் மினி உலகக்கிண்ண தொடரின் அரையிறுதிக்கு முன்னேறியது தென்னாபிரிக்கா.

தென்னாபிரிக்க- மேற்கிந்திய தீவுகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத்தீர்மானித்தது. ஆட்டம் தொடங்கும் முன்னரே மழை பெய்ததால், 31 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாக ஆட்டத்தின் அளவு சுருக்கப்பட்டது. இந்த நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, இலக்குகளைக் காப்பாற்றியவாறே நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.அந்த அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான அம்லா 23 ஓட்டங்களுடன் சாமுவேல்ஸின் பந்தில் கெய்லிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த பின்னர் தென்னாபிரிக்க அணியின் ஆட்டத்தில் அனல்பறக்கத் தொடங்கியது.

அதன் பின்னர் இலக்கு இழப்பைப் பற்றி அக்கறை கொள்ளாமல், ஓட்ட எண்ணிக்கையை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டு ஆடத்தொடங்கினர். பந்துகள் பவுண்டரிகளாகவும், சிக்ஸர்களாகவும் பறக்கத்தொடங்கின.

இதனால் கிடுகிடுவென தென்னாபிரிக்க அணியின் ஓட்டவேகம் அதிகரித்தது. 31 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 230 ஓட்டங்களைப் பெற்றது. இங்க்ரம் 73 ஓட்டங்களையும், அணித்தலைவர் டிவில்லியர்ஸ் 37 ஓட்டங்களையும், பிளஸிஸ் 35 ஓட்டங்களையும், மில்லர் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிராவோ 2 இலக்குகளையும், ராம்போல், சாமுவேல்ஸ், பொலார்ட் ஆகியோர் தலா ஓர் இலக்குகளையும் வீழ்த்தினர்.

31 பந்துப்பரிமாற்றங்களில் 231 ஓட்டங்களை அடித்தால் தான் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை பெறமுடியும் என்ற இக்கட்டான நிலையில் துடுப்பாடக் களமிறங்கியது மேற்கிந்தியா. அந்த அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் ஆரம்பத்திலேயே அதிரடி காட்ட முனைந்தாலும் , நீண்டநேரம் தாக்குபிடிக்க முடியாமல் வெளியேறினர். சார்ள்ஸ் 16 ஓட்டங்களையும்,அதிரடி மன்னன் கெய்ல் 36ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.அதன் பின் வந்த துடுப்பாட்ட வீரர்கள் அனைவருமே தமது அணியை வெற்றி நோக்கி அழைத்துச் செல்ல தம்மாலியன்றவரை ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்கத்தவறவில்லை. ஆயினும் ஓட்டங்கள் குவிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேகத்துக்குச் சமாந்தரமாக மேற்கிந்திய அணி இலக்குகளையும் தொடர்ச்சியாக இழந்து கொண்டிருந்தது. ஒருகட்டத்தில் மேற்கிந்திய அணியின் ஓட்டச்சராசரி தாழ்ந்த நிலையை அடைந்திருந்த போது சாமுவேல்ஸும் பொலார்ட்டும் இணைந்து வாண வேடிக்கை காட்டி, மீண்டும் வெற்றிப் பாதையை நோக்கி அணியைப் பயணிக்கவைத்தனர். இருப்பினும் சாமுவேல்ஸ் 48 ஓட்டங்களுடனும், பொலார்ட் 28 ஓட்டங்களுடனும் களத்தை விட்டகல மீண்டும் இக்கட்டான நிலைக்கு மேற்கிந்தியா தள்ளப்பட்டது. 26.1 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்பட்ட நிலையில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் தடைப்பட்டது. இதனால் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி ஆட்டம் சமநிலையில் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.இரு அணிகளும் தலா ஒரு புள்ளிகளைப் பெற்றன. எனினும் ஓட்டச்சராசரி அடிப்படையில் அரையிறுதி வாய்ப்பை தென்னாபிரிக்க அணி தனதாக்கிக் கொண்டது. ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் இங்க்ரம் தெரிவானார். (ங-400)

MEGA OFFER ABI BABY MART MEGA OFFER
MEGA OFFER
June 30 வரை
சகல விதமான சிறார்களிற்கான ஆடைகள் விளையாட்டுப் பொருள்கள் கர்ப்பிணி பெண்களின் வைத்தியத் தேவைக்கான பொருள்கள் அனைத்தும் 10% -20% விலைக் கழிவு கொடுக்கப்படும்.
267, Brown Road, Jaffna. (சுவட்டி சந்திக்கு அருகில்)

விற்பனைப் பிரதிநிதி தேவை
யாழ். நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல்யமான தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.
தகைமை:- A/L சித்தியுடன் மேலதிக தகைமைகளாக சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவராகவும் மற்றும் கணினி அறிவும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் மேற்படி துறையில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தகுதியானவர்கள் தங்களது சுய விவரக் கோவையை விளம்பர இல: 4459, மே/பா: உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 22.06.2013 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.
நேர்முகத் தேர்விற்கான அறிவித்தல் தொலைபேசியில் அறிவிக்கப்படும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(38325)

புதிய பிரிவு ஆரம்பம்
FIT O/L உடன்
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் BIT பட்டதாரியாகும் வாய்ப்பு
By R.Kumaran-B.Sc.
74, Sabapathy Lane, Jaffna - 0776577359

Online Shopping
இதை விட குறைந்த விலையில் வாங்க முடிந்தால் நீங்கள் வாங்கும் சாறி இலவசம்.
கௌரவம் மிக்க ஆடைகளுக்கு
www.tharsfashion.com
ஆனி 2013 வெற்றியாளர்:வி.தர்சிகா, கோப்பாய்.
தொடர்பு: ப.தயாறுபன்,077 151 6013
(38333)(3.6.7.11)

Group Classes
வங்கியியல் கற்கைநெறி CBF, DBF இற்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில்
(எமது வழமையான ஆசிரியர் குழாம்)
தொடர்பிற்கு K. ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசிரியர்)
(கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அருகில்)
(38320) 0774598430

தேவை
யாழ். நகரில் இயங்கும் பிரபல்யமான நிறுவனமொன்றுக்கு வேலை உதவியாளர்கள் தேவை.
தொடர்பு: 0776669950

கணினி மலிவு விற்பனை
HP FULL SET COMPUTER
(JAPAN)
19" LCD MONITOR, DVD K/BOARD, MOUSE, SPEAKER, HEAD PHONE, WEB CAMARA\ PENDRIVE
24750/-
இவ்விலை 7 நாள்களுக்கு மட்டுமே.

St.ANTONY'S
#187, KKS ROAD, JAFFNA TOWN.
021 222 4865/ 0750698608

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Batch1 : 17-06-2013
Batch2 : 22-06-2013
Batch3 : 24-06-2013
Batch4 : 29-06-2013
Evening & Weekend Classes for Employees also available..

வெளிநாடுகளுக்கு பொதிகள், ஆவணங்கள் அனுப்பும் முதல்தர சேவை
10 கிலோவிற்கு மேற்பட்ட பொதிகளுக்கு வியப்பூட்டும் விலைக்கழிவுகள்
லண்டன்- 725/- பிரான்ஸ், ஜேர்மன்- 800/- அவுஸ்ரேலியா, டென்மார்க்- 850/- கனடா , சுவீஸ் , நோர்வே- 950/-
5 நாட்களில் உங்கள் இருப்பிடம் தேடி கொடுக்கப்படும்
யாழ், கிளிநொச்சி, முள்ளியவளை, வவுனியாவில்
பிரவீணன் என்ரபிறைசஸ் 35/1, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா
பிரணவன் என்ரபிறைசஸ் 365, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
பிரணவன் என்ரபிறைசஸ் தொண்டமான் நகர், கிளிநொச்சி
பிரவீணன் என்ரபிறைசஸ் தண்ணீரூற்று, முள்ளியவளை
தொடர்புகளுக்கு- 0773818799

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.